உ

சிவமயம்

அரிஓம் நன்றுக குரு வாழ்க குருவே துணை

இராமாயண இலக்கியம்

ஞானபாகை

இராமாயணத்தை உடல் உயிரது கூட்டு
இயக்கத்துடன் ஒப்பிடும் ஒப்பிலா நூல்



தமிழ் வேத நாவலர் வைத்தியமணி

சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை

முத்தமிழ் வேதத் திருச்சபை

உ

சிவமயம்

அரி ஓம் நன்முக குருவாழ்க குருவே துணை

இராமாயண இலக்கியம்

[ஞானபாகை]

நூலாசிரியர்

தமிழ்வேத நாவலர் வைத்தியமணி

சித.வே. ஷண்முகநாத பிள்ளை

நிறுவனர்

முத்தமிழ் வேதத் திருச்சபையார்

தேவகோட்டை

பாயிர இயற்சீர்க்கவி

நாராயணுய நம
சீராமராம அரி
மாராமராம ரம
தாராயராம யண

வெளியீடு

முத்தமிழ் வேதத் திருச்சபையார்

முத்தாத்தாள் நடுநிலைப்பள்ளி

வ.பெரி.மு. தெரு

தேவகோட்டை.

முதற்பதிப்பு : உத (2000)

விலை : ரூ உ/- (27.00)

பிரதிகள் : த (1000)

பதிப்புரிமை

முத்தமிழ் வேதத் திருச்சபையோர்

தேவகோட்டை

கிடைக்குமிடம் : **நலந்தா** புத்தகக்கடை

வடக்கு வல்லம்பர் தெரு

காரைக்குடி. ☎ 34807

email : noolmayam@intamm.com

கணினி அச்சு அமைப்பு : *ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ்*

புஷ்பவிலாஸ்,

வெளுரணி தெற்கு, தேவகோட்டை.

☎ 73347 email : swamirajbal@yahoo.com

அச்சிட்டோர் **வேல் பிரிண்டர், சிவகாசி.**

உ

சிவமயம்

அரி ஓம் நன்முக குருவாழ்க குருவே துணை

நூலாசிரியர்

தமிழ்வேத நாவலர் " வைத்தியமணி "

சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை

முத்தமிழ் வேதத்திருச்சபையை தோற்றுவித்தவர்

உ

சிவமயம்

அரி ஓம் நன்முக குருவாழ்க குருவே துணை

தாயார்
சாத்தாயி அம்மாள்

தந்தையார்
வேலாயுதம்பிள்ளை

மனைவி
தெய்வானை அம்மாள்

உ

சிவமயம்

பொருளடக்கம்

தலைப்பு	பக்கம்
காப்பு	க (1)
தோற்றப் படலம்	பக (11)
நாடிசுத்திப் படலம்	பங (13)
வாசிதாரணைப் படலம்	பசு (16)
நாடிதாரணைப் படலம்	உபக (21)
அங்கிதாரணை அமிததாரணைப் படலம்	உபசு (29)
ஒடுக்கப் படலம்	சபக (41)
மறைப்பொருள் விளக்கம்	எபஅ (78)

உ

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

முன்னுரை

இராமாயண இலக்கியம் (ஞானபாகை) என்னும் இந்நூல் நம் முன்னோர்கள் வாசித்தறிந்து வீடுபேறு எய்தியதை உணர்த்துகிறது. குறிப்பாக நம்திருமூலர் திருமந்திரத்தில் முதற்றந்திரம் உயவது கல்வி என்ற தலைப்பில்

குறிப்பறிந் தேனுட லுயிரது கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை
மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகுங் கல்விகற் றேனே.

என இயம்புகிறார், இக்கல்வி யாருக்கு எப்பொழுது கிட்டும் என எண்ணும் பொழுது அதற்கும் குறிப்பில் குறிப்புணர வைக்கும் குறியறி சித்தர் இயம்புகிறார் ஐந்தாந்தந்திரத்தில் எவது யோகம் தலைப்பில்

நெறிவழி யேசென்று நேர்மையு ளொன்றித்
தறியிருத் தாற்போலத் தம்மை யிருத்தி
சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலு மாமே.

திருமூலர் வாசிக் கலையால் குறிப்பறிந்து கறிப்பறியா மிகுங் கல்வி கற்றதை இந்நூல் தெளிவாக நமக்கு உணர்த்துகிறது. சரியை கிரியை யோகம் ஞானம் என்பதில் யோகத்தின் விளைவு காட்சியை உணரவைப்பதே இந்நூலின் தன்மை. தறியிருத்தாற்போல் தம்மை இருத்தி வாசிக்கலை பயின்று வரும் நேரத்தில் ஏற்படும் சிக்கலை நிவர்த்தி செய்து வீடுபேறு அடைய ஆக்கியது இந்நூலின் பயன். இராமாய்ணத்தில் உள்ள சிவரகசியத்தை உணர வைக்க உதவும் ஒப்பற்ற உன்னத அற்புதமான நூல்.

தூரியாதீத மூலத்தமைந்த தசநாடி தசரதர் என்றும் அறுபதாயிரம் தேவியர்கள் பிண்ட நாடி என்றும், கலை மூன்றுறுந்தானங்கள் கோசலை, கைகேகி சுமித்திரா என்றும், மனம் இராமன் என்றும், பரதன்

அகங்காரம் என்றும், இலக்குவன் புத்தி என்றும், சத்ருக்கனன் சித்தம் என்றும், பின்கலை வாலி என்றும், இடகலை சுக்ரீவன் என்றும், சுழிமுனை அனுமான் என்றும் இவ்வாறு இராமாயணத்தில் வரும் ஒவ்வொரு கதாபாத்திரமும் உடல் உயிரது கூடி இயங்கும் இயக்கத்தில் தோன்றுவது.

திருமுறைப் பெருநூல் விளக்கத்தில் சுருதி, மீச்சுருதி உபநிழலறம் என்பதில் உபநிழலறத்தில் இராமாயணம் அர்த்தபாகையாக தோன்றுகிறது.

இரத்தினச் சுருக்க இராமாயணத்தில் இராமாயணம் கர்மபாகையாக தோன்றுகிறது.

இராமாயண இலக்கியத்தில் இராமாயணத்தை ஞானபாகையாக விவரித்து வீடுபேறு அடைய தெளிவுகுரு தமிழ் வேதநாவலர் சித. ஷண்முகநாத பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்கள்.

இந்நூலின் அற்புதம் பாயிர இயற்சீர்க்கவி எட்டு சொற்களும், இருபத்தெட்டு எழுத்துக்களும், தோத்திரம், நாத்திகவேடவசை, இராமாயணத் தோற்றம் ஆகிய மூன்று பொருட்களையும் கொண்டு அமைந்துள்ளதால் எட்டுச் சொற்களுக்கு ஒன்றிற்கு ஆயிரமாக எண்ணூயிரம் சொற்களும், இருபத்தெட்டு எழுத்துகளுக்கு ஒன்றிற்கு ஆயிரமாக இருபத்தெண்ணூயிரம் எழுத்துக்களும், ஒரு பாவிற்கு மூவகைப் பொருள் அமைந்துள்ளதால் இதன் ஒருவரிக்குரிய ஏழுஎழுத்துக்களுக்கு எழு மூன்று எழுத்துக்களும், அவ்வண்ணமே ஒன்று, பத்து, நூறு என்னும் இலக்க அமைதியமையும் ரூஉரூ (333) பாவும் கொண்டு பாயிரத்திற்கு மாறுபடாமலே அமைந்துள்ளது.

இந்நூலில் நிறைவில் ரூஉரூ (345) பாடல் இருக்கிறதே என எண்ண வேண்டாம். இதில் காப்பு பதிஞென்றும் படலத்தொகுப்பு கணக்கு ஒன்றும் ஆக பனிரெண்டு. கலியின் கொடுமை தீர்ந்து தமிழின் பொற்காலம் விரைவில் வருவதற்கு ஒரு விடிவெள்ளியாக இந்நூல் இது சமயத்தில் வெளிவருவது எம் தெளிவு குருவின் நல்ஆசி என்பதை முத்தமிழ் வேதத் திருச்சபையார் மனம் கனிந்த அன்புடன் சிவபுண்ணிய சீலமெய்யன்பர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

முத்தமிழ் வேதத் திருச்சபையார்

உ

சிவமயம்

சற்குருவின் குறிப்பு

இந்த வுலகம் மக்கள் நலத்தையே எண்ணிக் கொண்டிருக்கின்ற சான்றோர்களால் நிலைத்திருக்கின்றது. தகவுடைய சான்றோர்களின் எண்ணத்தில் மாறுபாடு நிகழின் இவ்வுலகின் நிலையும் மாறுபடும் என்பது திருவள்ளுவப் பெருந்தகையார் போன்றோர்களின் வாக்கால் உணரலாம்.

அருள்நலம் மலிந்த ஞானியார்களே சான்றோர்கள் எனப் போற்றப்படுகின்றார்கள். பலப்பலநூற்றாண்டுகள் இடையீடுபட்டே ஞானியர் இவ்வுலகில் தோன்றுகின்றனர். ஞானியர்களின் தோற்றம் மாந்தரின் நல்ல தவத்தால் நிகழ்கின்றது.

தேவகோட்டை மாநகர் தக்காராம் தாழ்விலாச் செல்வர் மிகுந்த பெருநகர் ஆகும். திருமுறைத் தொண்டும், திருக்கோயில் திருப்பணியும் இந்நகரத்தார்களின் செல்வப் பெருக்கத்திற்குக் காரணமாக அமைகின்றன.

சீவசமாதியடைந்த செல்வராம் சிதம்பரனாரின் முன்னோர்களில் பலரும் பின்னோர்களில் பலரும் ஞானியர்களாய் விளங்குதல் இவர்களின் மரபு வழிப் பட்டதாகும். சிதம்பரனாரின் குடி வழி வந்தவரே சித. வேலாயுதம் பிள்ளை ஆவர். இவர்களின் இல்லத் துணைவியார் சாத்தாயி அம்மை.

சாத்தாயி அம்மா என்றால் தேவகோட்டை மக்களுக்கும், அதன் அருகில் அமைந்த நாட்டுப்புற மக்களுக்கும் நனறாக விளங்கும். அந்த அளவிற்குக் குழந்தை வைத்தியத்தில் கொடி கட்டிப் பறந்திருக்கிறது அம்மையாரின் புகழ்.

சாத்தாயி அம்மை கைபட்டாலே குழந்தைகள் பலரும் நலம் பெறுவர் என்பது பரவலாகப் பேசப் படுகின்றது இன்றும். சித. வேலாயுதம் பிள்ளைக்குச் சாத்தாயி அம்மை மணிவயிற்றில், இராட்சச ஆண்டு ஆவணித் திங்கள் உய ஆம் நாள் (20) ஞாயிற்றுக்கிழமை புனர்பூச நட்சத்திரத்தன்று நம் கலாநாயகர் தோற்றஞ் செய்திருக்கின்றார்கள்.

நம் கலா நாயகரின் சாதக அமைப்பு மீன லக்கினம். மீனத்தில் குரு மிதுனத்தில் செவ்வாயும் சனியும், கடகத்தில் சந்திரனும் கேதுவும், சிம்மத்தில் சூரியனும், சுக்கிரனும், கன்னியில் புதன், துலாத்தில் மாந்தி, மகரத்தில் ராகு.

குரு, சந்திரன், சூரியன் ஆகிய மூவரும் ஆட்சிபெற்றவர்கள். புதன் ஆட்சியொடு உச்சமும் பெற்றவர். இத்தகைய சீரிய அமைப்பில் கோள்கள் நின்ற தன்மை பெருந்தகையார் அவர் தமிழ் நான்மறைகளிலும், வேதாந்த சித்தாந்த சாத்திரங்களிலும், மருத்துவம் சோதிடம்ஆகிய கலைகளிலும், அட்டாங்க யோக சித்தியிலும் முதிர்ந்த நிலைபெற உறுதுணையாய் அமைந்தது.

"மீனத்தானே விடேல் விடேல் என்று

மோனத்தார் சொன்ன முறை" என மீன லக்கனத்தின் பெருமையைச் சான்றோர்கள் கூறுவர்.

உ

சிவமயம்

அரி ஓம் நன்முக குருவாழ்க குருவே துணை

முத்தமிழ் வேதத் திருச்சபையார்

தலைவர்
டாக்டர். சித.வே. முருகேஷ்

துணைத்தலைவர்
புலவர் க. அப்பாராசன்

நிரந்தரச்செயலர்
கா. சுப்பையா சேர்வை

இணைச் செயலர்
இராம. ஆதிரெத்தினம்

இணைச் செயலர்
கானிமுத்து

பொருளாளர்
வை. சுப்பையா

கா. மீனாட்சி சுந்தரம்



அழ. மாணிக்கம்

கனகசுப்பிரமணியன்

இசக்கியப்பன்

இராம. ஞானசம்பந்தம்

தொ. மகாலிங்கமூர்த்தி

கல்விப் பயிற்சி

திண்ணைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தவர்கள். இளமைக் காலத்தே நிகண்டு, திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களை நெட்டுருச் செய்தவர்கள். தந்தையார் முன்னிலையில் மருத்துவ நூல்கள் பலவற்றைப் படித்து மனனஞ் செய்தவர்கள். சித்தர்கள் நூல்களில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்கள். திருமந்திர உருவமாகவே திகழ்ந்தவர்கள். சோதிடக்கடல் என்றே சொல்லப்படும் தகுதி பெற்றியுடையவர்கள். ஓவியம், நகாசு ஆகிய இவைகள் பெருந்தகையார் அவர்களுக்கு கைவந்தகலை. ஞானத்தின் திருவுருவாய் ஞானசம்பந்தர் விளங்கியது போல ஐயன் கலைகளின் உருவமாகவே விளங்கியிருக்கிறார்கள். கேட்கின்றவர்கள் திடம் உடையவராயின், தாம் உணர்ந்த கலைகளை அடிபிறழாமல் காலவரையின்றிச் சொல்லிக் கொண்டே இருக்கும் வளம் உடையவர்கள்.

பெருந்தகையார் இயற்றிய நூல்கள்

உயிர்நிலைக்கலை இலக்கணம்	மருத்துவம்
உரோகநிவாரணத் தொகுதி	மருத்துவம்
அகத்தியம்	கலாந்தம், இயல், தத்துவம்
பண்ணிலக்கணச்சூக்கம்	இசைப்பகுதி (நாதாந்தம்)
திருமுறைப்பெருநூல் விளக்கம்	நான்கு வேதம், வேதாந்தம், சித்தாந்தம்
இரண்டாந் திருமுறை விளக்கம்	பூர்வ மீமாம்சை
மூன்றாந் திருமுறை விளக்கம்	உத்தர மீமாம்சை
இராமாயண இலக்கியம்	யோகாந்தம்
முத்திநெறி விளக்கம்	போதாந்தம்

ஞானசம்பந்தர் காலநிர்ணய விளக்கம் வரலாறு

பத்ம புராணம், இலிங்க புராணம், பிர்மாண்ட புராணம், வாமன புராணம் இன்னும் பல நூல்கள் பெருந்தகையாரின் இல்லத்தில் கோயில் வீட்டில் இருக்கக் கூடும்.

நம் கலாநாயகர் மருத்துவத் தொழிலுக்கு ஒதுக்கிய நேரம் குறைவு நூல் எழுதுவதற்கு எடுத்துக் கொண்ட நேரம் மிகுதி. வீச விநாடியையும் அவர்கள் வீணாக்கியதில்லை. தாம் அட்டாங்க யோக சித்தி பெற்றதோடு, தம் இளவல் சித.வே. முருகேசனுரையும் யோக நிலையில் நிலைநிறுத்தி உள்ளார்கள்.

பெருந்தகையார் அவர்கள் சிறந்த முதனூல் ஆசிரியரும் ஞானசிரியருமாகத் திகழ்ந்துள்ளார்கள். எம் சற்குருநாதப் பெருந்தகையார் தோற்றுவித்த முத்தமிழ் வேதத்திருச்சபை தேவகோட்டை முத்தாத்தாள் நடுநிலைப்பள்ளியில் இன்றும் நடைபெற்று வருகின்றது.

நம் கலா நாயகர் இயற்றிய இராமாயண இலக்கியம் என்னும் யோகாந்த நூல், குழவிக்கு மனந் தோன்ற நிலையிலிருந்து தொடங்கி ஆன்மா சமாதியடையும் நிலைவரை விளக்குந்தகையதாகும்.

இந்த அருள் நிதிக்குவியலையெல்லாம் நன்கு உணர்ந்து பயன் எய்த வேண்டியது மாந்தரின் கடமையாகும். தமிழ்வேத நாவலர் அவர்களின் வரலாற்றினை விரிவாக எழுதும் போது பலவகை நிகழ்ச்சிகளையும் விரிவாக எழுத இருக்கின்றேம்.

இங்ஙனம்
மாணவன் புலவர் **க. அப்பாராசன்**
அப்பர் அலை களிமேடு, தஞ்சை.

உ

சிவமயம்

அரி ஓம் நன்முக குரு வாழ்க குருவே துணை

நன்றியுரை

நூல் அச்சிட பொருள் உதவிய
பெரியவர் உயர்திரு.
டாக்டர் சித. ஏகப்பன் செட்டியார் அவர்கள் கனடா

முத்தமிழ் வேதத்திருசபை 22வது (உயஉ) ஆண்டு நிறைவு விழா சிவபுண்ணியசீலர் திரு.பழ.சோம. கைலாசநாதன் செட்டியார் அவர்கள் தலைமையில் 24.8.99 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி அளவில் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதுசமயம் தங்களின் பரம்பரையின் உயிரே தேவாரம் என வாழ்ந்து கொண்டிருக்கின்ற திரு.மு.வீ. செம்பொன் அருணாசலம் செட்டியார் அவர்கள் சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்திய நேரம் தமிழ்வேத நாவலர் சித.வே. ஷண்முகநாத பிள்ளை நூலாகிய கரண இலக்கணம் விரைவில் அச்சு பதிப்பிக்கப்படும் என்றார்கள். அதற்கு எங்களது முதற்கண் நன்றி. அது சமயம் கனடாவில் இருந்து வந்த திரு. டாக்டர் சித. ஏகப்பன் அவர்கள் எங்களை சந்தித்து குருநாதருடன் ஒரு சமயம் பேசுகையில் இராமாயண இலக்கியம் என்ற நூலை வெளியிட வேண்டும் என்று கூறினார்கள். அந்நூலை இப்பொழுது அச்சுப்பதிப்பிக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று திருவாய்மலர்ந் தருளினார்கள். இந்நூல் வெளிவர பெரும்பொருளுதவிய சிதம்பரம் செட்டியார் அவர்கள் மகனும், கரு. முத்தையா செட்டியார் மருமகனும் ஆகிய டாக்டர் சித. ஏகப்பன் அவர்கள் குடும்பத்தாருக்கு எங்களது மனமார்ந்த நன்றி. எங்களுக்கு நூல்பதிப்பு ஆரம்பம் முதல் நிறைவு வரை உதவி செய்த நலந்தா பதிப்பகத்தார் திரு. ஜம்புலிங்கம் அவர்களுக்கு நன்றி. நல்லமுறையில் என்றும் நிலைத்து இருக்கின்ற தமிழ் எழுத்துக்களை எங்கள் விருப்பத்திற்கேற்ப பொறுமையாக கணினி மூலம் நூல்வடிவமைத்து தந்த ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ், புஸ்ப சுவாமிநாதன் குடும்பத்தாருக்கும் நன்றி. இந்நூல் விரைவில் வெளிவர வேணுமாய் வேண்டிக் கொண்ட அன்புள்ளங்கள் அனைவருக்கும் எங்களது முத்தமிழ் வேதத் திருச்சபையார் சார்பில் நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
தலைவர். டாக்டர். சித.வே. முருகேசஷ் R.I.M.P., A.M.I.H
புதுக்கோட்டை.

உ

சிவமயம்

அரிஓம் நன்முக குருவாழ்க குருவே துணை

இராமாயண இலக்கியம்

காப்பு

கட்டளைக் கலித்துறை

திருகுச் சுழியாஞ் சிவமயச் சாவி திறந்துசெலத்
தருவா யெனமலை யேறியே தீப தரிசனஞ்செய்
தொருவழி யாய்வந்து தாழவோங் காரக்காப் புண்மணையி
லிருளறச் செல்ல வருளிறை காப்பா மினிதுறவே (க)

வடமலை சென்றலர் மேன்மங்கைத் தாயார் வரமருள
நடந்து தணிகையுற் றேதென் குமரியை நண்ணியெழுந்
திடவவர் காயந் திரமுறு காருய்த் திகழ்முகமா
றிடத்திலுங் காட்டி யருள்குரு வின்ரு ளிணைதுணையே. (உ)

அன்னம் பொலிய வடுப்பெரி மூட்டியே யாறுபதத்
தின்சுவை பாக மறியு மடையரே ழேழினிசை
யின்நடங் கண்டு துயில வணைந்தே யிதழமிதந்
தன்னை யருத்துஞ் சரஜோதி புத்தகந் தாவெமக்கே (ங)

பரமேச் சுரஞுதி யாய நவசித்தர் பாதநமோத்
தரன்மக ஞுதியா மொன்பது சித்தரவர்க்கு நமோத்
துரன்மிக்கு மன்னவர் தம்மர பாயெங்கு முற்றகிலம்
பரவ நிறைந்துள்ள நாதாக் கடங்கன் பதநமத்தே (ச)

எத்தனை யோவித மான கலைக ளெலா முணர்ந்த
வித்தக ரோங்கு மவனியிற் சித்தாய் விளங்குகலை
யொத்தையுட் கொண்டோ ளொரு பேரிலக்கிய மோதுசெயல்
சித்தன் மொழிப்பிழை மேலோர்க ணைக்காத் திறமுணர்ந்தே (கு)

ஏழ்கடன் மாநிலம் வாழுயிரோங்க விறையவன்கோல்
தாழ்வின்றிச் செல்லவான் மாரி வளமிக்க தாய்ப்பொழிய
வூழ்வென்று முத்தமி ழோங்க மறைநான் குயரவறம்
வாழ்க வென்றுந் சித்த நீதிமே லோங்க விவ்வையகத்தே (சு)

பாயிரம்

அருட்குரு நாத னெதிராங் கிராத னறிவுபெற்று
வருந்த மகார வடிவான வாசிரா வாம்பதமா
யிருக்கு மறைசொல வவ்வா றிசைக்க விசைக்கவுமக்
குருமொழி ராம வெனவாய்ச் சமாதியிற் கூடிடவே (எ)

கூடின காலங்கள் மேனிமறையக் குவிந்து புற்று
மூடின வுள்நின் றெழுந்தவான் மீக முனிவெளியில்
நாடின போதன்றி லாம்வாசி கோறல்செய் நாத்திகனைத்
தூடினஞ் செய்யரா வாங்காலின் மாயணந் தோன்றியதே (அ)

தோன்றிய வான்மீகி ராமா யணப்பேர்ச் சுருதியதைத்
தேன்றமி ழாற்கம்ப நாடனீந் தான்முனி செப்புமுயர்
நூன்முறை வெற்றறி வோராற் சிதைந்தது நுண்மையொடு
மேன்மை யறியா துபொய்யென்று வீணர்விளம்பினரே (கூ)

விளம்பினர் பல்வகை மாறு படுதர்க்க மீதறிந்தக்
களங்கற வெந்தப் பிழையு மிலாததாங் கந்தமெனுந்
தளமெட்டா தாரப் புராண மிருக்கச் சகமறியும்
வளமிக்க ராமா யணத்தின் னிலக்கிய மாக்கினமே (ஏ)

ஆக்கினேன்' ஷண்முக நாதனென்னூலை யறிந்தவர்கள்
மேக்கதி பெற்று நரைதிரைநோய் மூப்பும் வீதலற்றுப்
பாக்கிய வான்களாய்ச் சத்திய ஞான பரமுணர்ந்து
மோக்கமா மீறிலா வீடெய்திச் சித்தாக வோங்குவரே (ஙக)

பாயிரம் முற்றிற்று

****

சிவமயம்

அரிஓம் நன்முக குருவாழ்க குருவே துணை

இராமாயண இலக்கியம்

காப்பு

திருகுச் சுழியாஞ் சிவமயச் சாவி திறந்துசெல
தருவாய் எனமலே யேறியே தீப தரிசனஞ்செய்
தொருவழி யாய்வந்து தாழவோங் காரக் காப்புண்மனேயி
லிருளறச் செல்ல வருளிறைகாப்பா மினிதுறவே (உ)

"திருநெறியான திருகு" என ஆகமத்திற் கூறியதான சுழிமுனையைப் பற்றிக் கபால வரையிற் சென்று, மேல் மண்டலத் தொளிவிளக்கங் கண்டு பிடரி மார்க்கமாய் மூலத்தை சார்பவர்களுக்கு ஓங்கார பந்தனத்தை நீக்கி, ஆறுதார மண்டலத்தூடு போய் நிலேபெறுதற்குரிய சுழிமுனை சாவியைத்தந்தருளும் காப்புக் கூடவுள் காப்பாக நன்மையெய்துக இது ஞானபாத சோபான உரை.

மலேயேறி தீபதரிசனஞ் செய்து வேறுஒரு வழியால் மலேயினின்று கீழிறங்கி விநாயகரைப் பணிந்து வீடு பேறடையவும். விக்கினம் நீங்கவும் வேண்டுதல் யோக ஞானக் கிரியா பாத சோபானஉரை மலேயே கபாலவரை. தீபதரிசனமே-மேன் மண்டலத் தொளி, ஏறிய வழியில் இறங்காமல் வேறு ஒருவழியில் இறங்குதலே-பிடரிமார்க்கமாய் மூலாதாரத்தைச் சார்தல். கணபதியை வணங்குதலே ஓங்காரபந்தனத்தை நீக்கி மேன்முகமாக ஆதார மண்டலங் கடந்து வீடு பேறடையவுள்ள தடைநீக்கம் பெறுவதற்குக் காப்புபெறுதல் என அறிக.

கலேஞன் கலேநூலிற்கு முதலிற் பிள்ளேயார் சுழியும் பின்னர் சிவமயமும் எழுதுதல் இதுவேயாம் என்பது யோக ஞானக் கிரியாதிச் சரியையாம் அர்த்தபாதச் சோபானக் கலேகுறிப்புரைவிளக்கம் வருமாறு.

கபாலவரையுச்சியே நூற்றலேப் பக்கத்து உச்சி சுடர் மண்டலத் திலங்கும் சுழிமுனையே-சுழியும் முனையுமாய் எழுதும் பிள்ளேயார் சுழி பிடரி வழியாய் மூலத்தைச் சார்ந்து ஓங்காரபந்தனத்தை நீக்கி வீடு பேறடைந்து அவனே தானுய் விளங்குதலே சிவமயம் என வுணர்க. இவ்வாறுக எழுதும் முறை மக்களினத்தில் மட்டும் இல்லே. கலேமகள் நாதன் செய்யும் தொழிலினும் உண்டு. அதுதான் தலேயிற்சுழியாய் விளங்குவதும் அதன் அடிப்பாகம் இயக்கங் கொள்ளலும், சுழி இருக்க வேண்டியதானம் உச்சம். தலேக்கு மேற்கையைக் கூப்பலாம். தலேயையும் காலேயும் ஒன்றுய்ச் சேர்க்கலாம். அப்படிச் செய்ய உச்சம் வேறுபடும் ஆகையால் அவ்விடத்திலும் சுழி துலங்க வேண்டும் என்றும், இல்லேயேல் தெய்வீக மரபு கெட்டுவிடும் என்றுங் கருதியே, கைவிரல் நுனியிலும் கால்விரல் நுனியிலுங் கூடப் பிரமன் படைத்துள்ளான். சரீர அவயவத்துச்சியிலும் சுழி, அதன்கீழ்ச் சீவமயமாம் சிவமயம். தலேக்கு மேலுள்ள அண்டவெளியிலுஞ் சுழி அதற்குக் கீழ்தான் சீவமயம் நிரம்பிய சிவமயமான உலகம். நாத்திகளுக இருந்தாலும், நாங்கள் வேறு மதம்

என்று மதம் பேசினாலும் அவன் தலேயுச்சியிலும் அவன்தலேக்கு மேலுள்ள அண்ட வெளியிலும் சுழியே தானிருக்கிறது. அதன்கீழ் தான் சீவமயமான சிவமாக அதனுடன் ஒன்றி அவன் இருக்கிறுன் என்றுணர்க.

வடமலே சென்றலர் மேன்மங்கைத் தாயார் வரமருள
நடந்து தணிகையுற் றேதென் குமரியை நண்ணியெழுந்
திடவவர் காயந் திரமுறு காருய்த் திகழ்முகமா
றிடத்திலுங் காட்டி யருள்குரு வின்ரு ளிணேதுணேயே. (உ)

வடக்கு தெற்கு ஆகிய திசைகளிரண்டிலும் முறையே மலேயாகவும் கடலாகவும் உள்ள நிலேயத்தின் மேல்நடை கொண்டு பணிந்து அலர்மேல் மங்கைத் தாயாகிய பூவிருந்த வல்லியருளால் நிமிர்வுற்ற காலேயில் அவர்கட்கு ஆறு இடங்களிலும் ஆறுமுகமாய்க் காட்சியளித்துக் காயசித்தியையும் அருளும் ஒரு பொருளாகிய குருநாதனின் திருவடிகளே துணேயாக வாகுக. இது ஞானபாத சோபானவுரை.

வடமலே சென்றுஅலர் மேன்மங்கையாம் பூவிருந்த வல்லியருள் பெற்றுத் தணிக்கை யெய்தியபின் தென்குமரித் துறைபடிந்து எழும் அவர்களுக்கு குன்றுதோறுடல், திருவேரகம், திருவாவினன்குடி, திருப்பரங்குன்றம், திருச்செந்தில், பழமுதிர்சோலே ஆகிய ஆறு தலங்களிலும் ஆறுமுகமாய்க் காட்சியளித்துக் காயசித்தியாம் வண்ணம் அருள்செய்யும் குருநாதனின் திருவடியே துணே. இது யோக ஞானக் கிரியாபாத சோபானஉரை.

வெள்ளிடை மலேயாய்த் திகழ்தரு வடமொழியின் வரையறை யுணர்ந்து, ஆழ்கடல் நதியெனத் திகழும் தென்மொழியைக் கரை கண்டுள்ளந் தெளிந்தோர்கட்கு ஒலியை (யுடம்பாகவாக்கிக் காணும்) யுடம்பாகவாக்கிக் காணும் வித்தகத்தை யருளும் சண்முகதூலமாம் கனி, மலர், காய், மா, விளம், நாள் (எனும்) ஆகிய ஆறுமே துணேயாம். இதுயோக ஞானக்கிரியாதிச் சரியையாம் அர்த்தபாத சோபானக் கலேக் குறிப்புரை. எவ்வாறெனின் ? வடமலேயே வெள்ளிடையாய்த் திகழ்தரும் வடமொழி. அம்மலேமேல் செல்லலே வரையறையுணர்தல்.

பூவிருந்த வல்லியருள் பெறலே நாதாந்த விளக்கமறிதல், நடந்து தணிக்கையுற்றுத் தென்குமரியை நண்ணியெழுதலே, ஆழ்கடல் நதியெனக் காணும் தென்மொழியைக் கரை காணல், அவர்காயந் திரமுறுகாருய்த் திகழ்முகம் ஆறிடத்திலும் காட்டிக் குருநாதன் அருள் செய்தலே சண்முக தூலமாம் கனி, மலர், காய், மா, விளம், நாள் ஆகிய ஆறுதலேப்பால் நாதாந்த விளக்கங் காட்டி மறைநூலுணர அருள்புரிதல் எனவுணர்க.

அன்னம் பொலிய வடுப்பொரி மூட்டியே யாறுபதத்
தின்சுவை பாக மறியு மடையரே ழேழினிசை
யின்னடங் கண்டு துயில வணேந்தே யிதழமிதந்
தன்னே யருத்துஞ் சரசோதி புத்தகந் தாவெமக்கே. (ங)

ஹம்ஸம் என்ற ஒலியுடன் வெளியிற் பறந்துலவும் வாசியானது பொற்புறும் படியாக மூலாக்கினியை வளரச்செய்து நிலாமண்டலத்தளவு எழுப்பி அந்தச் சந்திரகலாமிதத்தைப் பெருகச் செய்து, நாதாந்த நடனத்திற்றிளைத்து அவசமுற்றுச் சொக்கி நிற்பவர் பாலணைந்து ஆயிரத்தெட்டிதழ்க் கமலத் தேனை யருத்தி யருளும் சரத்தின் சோதியாய் விளங்கும் சரசோதியே ! புத்தகத்தை புதுமையாகிய அகத்தோற்றத்தை எனக்குத் தந்தருள்வாயாக. இது ஞானபாத சோபானவுரை.

அன்னமானது பொங்கி பொலிவுறும்படியாக அடுப்பிற்கட அக்கினியை மூட்டி, ஆறிற்பதம் பார்த்து இனிதான சுவைபாகமடையச் செய்து கீத நிருத்தங் கண்டு, மடைப் பள்ளியிற்றுயில்பவர் பாலணைந்து வாயமுதருந்தச் செய்யும் சரசோதியே புத்தகந் தந்தருள் வாயாக. இதுயோக ஞானக் கிரியா பாத சோபானவுரை. இதன்விளக்கம் வருமாறு.

அம்சம் என்னும் ஒலியுடன் வெளியிற் பறந்துலவும் வாசி பொற்புறும்படி செய்தலே அன்னமானது பொங்கிப் பொலிவுறும்படி செய்தல், மூலாக்கினியை எழுப்பி வளரச் செய்தலே கட அக்கினியை மூட்டுதல் செய்து எரிவளர்த்தல் ஆறுதாரங் கடந்து சந்திரகலா அமிதம் பெருகச்செய்தலே-ஆறிற்பதம் பார்த்துச்சுவைபாகம் அமைத்தல். நாதாந்தத்திற்றிளைத்து அவசமுற்றுச் சொக்கி நிற்றலே-கீத நிருத்தங்கண்டு மடைப்பள்ளியிற்றுயிலல். ஆயிரத்தெட்டிதழ்க் கமலத்தமுதையருந்தச் செய்தலே சரசோதித் தாயருளாலே துயில்பவர் பாலணைந்து இதழமுதருந்துதல்-சிந்தையில் புதுமைத் தோற்றம் பெற ஞானமூர்த்தியை வேண்டுதலே சரசோதித் தாயிடம்புத்தகம் வேண்டுதலாம் எனவறிக.

சத்தப் பிரபஞ்சமென்னும் ஒலிமண்டலாகாரவிரி முதிர்வை அன்னமாகவும் அவ்வன்னமடைய அம்தீபூக்கும் குமுதமாகவும் அதினெழு நாவுடைய அறுபதம் இனிதே சுவை கொள்ளவும், அதன் நடனத்தால் ஏழேழு இசைதோன்றவுங்கண்டு இல்லாதுஇல் என்னும் துயில்கொள்பவர் பாலணைந்து இதழமுதளிக்கும் சரசோதித்தாயே எனக்குப் புத்தகந் தருவாயாக.இது யோக ஞானக் கிரியாதிச் சரியையாம் அர்த்தபாதச் சோபானக்கலைக் குறிப்புரை, எவ்வாறெனின் ஒலிமண்டலாகார விரியே ஆரியம். அதன் எல்லையற்ற தன்மையை அறிந்து, அதை அன்னமாக வாக்குதலே அகரம் முதல் னகரமீறுகஒலிக் கூட்டம் அனைத்தும் அமையச் செய்தல். அவ்வன்னம் அமையும் குமுதமே உத்தான அபாதமாம். இனவெழுத்து அதிற்சஞ்சாரம் எழுநாவுடைய அறுபதமும் அதன்இன் சுவையுமே இனவெழுத்துக்களாறும் அதன் இன்சுவையாகிய நாதமும் அதன் நடனத்தெழும்ஏழேழு இசையே ஏழேழு நாற்பத்தொன்பது எழுத்துகள். துயில் கொள்பவர் பாலணைந்து இதழமுதளித்தலே ஒலிஎழு வகைக்குள் அடங்கும். அந்த எழேழு உறழ்ச்சியால் உண்டாகும் நாற்பத்தொன்பது ஒலிக்கு அன்னியமாய் எந்த ஒலியும் இல்லையென்று காணுந்துயில், அவர்க்கிதழமுதளித்தலே வாக்கிற் சொல்நயந் தோன்ற

அருளல். இவ்வமைப்பு சரத்தின் சோதியைக் கண்டு தரிசித்துப் புத்தகம் பெற்ற ஒருவரே செய்யற்குரியவர். ஆகையால், ஈண்டு இராமாயண இலக்கியம் வகுத்தற்கு ஞானமூர்த்தியைத் தியானிக்கப் பெறுகிறது என்றுணர்க.

இதை நுணுகி ஆராய்பவர்களுக்கு வீடு பேறடையும் சாவித்திரி–யைத்தரும் திரமுள்ள சாவித்திரியும் காயம் திரமுறச் செய்யும் காயத்திரியும், ஞானமூர்த்தியாய் விளங்கும் சரச்சோதியாகிய சரசோதியுமாகிய சக்திகளே கணபதியும் முருகவேளும், சரஸ்வதியுமாக அமைந்துள்ளமை தோன்றும்.

பரமேச் சுரஞுதி யாய நவசித்தர் பாதநமோத்
தரன்மக ஞதியா மொன்பது சித்தரவர்க்கு நமோத்
துரன்மிக்கு மன்னவர் தம்மர பாயெங்கு முற்றகிலம்
பரவ நிறைந்துள்ள நாதாக் கடங்கன் பதநமத்தே (ச)

அவையடக்கம்

எத்தனை யோவித மான கலைக ளெலாமுணர்ந்த
வித்தக ரோங்கு மவனியிற் சித்தாய் விளங்குகலை
யொத்தையுட் கொண்டோ ளெருபே றிலக்கிய மோதுசெயல்
சித்தன் மொழிப்பிழை மேலோர்க ணேக்காத் திறமுணர்ந்தே. (கு)

வாழ்த்து

ஏழ்கடன் மாநிலம் வாழுயி ரோங்க இறையவன்கோல்
தாழ்வின்றிச் செல்ல வான்மாரி வளமிக்க தாய்ப்பொழிய
ஊழ்வென்று முத்தமி ழோங்க மறைநான் குயரவறம்
வாழ்கவென்றுஞ் சித்தர் நீதிமே லோங்க இவ்வையகத்தே. (சு)

* * * * * * * * * * * * * * * * *

சிவமயம்

பாயிர இயற்சீர்க்கவி

நாராய ணைய நம
சீராம ராம அரி
மாராம ராம ரம
தாராஅ ராம யண.

இராமாயண இலக்கியப் பாவின் ஆயிரமாம் பாயிரமென்னும் சாகாத்திறம் மலிந்த சகத்திரமாகவுள்ளது. நாராய ணைய நம சீராம ராம அரி, மாராம ராம ரம தாராஅ ராம யண என்னும் இயற்சீர்க்கவி நரன் தெய்வத்தன்மையின் இழிந்தவன். நாரா-தெய்வத்தன்மையின் இழிந்தவனே! என்னும் இகழ்ச்சி விழி, அயண அய அண பக்கமாய் நெருங்கும் ய-பத்து அது இரண்டு அஞ்சு ஒன்றுயது. இரண்டு அஞ்சு ஒன்றுயதே கூஉ அஞ்சு, அது அம்விகுதி பெற்றுக் கவுஞ்சம் என்றுகும். கவுஞ்சம்-அன்றிலுக்கு, நம-நமனே நாராயணைய நம-தெய்வத் தன்மையின் இழிந்தவனே, பக்கமாய் நெருக்கங் கொள்ளும் அன்றிற் பறவைக்கு நமனையவனே சீ, என்று அன்றிற் பறவை ஒன்றின் மீது அம்பு விடுத்துக் கொன்ற வேடனை வையத் தொடங்கியதும் கோபம் தவத்தோர்கள் அநுசரிக்கத்தகாத வொன்றுயிற்றே, என்று அதை சாந்தப் படுத்திக்கொள்ள ராம ராமஅரி என்று தாரகமந்திரத்தை யோத மா-ராம-ராம சிறப்பு மிக்க தான ராம ராம என்னும் மந்திரம் ரம ரம என்று குறுகி யுள்ளடங்கிய காலையில், ஆரா-அரன் உமையை பிரிந்துள்ள மிகுதிப்பாட்டியலைக் காட்டும் "அர" என்னும் மொழியின் நெடில். அரன்சத்தியின்றி (ஒன்று இரண்டாய்) இருந்த காலையில் இடறேற்பட அரா உமா அயணம் அரா-அரனை உமாஅயணம்-உமையாள் பக்கங்கொள்ள இரண்டொன்றுக ஆய நிகழ்ச்சி மனக்கண்முன் தோன்றியது. இவ்வேடன் செய்தது போலவே ஒன்றிரண்டான காலையில் (அப்பனை அம்மை பிரிந்திருந்த காலையில்) இராவணன் தன் வலிமையைச் செலுத்தினன். இரண்டொன்றுயது. அம்பிகையோடி அரனைத் தழுவிக் கொண்டாள். இராவணன் வழியிழந்து தவித்தான். அப்பொழுது அவன்உய்வு பெற ஒருவர் வழி சொன்னர். அவ்வாறு செய்து அவன் உய்வு பெற்றான். ஆயினும் அதே செயற்பாட்டாலேயே அவனுக்கு அழிவு நேர்ந்தது. அதுதான் இராமாயணம். என்ன இது?! நாம் வனவேடனை வையத் தொடங்கினால் அது இராமாயணம் ஆகிறதே! ஓகோ! இது இறைவன் உள்நின்று நம்மை இராமாயணம் செய்து ஆத்திகத்தை நிலை நிறுத்தத் தூண்டுகிறார் போலும் என்று உள்ளுணர்வு தோன்ற, அந்தவசை மொழியையே வைத்து ராமாயணம் ஆக்கப்பெறுகிறது அந்த தோற்றுவாய் மொழியே மேற்கூறிய இயற்சீர்க்கவி. அதுவே இராமாயணத்தின் பாவிற்கு ஆயிரம் என்னும் பாயிரம் ஆம் சாகாத்திரம் மலிந்த சகத்திர மொழி.

இந்தப் பாயிரக்கவி எட்டுச் சொற்களும், இருபத்தெட்டு எழுத்துக்களும், தோத்திரம், நாத்திக வேடவசை, இராமாயணத் தோற்றம் ஆகிய மூன்று பொருட்களையும் கொண்டு அமைந்துள்ளதால் எட்டுச்சொற்களுக்கு ஒன்றிற்கு ஆயிரமாக எண்ணுயிரஞ் சொற்களும், இருபத்தெட்டு எழுத்துகளுக்கு ஒன்றிற்கு ஆயிரமாக இருபத்தெண்ணுயிரம் எழுத்துக்களும், ஒருபாவிற்கு மூவகைப் பொருள் அமைந்துள்ளதால் இதன்ஒரு வரிக்குரிய ஏழு எழுத்துக்களுக்கு எழுமூன்று எழுத்துக்களும் அவ்வண்ணமே ஒன்று பத்து நூறு என்னும் இலக்க வமைதியமையும் நூமுஉ(333) பாவுங் கொண்டு பாயிரத்திற்கு மாறு படாமலே அதைத் தலைமை யுரையாகக் கொண்டு அமைந்துள்ளதால் இராமாயண இலக்கியத்திற்கு முகவுரையும் ஆயிற்று.

நான் செய்யத் தொடங்கியது நாத்திகக் கண்டன நிந்தனை. அதிற்றேன்றியது இராமாயணமாகிறது என்னின் அதை நோக்கும் போது என் கண்முன் நாத்திகச் செயல்நிகழச் செய்வித்ததும், அதைக் கண்ணுறும் என்னைச் சினங்கொள்ளும்படி செய்வித்ததும், அச்சினம் ஆறுமல் வசைமொழியச் செய்வித்ததும், ஆறுவதாக அச்சினத்தை யாக்கத் தாரக மந்திரம் ஓதியகாலையில் அது இராமாயணம் ஆயதை எனக்கு உணர்வித்ததும் எனது புத்தித் தெளிவல்ல. என்னைத் தன்வயமாகச் செய்து கொண்டுள்ள முதற்பொருளின் செயலேயாகும் எனக் காண்பது அந்தக் கவியிற் பதிந்து காணும் அகவுரையாம் பதிகவுரை யென்றுணர்க.

தவமிக்கவரே தலையாய வேடர் அவமிக்கவரே அதிகொலைவேடர் என்றும்,

" அன்னம் இரண்டுள ஆற்றங் கரையினிற்
துன்னி யிரண்டுந் துணைபிரி யாதன்னந்
தன்னிலை அன்னந் தனியொன்ற தென்றக்கால்
பின்னை மடவன்னம் பேறணு காதே" என்றும்

'மரா என்று சொல்லாமல் அதற்கெதிர்மறையாக அமராஎன்று சொல்லிய வரலாற்றை

" தாங்கிய இருபது தோளும் தடவரை
யோங்க எடுத்தவ ஞெப்பில் பெருவலி
யாங்கு நெரித்து அமரா வென்றழைத்தபின்
நீங்கா வருள்செய்த நின்மலன் தானே" என்றும்

ஆகமநூல் முறையில் ஆமோதித் துரைத்தது இவ்விராமாயணநூன் முகத்ததேயாம் எனவுணர்க.

இது முன்பு கூறிய பொதுப்பாயிரத்திற் கண்ட அவினயனர் உரை, நற்றத்தவுரைக்கு மாறுக முரண்கொள்கிறது. அதில் வாசியையே அன்றிற் பறவையென்றும் அவ்வாசியை அழிக்கும் செயற்பாடுள்ளோரே வேடர் என்றும், அவரை நிந்தித்து மெய்ஞானநூலூதிச்சாதன விளைவிற்குச் சரியாக

இயைபுசெய்த யோகாந்தச் சிவ ரகசியச் சரியையே இதுவென்றும் சொல்லி முடித்த பின் மீண்டும் கவுஞ்சவதவேட நிந்தனை, ராம நாம சாந்தி ராமாயணத் தோற்றுவாய் முதலியவற்றை நிகழ்ச்சியாகவே கூறுவது கூறியது கூறிலும், மாறுகொளக் கூறலும் ஆம் என்ன வேண்டாம். மெய்ப் பொருட்டோற்றம் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்னும் நால்வகையிலும்நிகழும் தன்மையுடையது. சூக்கத்திற்கு ஆதீதப்பட்ட அதிசூக்குமமென்னும் அகத்தின் நிகழ்ச்சி சூக்குமமென்னும் அகப்புறத்திற்றேன்றும், அது காரணமென்னும் புறத்திற்றேன்றும் அது தூலமென்னும் புறப்புறமாய்த் தோன்றி உலகிற்கு உணர்வூட்டும். இவ் -வகையில் இறைவன் குருவாய்வந்து உபதசமளித்தது அகம், அந்த சாதனசித்தி பெற்றுச் சமாதியில் நின்றது அகப்புறம். அந்தச் சமாதி நிட்டைக் கலைந்து வெளிநோக்கம் நோக்கங் கொண்டது புறம். இதுவரையில் உள்ளவற்றையே முன்கூறினேம். இவ்வாறுன உள் -நிகழ்ச்சியைப் புறப்புறமாக உலகிற்குக் காண்பித்து உய்வுபெற இறைவன் அருளியதை ஈண்டு கூறினேம். ஞானநூபூதி, ஞானநூபூதிச் சாதனவிளவு, ஞானநூபூதிச் சாதன செல்வரின் உலகநோக்கு ஆகிய மூன்றேடு மட்டும் நாம் நிறுத்தினால் இராம ராவணுதிகள் சரித்திர நிகழ்ச்சியே இல்லையென்றாகி விடும். இராம இராவணுதிகளின் சரித்திரத்தைக் கூறியே அதற்குச் சரியாக இயைந்த சரியையாக நாம் ஞானநூபூதிச் சிவரகசியஉரையைச் சொல்லுகின்ற படியால் கூறியது கூறலோ, மாறுகொளக் கூறலோ இல்லை. அகம், அகப்புறம், புறம் ஆகமட்டும் முன்பு கூறியதால் அது பொதுப் பாயிரமாயிற்று. புறப்புறமாக நிகழும் வெளிநிகழ்ச்சியையும் கூறியபடியால் இது சிறப்புப் பாயிரமாயிற்று என்றுணர்க. இது ஐயப்பாடுற்றுக் கூறும் எதிர்மறையை நாமே தந்து உரை கூறித்தெளிவித்த தந்துரையாம்.

நிதியின் பெருவலிமையைத் தனதாய்க் கொண்ட நீரினிடமாகவுள்ளவனே! நம என்னும் மறைமொழியினுருவனே! ஸ்ரீ ராம ராம அரி திருராம ராம ரம என்னுங் கலையிரண்டாகி, இவ்விரண்டும் ஒன்றுய்க் கூடிய அரா உமா அயணம் ஆனவனே அலையுருவக் கடலுருவ ஆண்டகை தன்னீண்டுயர்ந்த தோத்திரமாகப் பாயிரமுதல் தந்துரை ஈறுக அமைந்த ஐந்துரைகளையும் அகத்தே கொண்டு மிளரத் தோன்றுவது புறவுரையாம்.

முருகப்பெருமான் திருவருட்பேற்றுற் கிடைத்த 'ம' 'ரா' வாக இருப்பதையுணர்ந்து அந்த 'ரா' 'மா' ஆக ஆகும்படி செய்து பார்க்கும் போது அது ராமா அயணமாக அதை எல்லோரும் பெற்று பயனடையவும் நாத்திகம் அழிந்து ஆத்திகம் தழைக்கவும் வேண்டி இராம, இராவணுதிகள் சரித்திரத்திற்குச் சரியான இயைபுள்ள சரியையாகப் புனைந்துரைக்கப் பெற்றதாகச்சூத்திரம் அமைந்தன காண்பதே புனைந்துரையாம்.

சிவஞானநூபூதி, சிவஞானநூபூதிசாதனம், சிவஞானநூபூதிச் சித்தி, சிவஞானநூபூதிச் சாதனச் சித்தரின் முன்னிலைக் காட்சி இவைகளைக் கூறும் பிரம வித்தியானுபவ விளக்கமாக இச்சூத்திரத்தைக் காண்பதுவே இதுவரை சொல்லியதை யெல்லாம் வரிசைப் படுத்திய உருவகமாய்க் காணும் அணியந்தவுரையாய்க் காணும் அணிந்துரையாம் எனவுணர்க.

ராம ராம அரிநமோ நாராயண என்று இராமாயணமுதல்வனை வாழ்த்தி நூலாரம்பமாகக் காண்பது பொழிலிற் பூவை நோக்குந்தன்மைத் தான பொழிற்பூவுரையாம். அப்படி மேற்போக்காய்க் காண்பதுடன் நில்லாமல் அதை ஆய்ந்து நோக்கின் இறைவனை வேண்டி வழிபாடுகள் செய்து அவனருளைப் பெறுவது கடினமாயும் இறையவனின் அடியவர் -களுக்குத் தொண்டு செய்யின் அவனருளைப் பெறுவது மிக எளிமையாயும் இருப்பதை நன்குணர்ந்து, இறைவனின் மெய்யடியார்களில் முதன்மையாளராகிய திருமாலை வாழ்த்தி நூலாரம்பம் செய்வது தோன்றும்.

* * * \

இராமாயண இலக்கியம்

தோற்றப்படலம்

அறிவோ மெனுந்துரி யாதீத மூலத் தமைந்து தசநாடி சூழச்
செறியல் தசரத ராறுபத் தாயிரந் தேவிசமை பிண்டநாடி
நெறியா மயோத்தி பரிசுத்தத் தான நிலையறு பத்தாயிராண்டும்
வறிதே சுதனிலா தாளல் குழவி மனமுதிக் காதவயதே. (உ)

வயமிகு மூளைப் படியறி வாதி வயங்கல் வசிட்ட முனிவ
ருயர்குரு வாக லுரோம பதமெலும் புற்பத்தி யாக்கு தசனம்
நயமாங் கலைக்கோடவர் வைகுதேய நலமாரிபெய்ய லுமிழ்நீர்
அயர்வறச் செய்யவர் வேள்வி யுணலா மனமீந்த பூதமதுவோ (ஊ)

அதுவே யுதானன் கலைமூன் றுறுந்தான மாங்கோ சலகே கயன்பெண்
ணதுவுஞ் சுமித்திரா தேவியிம் மூவ ரவரீன்ற நான்கு பெயராம்
புதல்வ ரிராமன் மனமாம் பரதனே பொங்ககங் காரமிணையாஞ்
சுதர்களி லக்குவன் புத்தி சத்ருக்கனன் றூய்மையாஞ் சித்த மிவையே. (எ)

இவைதோற் றியபின் வருவிசு வாமித் திரராம வாச யமதாம்
அவர்செயும் வேள்வியா மாசயத்தின் ரெழி லாகு மிடையூறகற்றத்
தவமுனி ராம னிலக்குவ னுடங்கஞ் சாரல் சுகமாந் தலத்தி
நவமா மனம்புத்தி செல்லல் கடுஞ்சுரம் நண்ணல் மன பூரகத்தே. (ஏ)

அகம்புத்திசெல்ல வதுவெம்மை மாற லருவிஞ்சை யாற்குளிரலா
மகத்தியர் சாபத் தரக்கியாய்த் தாடகை யண்டாத தீமைபுரிதன்
மிகவெய்ய மூல வழலினு லேநாகன் விக்கலுண்டாக்க லவளைப்
பகழியாற் கோற லழன் மாற நாகன் பணிவாகல் பின்னரவர்கள். (ஐ)

அவனெடு சோனை நதியைக் கடந்தொ ரழகானசூழ லணுகித்
தவமுயன் றேமக மாற்றிடக் காவ டசரதன் செல்வர் செயலாற்
பவஞ்செய் யரக்கரழியமா ரீசன் பதுங்கல் லஞ்க தமதி
நவமா மனம்புத்தி செல்லவா மாசய நன்று யியங்க வதனுல். (ஒ)

அதமாங் களைப்புத் தவன மிகவுமுண் டாக்கும் வியானன் னடங்கல்
லதன்பின் மிதுலை செலல் மனம் புத்தியா மாசயஞ் சேருதெளிவாற்
பதமா மகனற் றலஞ்சேர லவ்வழிப் பார்க்குஞ் சரவணமதும்
அதனைக் கடந்து செலலும் விசுத்தி யதுகடந்தேக நலமே. (ஓ)

நலமே தருங்கங்கை தோன்ற லகனய நாடன் மிதுலைநகரத்
தலமேக ராமன் கழலாற் கருங்கல்ல தான தொருபெண் ணணங்காய்
நலமெய்தல் சிந்தை யறிவு மகனய நண்ணலுமேதே வதத்தன்
பலமுற் றினியவர்க் குண்டாதல் கோதமன் பாரீ யகல்லி யையையே. (ஔ)

அகலியை கோதமர்ச் சேர்த்து மிதுலை யடைதல் துருவாசனென்னு
மிகநலஞ் சேரமல மகற்றுசய மேலாஞ் சலவா சயத்தி
லகலிய மாந்தேவ தத்தனணுக வகனயத் தானமடைதல்
மிகவாந் துலாநக ரெய்தியே யங்கொரு மேனிலைக் கண்ணழகியை (உஎ)

இயைவுடன் நோக்க வவளுமவ் வாறே யிராமனை நோக்கவதனு
லயர்வுற் றகன்று சதானந்தனில்ல மடைதல் லகன நிலயத்
துயர்விந் தணுகலுஞ் சிந்தைசிக் குற்றுழன் றேகையா நாதமதனி
நயமே விரும்பி நிலைத்தல் சனகமா ராச னெனலதுயிரே. (உஏ)

உயிரா மவர்மகங் காமாக் கினியா முயரறு பத்தாயிரம் பேர்
வயவர்கள் தாங்கும் வலைக்க வொண்ணுத வரிவில்லு பிண்டமதனு
டியதறு பத்தா யிரஞ்சேர் குருக்கா மிராச னுயர்வோங்கு வேள்வி
செயவே நிலத்தை யுழுகக் கிடைத்தவச் சீதைப் பெயரழகியோ. (உஐ)

அழகுற வேயுயி ராட்டுஞ் சுவாச மதனியக் கத்தாற் பிறக்கு
மெழில்விந் ததுவா மிராமன் சிலையை யெடுத்தே வலைக்க முரிவாய்
விழல்மனங் காம வசப்பட் டலைந்திட வேதண்டமஃதின் முரிய
தெழல்சா னகியிரா மன்மணங் காணவே யெல்லோரும் வந்துநிறைதல். (உஒ)

நிறைவாய் மனம்விந்து சேரக் கருவிக ளெல்லா மிசைந்தேயிருத்த
லிறையாஞ் சனகன் மகள் மூவரென்ப திரத்தமோடிரல் கொழுப்பா
முறையா யகங்காரமும்புத்தி சித்த முறவா கிடல்ப ரதனை
டிறையா மிலக்குவன் சத்ருக் கினனு மிவர்கள் வதுவை செயலே. (உஓ)

தோற்றப்படலத் தொகுப்பு

செயலு மறிவுமில் லாதே யிருந்துபின் றின்னவும்முண்ண நலமா
இயலத் தசனமுண் டாயுள்ளுறுப்பு மிசைய விக்கல்க்கக் கலில்லாச்
செயலாற் கருவியெலாந்திர னுற்றதினுற் கரணுதிகளுண்டாய்
மயலால் வழிதுறை கெட்டுமுரியுண்ட வாணிகழ்த் தீதுவரையே. (உஔ)

தோற்றப் படலம்
முற்றிற்று.

இராமாயண இலக்கியம்

நாடிசுத்திப் படலம்

வரையறை யற்ற பிறவியாம் நோயின் மயக்கம தென்று மணுகாக்
கரை கடந் துள்ளம் பொறிபுலன் சார்பாற் கலங்குறுந் தீங்கு மணுகா
தரைமிசை மாந்த ருடற்குறு நோயுந் தரித்திர நோயுமணுகா
உரையுணர் வொன்றி அராஉமா என்ன ஒருதரஞ் சொல்லுமவரை, [உ]

வரைவில் முரியுண்ட பின்ன ரயோத்தி வழிசெல்லுவது கரணங்
கரையற்ற காம வசப்பட் டழிந்தெய்த்த காலே பரிசுத்தமஃதை
விரைந்தே யணுகலா மவ்வழியிற் கார்த்த வீர்யார்ச் சுனஞ்ஞ் சுழினை
நிரையை யெதிர்த்துச் செயித்தேயவனி னிழலெனும் மாயை யதனுல் [உ]

அதநிலே யாங்குண்டலித் தாயைத் தந்தை சொல் லாமந்திரத் தாலெழுப்ப
முதற்றலே மாறிப் பிராணனும் வேகா முடிபெற் றெழுமா ரியென்றிவ்
விதமாய வம்மையா முதார வீதி விளங்கவே யத்தாய் விருப்ப
மதன்படி யேசட் திரியர் குருதிநீ ராம மிதத்தை நிறைத்தே [உ]

நிறையவே யைந்து மடுவெனு தார
நிமிர்த்திப் பரசா முயிர்த்தீ
கறையற் றெளிரவே ராவெனும் வாசியாங்
காலே மகார மதுவாக்
கிறைவன் பரசிரா மப்பெய ரீச
னிணையிலா ஞான வுருவா
மறையோ னருட்குரு நாத னினிதே
வரல்மழு வாளி வரலே [உ]

வரவுகண் டஞ்சிப் பணியவுஞ் சீறி
வளைத்திடிவ் வில்லே யெனநற்
குரவற் பணிய முரிவாக விட்ட
குறைதீர வேய முரியாய்ச்
சரத்தைப் பாழ்போக விடாதுப தேசந்
தரலாந் தனுவை வளைத்தத்
திரத்திற் கிலக்கியே தென்னத் தவமீய்ந்து
செல்லல்மறைவ லவனே. [உ]

மறையோ னுரைத்த படிமூல தண்டு
வளையச் சரமாஞ் சுவாச
மிறையே செலாதேற் றியதாற் றவபல
மிக்கு விளங்கல் லயோத்திக்
கிறையிளை யோரைமூ தாதை நகரத்திற்
கேக விடுத்தே யிராம
னிறையவ ஞக மணிமுடி சூட்ட
வியலவெல் லோருங் களித்தல். [உ]

களிப்பு மிகவகங் காரமுஞ் சித்தங்
கலக்க வதத னிலையி
லளியாம் புனித முறும்மனம் ஞான
மடையும் வழியே நயத்தல்
குளிர்ந்த மனக்கை கயைமனஞ் சுட்டிடக்
கூனி பலசொல் லியேய
மளிசெய் திராமன் வனம்புகச் செய்யும்
வகையாக் கிவஞ்ச மொழிதல். [உ]

மொழிந்திடுங் கூனி யதோகதி வாயு
முதுகிலி ராமன்னுருண்டை
யழுந்திட லூர்த்து வகதி நிமிருஞ்சு
வாச மதுகண்ட தாரை
யழுந்திட வூத லதுவிரா மன்கா
னடைந்திரண் டேழு வருடங்
கழிந்து வரச்சொலல் கேட்டுத் தசரதன்
கவ்வை மிகவா யிறத்தல். [உ]

இறப்புப் பிறப்பற வாதார மண்டல
மீரே ழுயர மனதஃ
துறச்செல் லலுமறு பத்தா யிரநாடி
யுற்ற பிண்டத்துவஞ் ஞானம்
மிறந்தண் டமுற்றுமெய் யாஞான மாதல்
லிலக்குவன் சீதை யிராமன்
புறவஞ் செலல்புத்தி விந்து மனமிவை
போகுத லாகுஞ் சிரத்தே. [உ]

சிரற்றுந் திரைக்கங்கை சேராயிரநெளவ
தின்செம்ம லான குகன்மீன்
பிரச மிவைகொடு நண்ணநட் புற்றுப்
பெருந்துறை தாண்ட லதுவா
யிரமலர்த் தான முறுங்கல்பம் உள்ள
இரந்திர வாசல் கடந்து
பரத்த வசமா மயக்கங் கடந்துபின்
பாலேயாம் வெம்மை யகற்றி [உ]

அகன்ற வளமை யுறுஞ்சித்ர கூட
மடைதலே யுச்சி யடைதல்
நகரத்து மாக்க டொடர வறுபதி
ஞயிர மக்ரோ னிசேனை
தகவுடன் சூழப் பரதனி ராமன்
றனைநாடிக் கங்கை வழிபோய்
மகர்சி பரத்த வசரா குதியின்
வருதேவ போகம் மடைந்தே [கஎக]

அடைவாக வேசித் திரகூட நண்ணியே
யண்ணனைக் காண லதுவோ
சடலத் துறுநாடி யாறுபத் தாயிரஞ்
சார வகங்கார ரசித்தத்
தொடர்வு சுழினைத் தமரைக் கடந்துபின்
சொக்குற்று வுச்சி யணுகல்
இடருற்றுத் தாதை யிறந்தமை கேட்டே
இராமன் முதலோர் புலம்பல் [கஎக]

புலனறி வுற்றமை யந்நிலை செல்லலும்
பொய்யெனக் காணல் பரதன்
நிலமர சாள வழைக்கலுந் தந்தைசொல்
நீதி வழியக லாதா
லலமறுந் தம்பிக் கடித்தல மீய
வவநந்தி யம்பதி யுற்றுத்
தலமர சாளவிராம னிலக்குவன்
தையலுந் தென்நெறி சேரல் [கஎஅ]

நெறியாம் மனம தகங்காரஞ் சித்தத்தி
னேருரு தேகண்ட தாரை
நெறியாய்ப் பிறப்பித்த வேத முறையி
னிலைக்க வதன டையாள
நெறியாம் புருவத் தமரின கங்கார
நிற்கவே வேத விதியை
நெறியாய் முடிக்க மனம்புத்தி விந்தோடு
நேரல் கயில வழியே [கஎங]

நாடி சுத்திப் படலத் தொகுப்பு

வழிசொல்லி ஞான குருவாழ்க வாசி
வழங்கி யருளுப தேச
மொழிகண்ட தாரையி லூதிச் சுழிமுனை
முட்டித் தமரைத் திறந்தவ்
வழிசென்று சொக்கியே யுச்சி யடையவ்
வாறே யகங்கா ரசித்தஞ்
சுழினைத் தடமுற வஞ்ஞானஞ் சாகச்
சுருதிமுடி வான யிடமே [சஅ]

நாடி சுத்திப் படலம் முற்றிற்று.

வாசி தாரணைப் படலம்

சுருதி முடிவா மிடமதும் மாமறை தோன்றித் துலங்கு மிடமும்
கருதிமெய் யன்பர்கள் பத்திப் பெருக்கிற் கனிந்தாழா நிற்குமிடமும்
பருதி மதி யொருங் காக்கி யமிதம் பருகிக் களிக்கு மிடமும்
இருதிரமில்லா அராஉமா என்னும் இயல்மொழிதோன்றுமிடமே [சஅக]

இடறின்றி யேக லுரைத்தோ மினிமே
லெழிற்சித் ரகூட மெனுச்சி
கடந்தே வனமெனுங் கீழாரு தாரங்
களினிலே செல்லல் லுரைப்போம்.
நடந்தத் திரியாம் விசுத்தி நிலையினை
நண்ணியே தண்ட கவனத்
திடத்தே விராதன் வசஞ்சிக்கி யேயழித்
தேகலம் மூவர் வனமே [சஅஉ]

வனப்புறுந் தேக மொடுவிரா தன்சாப
மாறித் துதித்தே கலஃது
கனலுரை யுந்தண்ட மார்க்க முட்சேரக்
கடுமயக் குற்றுச் செயங்கொண்
டினல்நீங் கிடவந் நிலையுயர் வெய்த
லெழிற்ச ரபங்க ரிடத்துச்
சனகியி ராம னிலக்குவன் செல்லத்
தழலுற் றவரும் மறைந்தே [சஅங]

மறைசொற் பதவியடைதல் சரம்பங்க
மாக்கும் மஞ்க தமதி
லிறைசொற் பலத்தால் மனம்புத்தி விந்தொடு
மேக வதுந னிலையாம்
நிறைவெய் துதலவ் விடநீங்கித் தண்டக
நீணெறி செல்ல வவனத்
துறைவால கில்லிய ராறுபத்தாயிர
ரோகை பெருக வபயம் (சுசு)

அபய மெனவே யடைய வவர்கட்
கபய மளித்தாங் கிருந்தத்
தபசிக ளெல்லாம் நலனுறத் தென்றிசை
சார்ந்தே சுதக்கி னமுனி
யுபச ரிக்கப்பெற் றவணீங்கித் தென்மலை
யுற்றகத் தீச னருளு
முபதேச மீசன்வில்லம்பு வாள்பெற்றே
யுயர்வலி வெய்த லதுவோ. (சுசு)

அதமுக மாகப் பிரமதண் டத்தோ
ரகம்ா மனபூ ரகத்தி
னிதமுடன் செல்லவாங் குள்ளாறுபத்தா
யிரநா டிகளும் வலுக்கவ்
விதநன் றதாக்கிய பின்சுகத் தின்றுன
மேவி நலம்பெற் றுமூல
மதனிலை சென்று சடஞ்சரம் வாய்க்க
வதியுரஞ் சேரு நலமே. (சுசூ)

நலமா முனிவர்சொல் பஞ்ச வடியினை
நாடும் வழித்த சரதன்
சிலதன் சடாயுவைக் கண்டுல குற்பத்தி
செப்பத் தெரிந்தே நடந்து
சலதி யெனவே யகண்டகா வேரியின்
சார்புறும் பஞ்ச வடியாந்
தலம திற்றம்பிசெய் பன்னாக சாலையிற்
றையலுடன்று னிருத்தல். (சுசா)

இருமை தருமூல வாதாரஞ் சேநர்ந்த
வியல்பா லகன நிலையி
னகுறும் போதுமெய் ஞான பலத்தா
லறிந்து டலுண்மை விபரம்
பொருந்தி யைந்துள்நிலை யான வகனலிற்
புத்தி மனமொ டுவிந்து
மிருத்தல் புறக்க ருவியா மரக்க
ரினத்தை யழிக்கும் வகையே. (சுசஅ)

வகைசெய் யிராவணன் றங்கைசூர் பன்னகி
வந்தவ் வனத்தே யிராமன்
நகைமுகங் கண்டெழி லாமுருக் கொண்டவ
னட்புறச் சார்ந்தே மயக்கவ்
வகைக்கிணங் காதமை கண்டு சனகன்
மகளைப் பிடிக்க விளையோன்
பகைத்தே யவட னெழிலைச் செருக்கப்
பதைபதைத் தார்த்தே யலம்பல். (சுசூ)

அலம்பும் பிராண னதோகதி செல்லலா
லானதோர் காம மனதைப்
பலமாய் மயக்கியே விந்து நிலையினைப்
பற்ற விவேகம் மறுத்தல்
வலன்மிக்க கம்பன் கரன்றூ டனன்றிரி
மத்தகன் போர்செய் தழிதல்
மலமிக்கு வெட்கங் குரோதம் மிடும்பையும்
மாச்சரி யங்க ளொழிதல். (குஅ)

ஒழிவி லிராவணர்க் கிந்த வரலா
றுரைக்கவே சூர்ப்ப நகிவந்
திழிவிதை நீக்கென மாரீ சனைவேண்
டிடவவன் பொன்மா னுருக்கொண்
டெழிலா ரணங்குமுன் றேன்ற வவளு
மிராமனே மான்றரு கென்ன
மொழிய விளவல்சொற் கேளாது மான்கொளு
மோகைகொண்டேபின் றொடர்தல். (குஆ)

தொடர்நதுகா மந்தூண் டுதலாற் பிராணன்
றுணையா கவியா னனைச்சேர்ந்
திடவவ னின்றெழி லாநித் திரையி
லிலகு விந் தாற்புத் தியினே
ரடக்க முறுது மனமயங் கிச்செல
லாமான் பிடிக்கும் வகையி
னடங்காமை யாலதைக் கொல்ல வவனுமி
லக்வணு யென்றே யிறக்க. (குஇ)

இறந்தனன் போலு மிராம னெனவே
இலக்குவன் காவல் செயலைத்
துறந்தே கிடவு மிராவணன் சீதைமுன்
றேன்றியே மாய வுருவோ
டுறவு செயவவள் மாறு கொளலா
லுறையுளோ டேபேர்த் தியேகப்
பறவைகண் டெற்ற வதன்சிறை யீர்த்துப்
பறந்தே இலங்கை யடையல். (குஈ)

அடைவாங் கனவின் மனமயக் கெய்த
வதன்றுணை யாய்ப்புத் தியுஞ்சென்
றிடவும் பிராண னுயிர்க்கிளை யுற்றஃ
திருக்கும்விந்தோடுங் கவர்ந்தே
கிடவுயர் வாமறி வென்னுஞா னம்வந்
தெதிர்க்க வழித்தே கிளம்பி
யுடலடி மூல மடைத லசோகுசே
ருத்தியா னத்தி லவளை. (குஎ)

வளைத்தே யரக்கியர் காவல் செயும்படி
வைத்தல்விந் துப்பை யிலுயிர்க்
கிளையுறை விந்துவைச் சேர்த்தல் திரும்பு
கிறபோ தெதிரில் வருகு
மிளையவ ணெடிரா மன்வந்து சீதையங்
கில்லாமை கண்டு துயராற்
களைத்துத் தடநோக்கி வந்து சடாயுவைக்
கண்டறி யும்போ திறக்க. (குஏ)

இரங்கியே யவ்வழி செல்ல வயோமு
கியினிடஞ் சிக்கி யிளையோன்
வரமுடி யாமற் றவித்தே யவளை
வதைசெய் திராமன் னிடஞ்சேர்ந்
திரவும் பகலு நடந்து கபந்த
னிடஞ்சிக் கியேய வனைகொன்
றிரண்டு பேரும் மீண் டிடநல் லுருவ
னெய்தி யுபாய மியம்பல். (குஐ)

இயல்பா நிலைமன மெய்திடப் புத்தி
யிசையக் கனவு நிலையா
மயலற் றுயிர்க்கிளை யாம்விந் திலாதால்
மனம்புத் தியுமே வருந்தி
யுயரறி வாற்சிறி தேதெளி வுற்ற
தொழியக் கலையை நடத்தி
வயமிக் கழுத்திடு மோகந் தனைப்புத்தி
மாய்த்து மனதோ டிசைந்தே. (குஒ)

இசைய விரவி மதியு நடைசெய்
திடலா லுலோபப் பிடிப்பி
னிசையா தறுத்து மனம்புத் தியுமீள
வேயுயர் மார்க்க மறித
லிசைத்த படியே நடந்து சபரி
யினிதே தருமுண் டியுண்ண
விசைசே ருலகவ னெய்த நடந்தே
இருசிக மூக மடைதல். (குஓ)

அடைவா யுயர்கதி கொண்டு மதத்தை
யணுக மனமோ டுபுத்தி
யுடைய பலமிக வாக மதமற்
றுயர்வெய் திடவே கதிகொண்
டடைத லோட்டத்தை யடக்கு முயர்நிலை
யாஞ்சிரத் தீது வரையிற்
றடையின்றி வாசி யதோகதி நீங்கியே
தண்ட வழியுள் ளகத்தே. (குஙூ)

வாசிதாரணைப் படலத் தொகுப்பு

அகங்களொவ் வொன்று நலமுற நாடி
யறுபதி னுயிர மோங்கி
மிகவுரத் தோடுபூ ரிக்க நடைகொண்டு
மேவிமூ லாதார மாங்கும்
பகத்திற் சடம்சரம் வாய்க்க நடந்துயர்
வாஞான மெய்தி யதனு
லகமமை நுட்ப மறிந்து மனம்விந்
தமைய வகன நிலையே. (சுவி)

நிலைக்கும் மனம்பிந் தலைத்திடுங் காம
நெருப்பை விவேகத் தடக்கித்
தொலைத்துமே வெட்கங் குரோத மிடும்பை
தொட்ர மாச்சரியம் மொழித்து
நிலையுறக் காமம் பிராணனைத் தூண்டிட
நித்திரை யின்மன தேகி
யலையவும் புத்தியுமவ்வழி சென்றிட
வப்போது சீவ கிளையை. (சுவி)

கிளைகொண் டிடமுடி யாமல்விந் தோடு
கிரகித்து யேகிப் பிராணன்
வளையவே சுக்கில வாசயஞ் சேர்க்க
மனம்புத்தி நித்தி ரையின்மீண்
டிளைத்தங் குயிர்க் கிளை மீட்ட நடைகொண்
டிடஞானந் தோற்றி மறையத்
தளையதா மோக முலோப மதம
தறுத்தத ஞற்சிர மேறல். (சுவிஉ)

சிரமுதற் பாதம் வரைவாசி தாரணை
செய்த துரைத்தோ மிதேபோல்
வரம்பாக நாடியின் முரணை செய்துகா
மச்செயங் கொள்ள வுயிரி
னுறமிகு விந்து மேலேற வுடலு
முயிரழி யாத வகையாந்
திரம்பெறச் செய்த செயலி னிலக்கியஞ்
செப்பு வோமைய மறவே. (சுயக)

வாசிதாரணைப் படலம் முற்றிற்று

நாடிதாரணைப் படலம்

அறமுத லாய கலைகள்கற் றேருரு மமரரு மாமுனிவோருந்
துறவரா னேரு மிருத்தஞ்சு செயமாய்ச் சொல்லலுமஞ்ச் சொல்லினையச்
சிறந்ததும் வாரி நஞ்சான்மார் கழீயெனச் செப்பிய சீதரனுவோ
மறவிதீர்த் தாள்திரு வார்திரய் யாவோ அராஉமா என்னும் அறமே.
(சுயச)

அறவ ரிருவ ரிருசிக மூக
மடைதல் காணுஞ்சுக் கிரிவன்
மறைதல் மனம்புத்தி மேனிலே யேற
வடங்க லிடது கலையஃ
துறவா னதுவாயு வைந்தன்னே மேன்மை
யுறச்செய் வதுநான்க தான
மறைநூற் கலைகள் பொருந்து மணுவுரு
மாவுருக் கொள்ளு மணுமான். (சுயஞ)

அணுமா னெனுநற் சுழினே வசப்பட
லாகு மணுமான் வணங்க
லணுகு மிருவ ரிடஞ்சுக் கிரீவ
னபய மருள்கெ னடியி
லணுக வவனுக் கபய மளித்த
லதுபின் கலைவ சமாக
வணுக வதனிடர் தீர்க்க வுறுதி
யமைந்திட லாம னமதே. (சுயக)

நமதுயிர்த் தோழ னெனச்சுக் கிரீவனே
நட்புக் கொளவே யிராம
னெமது குறைகே ளெனவே யனும
னியம்ப லிடையாங்கலையி
னமைதியுறமனஞ் சேரச் சுழினே
யதாணுடி பேத மறித
லமைதி யிலாதே யெதிர்த்தமா யாவி
யலறிப் பிலத்தின் மறைய. (சுயஎ)

மறையு மவனைத் தொடர்ந்துசெல் வாலி
வரவைநோக் கிச்சுக் கிரீவன்
முறையே பலநா ளிருந்தும் வராதால்
முடிசூடி யொன்பது காலாண்
டிறையா யரசு செயவாலி மீண்டங்
கெதிர்த்து மனைகொண் டுவண்மை
குறைந்தோட வோடவே ழாழியுஞ் சக்கிரக்
குன்றும் விடாதே துரத்த. (சுயத)

துறக்கு மவனிம் மலையேறில் மாண்டிடு
சூட்ச மறிந்தே மறைந்திங்
குறலெனல் மாயாத வாவி புகுமூல
முட்பின் கலையாம் பரிதி
யுறலான காலத் திடைகலை யாமிந்
துவாவாக வொன்பது காலி
லுறப்பின் கலையாம் பரிதிமூ லம்விட்
டுயர்ந்து கண்டத் திலுறவே. (சுயக)

உறுமனை விட்டுக் கலைதேய் திடகலை
யுள்ளே ழடுக்கோ டுமூல
மறுகித் திரிந்தக் கலையணு காத
வகனலா மேலான மூலத்
துறுத லவனை யெதிர்த்தோர் வரமு
முயர்பலம் பாதி யழிவா
யறுதல்பின் னை கலையை யெதிரிட்
டடக்குஞ் செயலி லழிதல். (எப)

அழிவைத் தடுக்கச் சுராசுர ரென்னு
மகம்புற முற்ற கருவி
யொழிவி லலையெனு மூலத்தின் மேரென்
னுயர்தண்ட நிற்க வரவாங்
கழிவில் சரத்தாற் பிணித்தே யிழுத்துக்
களைப்பாந் துயிற லுறவவ்
வுழிவாலி மட்டுங் கடைதல்பின் னுங்கலை
யோயா துயிர்த்த கதையே. (எக)

கதமுறு வாலி யெனும்பின் கலையாற்
கலங்கல் நிலமென்னு மூல
முததி யெனுமன பூரக மெண்டிசை
யோங்க லெனுமூட் டெலும்பு
நிதமெண் கிரியு மொரேயமை யந்சென்று
நேர்மை யுடனே திரும்பல்
பதங்கர மூட்டு களிற்பின் கலையே
பதிந்து நடந்தே திரும்பல். (எங)

திருகாஞ் சுழினை யெனுமனு மானுற்
றெரிந்தே யவனை யொழிக்கும்
பெருவலி காட்டப் பிரமனு லகமும்
பிற்படச் சென்றுங் கவன்புள்
ளருந்துயில் கொள்ள விரவி மதியு
மதன்முடி யெய்த முடியாப்
பெருவுரு வாகித் திசையை மறைத்துப்
பிலமுறும் பாம்பு முடியில். (எங்க)

முடியவே ரோடி வளர்ந்த மராமர
மோரேழ் துளைப்ப டவம்பு
நெடிதே விடவும் மரமேழ் தொளைத்து
நிலைகொளா தேகீ முலகி
னடிவரை சென்றெதி ரொருமுன்று மிலாதுவந்
தம்பமை வாக வதுகண்
டிடியென வானர ரார்த்து மகிழ்ச்சி
யினிதுற லென்னு மவையோ. (எசு)

அவையெனும் மேன்மூல வாதார மேற்சென்
றமிச மெனவே பறக்க
சவையாம் பிராண னொடுங்கி யடங்குந்
தலமுடி யாயெண் டிசையுங்
கவையாய்ப் பிரிந்து கீழ்மூல மடியாய்க்
கலந்த மகாரச் சரமா
மவைரா வெனுங்கால தான மராவா
மடுக்கேழ் நிலையூ டுரூவ. (எஞ)

உருமென்றெலிக்கச் சரம்விட வேயவை
யோடி ரண்டேழா மடுக்கு
முருவிவர நாடி யெல்லாம் வலுத்தலவ்
வோங்கலி னென்பு மலையா
யெருமை யுருவா மசுரனை வாலி
யெறிந்தணு காமை தெரிந்தங்
கிருந்தே யிளவலவ் வென்பினைக் கால்விர
லாற்சுண்டி யோட வெறிதல். (எசு)

எறியு நடைப்பின் கலைநா டியினே
ரெதிராஞ் செலத்துவ மூறி
முறிந்து சுழிமுனை வாசலி னென்பென
மூடவுந் நாடி யணுகா
தறிந்து மனம்புத்தி வாசியாங் காலா
லகற்ற மறைதல் லணங்கன்
றெறிந்த பணிகண் டிராமன் கலங்க
லிளையணு மான்கண் டிறைஞ்சி. (எடி)

இறைவ கொடுந்திறல் வாலியைக் கொன்றவ
னின்றம் பியாஞ்சுக் கிரீவ
னிறையவ னுக மணிமுடி சூட்டி
யெழுபது வெள்ளம் மனிக
நிறையெங் குந்தேடிச் செல செய்து தேவி
நிலைகண்டு மீட்கு மதுவே
முறையென் றுரைக்கவவ் வாறே யவனை
முடிக்கநடந்து செலலே. (எஅ)

செலவே சுழிமுனை யின்னுயி ரின்கிளை
சேரடை யாளந் தெரிந்தே
கலங்கு மனது தெளிய விடையாங்
கலைமதி பூர்ணைய துவா
யிலங்க வதன்றுணை யான ரவிகலை
யின்கூட் டொழித்துச் செயங்கொ
ணலத்தா லெழுபத் திரண்டா யிரநாடி
நாடிடச்சீவ கிளையை. (எசு)

கிளையுறச் செய்ய றகைமையென் றேசுழி
கிட்டு நலத்தா லறிந்தங்
கிளையாது கால்நடை கொள்ளலாஞ் சுக்ரீவ
னேகியே வாலி யெதிர்நின்
றிளையாது போருக் கழைக்கலுந் தாரை
யிசைவின்றி வாலி கதமுற்
றிளையவ னொடு பொருத வவனைந்
திராமனை நண்ண வவனும். (அ)

அவனொடு நீபொர வேற்றுமை யொன்று
மறிதற் கியல விலையின்
றவனொடு மாலை புனந்துபோர் செய்யென்
றனுப்பவவ்வாறு செயலி
னவன்வலி யாற்றளர் வேளை புறத்துநின்
றம்பு முதுகுற் றுரூவத்
தவர்வளத் தெய்யவவ் வாறுக வாலி
தளர்ந்தாவி நீங்கி யொழிதல். (அக)

ஒழியா மதிகலை சூரிய னின்கலை
யோடொதி ராக வதனை
யழித்திடத் தாரைவிட் டோங்கி யொருசந்தி
யாமதி யோங்கு கலைய
தொழிந்து பிரிந்தது கண்ட மனம
துறுங்கலை வேறு படுமவ்
வுழிப்பின் கலைய தொடுங்கப் புறஞ்சர
மோட விடுத்தே யடக்கல். (அஉ)

அடற்சுக் கிரீவ னரசாள மௌலி
யணிவித்து வாலி புதல்வ
னிடத்தி லிளவர சீந்து கிட்கிந்தைவிட்
டேகி மதங்கர் மலையி
னிடமுற்றுக் கார்கூதிர்க் காலங் கழித்தவ
னெய்தா மையினுல் வெகுண்டவ்
விடத்திற் கிலக்குவன் செல்லவுந் தாரையாள்
வேண்ட வணுமான் வணங்கி. (அங்க)

வனமு மலைகளுந் தீவுமெங் கெங்கும்வாழ்
வானர வீரர் வரலாந்
தினநாளே யேயா மெனச்சினந் தீர்ந்து
செலவப் படிவா னரர்க
ளினமெலாம் வந்தது கண்டு மகிழுவவ்
வேழ்பது வெள்ளத் ததிப
னெனநீலன் முழலு மெங்கெங்குந் தேட.
விசைத் தொரு திங்களளவில். (அசச)

அளவி லிடமெங் கணுந்தேடி மீள்கென்
றனுப்ப விராமன் கரத்தி
னுளவா ழியையணு மானிட மீந்துதெற்
குற்று வருகென் றியம்பல்
வளர்மதி யென்றுமே பூரணே யாகி
வலுக்க வதன்கீழ்க் கலேயா
யுளதங் கதமாக வாக்கி யகன
லுறமனம் புத்தி யுடனே. (அசரு)

உடனு டிகள்வச மாகாத தாற்புத்தி
யோங்கு கதிகொண், டுநாபி
யிடமுறக் கண்டதா ரைவச மாக
விணங்கச் சுழினே யதுவு
மிடகலே பின்கலே யும்மத லைங்க
மெங்கெங்கு மேவு மெழுப
துடனி ரண்டாயிரம் நாடி வசமா
யுறச்சங் கினியு மணுக. (அசசு)

அணுகியெங் கெங்கு நடந்துயி ரின்கினே
யைநாடித் திங்க ளினிலங்
கணுகும் படிகதி கூட்டிரா மாவா
மயனஞ் சுழினே யுயர்வுற்
றணுகச் செயலா மலைநதி தாண்டி
யழல்மிகும் பாலே வனமுற்
றணுக முடியா வழலால் வெதும்பியே
யவ்வழித் தோன்று பிலமே. (அசஎ)

பிலவங்க மெல்லாந் தொடர்ந்தவ் வழிசென்று
பேரிரு ளெல்லா மொருங்கத்
தலமே யுறையுளாய்க் கொண்டதோ வென்னத்
தயங்கிதிரும்ப வழியு
மிலவென் றுணர்ந்தனு மான்வாற் றுணைபிடித்
தேகிச் சுவர்க்க பதியித்
தலமென்றணுகியப் பாழ்நக ரத்திற்
றவக்கோல மாயோ ராரிவை. (அசஅ)

அரிய வெழின்மேனி யோடு நுனிமூக்
கதிலொரு கண்ணீற் றிலங்கு
விரிய லெனவங் கிருந்திடக் கண்டங்கு
மேவிச் சுயம்பி ரபையா
மரிவை யெனவறிந் தப்பில நீங்கி
யவள் விண்ணுலக மடையப்
பெரிய வுருவ மெடுத்தனு மானப்
பிலத்தினே முட்டிப் பெயர்த்தே. (அசக)

பெயர்த்தப் பிலத்துள வானரர் மீளவப்
பெண்விண் ணுலக மடையச்
செயலவ் விடம்பிலத் தீவென மேற்கிற்
றிகழ்கின்ற தின்று மெனலோ
நியதி யொடு மயிர்ப்பாலங் கடந்து
நெருப்பா றடைந்தே யுழன்றத்
துயர தறக்கீட் டுளேயிற் புகுந்திருள்
சூழ மயங்கிச் சுழித்தே. (கூஎ)

சுழித்துத் திரும்பா வழிநடு நாடித்
துணேயாற் புகுந்தே வெறும்பா
ழொழியவொன் றில்லா விடங்கண்டு மூக்கி
லொருகண் சுயம் பிரபையா
எழிலொளி வீச லறிந்தந் நிலேயி
னிருளற முட்டி யெழுப்பி
யழியா நலமுறச் செய்யிடந் தோண்மே
லதன்பேர் சுவல தெனலே. (கூஅக)

சுவல மிகுவா னரரெங்குந் தேடித்
துயிலுறத் தூமி ரமாங்கண்
ணவன்கண்டு சீறிட வங்கதன் கண்டவ்
வரக்கனேக் கொல்லத் துயில்செய்
யவர்க ளெலாம்விழிப் புற்றெங்குந் தேடி
யலுப்புற்ற போதது கண்ட
பவனே யரையனுஞ் சம்பாதி வந்து
பாரிவாய் விசாரித் தறிந்தே. (கூஅஉ)

அறிவின் றெளிவு மிகுராம நாம
மதனை நீரெல்லா முரைக்கு
நெறியாற் சிறகு வளரு மெனவே
நிகழ்த்தவவ் வாறே யுரைக்க
வறிதே கரிந்த சிறைவளர்ந் தோங்க
மகிழ்ந்தே சனகி யவடென்
னெறியிலங் காபுரித் தீவி லிராவண
னின்சிறைக் குள்ளாய் மெலிந்தாள். (கூடு)

மெலிவை யகற்றக் கடல்கடந் தங்குற்று
மீண்டே யரக்கர் குழாத்தின்
வ்லியறி வித்தாவனசெய் திடுமென்று
வானிற் பறந்து செலவவ்
வலிமுக வீர ரெலாம்பலஞ் செப்ப
வடவரை காலிற் றடுத்த
வலியாற் செலவிய லேனென்று சாம்புவன்
மாரு தியைப் புகழவே (கூசு)

புகழ்பே ருருவ மெடுத்து மயேந்திரப்
பூதரத் துச்சி யினிற்றல்
மிகவுயர் வாங்கதியாய் நாடி யெங்கிலு
மேவி யயர விழிகிஞ்
சுகமாகலு மங்கதமான பின்கலை
தூண்டலி னுல தழிய
மிகத்தெளிவாய் நாடி கணடை கொண்டு
மிளைத்திடும் போது தெளிவு (கூசு)

தெளிய வுயர்கதி யாய்நாடி தாரணை
செய்யு நலத்தால் வளர்ந்த
தெளிவா லுயிர்க்கிளை யாம்விந் ததோக
தியாற்சுக் கிலவா சயமுற்
றெளியற் றிருந்த லகற்றச் சுவாச
முறுநிலை தாண்டிப் பதிந்து
வெளியாய்ப் புறக்க ருவிகளை யெல்லாம்
வெலவேண் டுமென்றே யுணர்ந்து (கூசூ)

உணர்வுறு நாடி களொவ்வொன்று மந்நிலை
யோடித் திரும்ப முடியாக்
குணம தறிந்தே கபாலந் தடைசெயக்
குன்றுஞ் சிகுவை யதுமே
லணமுற நாவை யடக்கி யுயர்த்த
வதனற் சுழினை நிமிர்ந்தக்
கணமே மனபூ ரகத்தைக் கடக்கக்
கதிகொண் டிடலாங் கனிந்தே (கூசா)

நாடிதாரணைப் படலத் தொகுப்பு

கனிவுறத் தந்தைசொல் லாமந் திரத்தாற்
கதிகொண் மனம்புத் தியெங்கு
நனிநடை கொண்டு துவாசாந் தத்தினை
நண்ணிக் கலைகள் நிரம்புந்
தனித்திரு கான சுழிமுனை நாடி
தனைவச மாக்கி யதனற்
பனிமதி யின்கலை தேயல்கண் டென்றும்
பதினறை தாகித் துலங்க (கூயஅ)

துலங்க நடைசொண்டு கீழ்மூலா தாரந்
தொடங்கி மேல்மூல நிலைமட்
டிலங்கேழ் நிலைமரா வான கலைராம
வென்னுஞ் சரமோ டிமீளப்
பலமுற்று நாடியெ லாம்வச மாகிப்
பணிய மனபூ ரகமாந்
தலமுற்றிரவி மதியெதி ராயொரு
சந்தியா குங்காற் றளர்ந்தே (கூயக)

தளர்வினை நீங்கிடப் பின்னதோர் சந்திய
தாகிடும் போது சரநி
களவழி யாம்பின் புறமோடச் சூர்ய
கலையங் கதமா கிடலான்
வளர்மதி யென்றும் பதினறை தாகி
வலங்கிட நாடி வலிமை
யுளதாய் வசப்படந் நாடியின் ராமவா
யோங்கிட வாசி நடையே (க)

நடந்தெங் கிலுஞ்செலச் செய்து சுழிமுனை
நாடிரா மாவா கயனத்
திடமேகச் செய்ய வதுமயிர்ப் பாலத்
தினைக்கடந் தேபோய் நெருப்பா
றடைந்தே யுழன்றுகீழ் மூலஞ் செலுந்துளை
யாமிருட் பாதை புகுந்தே
நடந்துமீ ளாத கதியா கிடல்கண்டு
நாடப்பா ழாகு நிலையே (கக)

நிலையுற வவ்விட நாசி நுனிக்கண்
ணிலங்கிச் சுயம்பி ரபையா
தலைக்கண் டுயர்கதி யாயப் பிடர்வழி
சாரய ராத்தா ரணையாற்
கலைவளர்ந் தோங்கமெய் ஞான மடைந்துதீக்
காமச்செயஞ்செய் யுபாய
நிலையறிந் துண்ணுக் கதிஞுவை யேற்ற
நிமிர்ந்து சுழினை வலுத்தே. (கூ)

வலிவு பெறமன பூரகந் தாண்டி
மறைமுடி வாகுந் தலத்தி
னலிவின்றிச் சென்று திரும்பச் சுழிமுனை
நாடி கதிகொண்டு யர்ந்தோங்
கலினை யிதுவரை சொன்னேம் பெரும்பாழ்
கலந்தே யுயர்ந்து மதியம்
பொலியமி தத்தாற் சுபந்தரு மார்க்கம்
புகலுவோ மம்ம வினிமேல். (கூ)

நாடிதாரணைப் படலம் முற்றிற்று

அங்கிதாரணை அமிததாரணைப் படலம்

புகலுவோ மம்மவினிமே லென்று நாளவம் போக்காது காக்ககாக்க
விகலிய சாச்சவஞ் சச்செயா வென்ன விடரட்டண்டர்க்க வுடதட
நிகழத்தந் தந்தோய்பாப் பும்பாம் புயர நிலாவாழ கோள தறென
அகலமால் ஓதுசொல் லார்திரை யாவோ அராஉமா நாமம் இனிதே. (கூ)

இனிதுமே லோங்கி வளர்ந்து சுவர்க்க
மெதிர்தோன் றிடுதல் லறிந்து
நனிவிசை கொண்டம் மலைநின் றிலங்கையை
நாடிக் ககன வழிபாந்
தொனியாற் கடலுங் கிழியச் செலுங்காற்
சுரர்பதிக் கச்சுற் றெளித்தங்
கினிதே வதியுமை நாக மெழுந்தாங்
கிருந்து செலவே யியம்ப. (கூ)

இயம்பும் வ்கையிங் கிருப்போ மிலங்கையி
னெய்தித் திரும்பு கையிலென்
றியம்பி விசைகொண்டு செல்லச் சுரசை
யெதிரிட்டு மண்விண் மறையப்
பயந்தோன் றுருவொடு வாய்திறந் தேசெலும்
பாதை மறைத்தே தடுக்க
வியந்தவள் வாயிற் புகுந்து வெளிவர
வீந்தவள் மேன்மை யுறவே. (கூ)

அமிததாரணை அங்கிதாரணைப் படலம்

உறவவ் வழியினங் காரதா ரையா
ருயர்ந்தவ் வழியி னெதிரி
லுறவவள் வாயி னுழைந்து வெளியி
லுதரங் கிழிய வரலா
லிறந்திடச் செய்திலங் கைமேவக் காவ
லிருக்கு மயன்வடி வத்தாள்
மறல்செய மார்பிலறைந்து கொலவயன்
வாக்கென்று சொல்லி யகலல். (கூ)

அகண்ட வெளியுற வோங்கிப் பிடரி
யடுத்தவ் வழிமூல நோக்கி
மிகவிசை யாய்மன பூரகந் தாண்டிடு
வேளையதிற் கீழ தான
சுகமதின் ருன நிமிர்ந்து வசமாய்த்
துலங்க வதிற்சிக் குருதே
யகன்ற பெரும்பாழ்ச் சுரத்தைக் கியமா
யடங்கியே பின்மீண் டெழும்ப. (கூ)

எழும்பிமே லாநிலை யந்நெறி யெய்திட
வேகியங் கார்ந்திடு தாரை
விழுங்கப் புகுந்து வெளிவர வந்நிலை
மேன்மை யுறமூல முற்ற
சுழுமுனை நாடி யெதிர்மூலா தாரந்
துலங்ககா ரத்தை யெதிரி
லழுத்த வதனிலை மாறியோங் காரமா
யாகல் விதித்த படியே. (கூ)

படியு மணுவுருக் கொண்டுதுயிலிலங்
கைப்பதி முற்றுந் திரிந்துந்
துடியிடை யாளைக்கா ணுது மயங்கியோர்
சூழலிற் செல்ல வவிடங்
கடிசெய் யரக்கியர் சூழச் சனகி
கலங்கித் தியங்கல் லறிந்தப்
படியே மறைந்துணர் காலை திரிசடைப்
பாங்கியாள் சொல்லு நலமும். (கூ)

நலங்கெல் லிராவணன் சீதையை நண்ணி
நயத்தலுஞ் சீதை முனிவாய்ப்
பலநிந் தனைகள் சொலலுமோர் தூசியாய்ப்
பாவித் தலுமங் கரக்கி
பலர்சூழ்ந் திராவண னுக்கிணங் கும்படி
பாடுசெயலு மறிந்தக்
கலதிக ளெல்லாந் துயிலுற விஞ்சை
கழறவவ் வாறு துயிலல். (கூ)

துயிலுறுங் குண்டலிச் சத்திசேர் மூலத்தைச்
சுற்றெட் டிதழ்க ளெலாமத்
துயிறல் கலையா தணவாய்ச் சுழிமுனை
சூழ்நடை கொண்டொரு பாலி
லுயிரின் கிளைசுக் கிலவா சயத்து
ளுறைந்தே சலிப்ப தினிமேல்
அயிர்ப்பின்றி யேயத மாங்கதி கெட்டுமே
லாங்கதி தோன்ற நடந்தே. [அஉ]

நடந்தந் நிலையி லணுவாய்ச் சுழிமுனை
நாடி யிருந்தே பிராணன்
நடந்திடுங் கீழ்நிலை யால்விந் திளகா
நலம்மது சூழு கருவி
இடறு செயலு மறிந்தக் கருவிக
ளெல்லா மயர்ந்தே படுக்கு
மடவே கலைகொள வப்படி யேயங்
கயரல்சூ ழுங்க ருவியே. [அக]

கருவு மரக்கிய ரெல்லாந் துயிலுறல்
கண்ட சனகி துயர
தொருவ விறத்தனன் றென்று குருக்கத்தி
யோரஞ் செலமா ருதியத்
தருணமி ராமராம ராமென வந்து
தாழ்ந்திடக் கண்ட சனகன்
திருமகட் குற்றது சொல்லிப் பிரானின்
றிருவா ழியையுங் கொடுக்க. [அச]

கொடுக்கப் பரிச தெரிசவே தைசெய்
குளிகையி னேரெதி ராக
வடுத்த பொருட் போலுயர் மாறுதலை
யடைந்தணு மானைப் புகழ்ந்தென்
னிடுக்க ணறுத்தநீ யான்சொற் றிறம்பா
திருப்பினு லகேழொ டேழா
மடுக்கு நிலைபெய ரூழிக்கா லத்து
மழியா துவாழி யவென்றுள். [அசு]

அழியாது வாழி யத்தாற்சுக் கிலஞ்சே
ராசயக் காப்பு தளரவ்
வுழியுழி வெய்த விந்தோடிக் குருக்கத்தி
யோரங் செலுங்காற் சுழினை
விழிப்பெய்தித் தாரணை செய்துயி ரின்கிளை
வீறெய்த வுற்ற துசொல்லி
யழிவைத் தடுத்துக் கலையாழி யான
ததனிடஞ் சேர்க்க நலமே. [அகூ]

நலஞ்சேர் பரிச தெரிசவே தைசெயு
நன்மணி யென்ன வுயர்வா
நலமெய்தி யந்நல மீந்தழி யாமையை
நல்குஞ் சுழினை யதுநன்
நலமெய்தச் சொற்றிறம் பாமைத் திறமதி
னலிரண் டேழா மடுக்கு
நலம்பெய ரந்தத்து மந்த முருத
நலமெய்த விந்து செயலே. [அள]

செயவீர நீயிப் பெருங்கட லெப்படித்
தீர்ந்திங்கு வந்தை யெனவவ்
வுயர்பே ருருவ மெடுதத்ண்ட கூட
முருவ வளர்ந்தது கண்டு
வியந்து முழுவுருக் காணவெட் டாமையால்
வீர அமைதி யெனலும்
பயந்தரத் தோற்ற மடங்கக் குறுகிப்
பழைய நற் றேற்ற மமைதல். [அன]

அமைதி யொடுகதி கொள்ளுஞ் சுழிமுனை
யாக்கம் பெறவிந்து செய்ய
விமைப்பி லெழுந்தண்ட வுச்சி கடந்து
விளங்க வுயர்ந்தே நிமிர்ந்தங்
கமையா மனபூ ரகங்தாண்டுயர்கதி
யாய்விந் துயர்ந்த நலமே
யமைய வமைவாங் கதிகொண்டு நாடி
யடங்க லுயர்வு பெறவே. [அஙூ]

பெறற்கரி தான வரங்க ளிராவணன்
பெற்றிருந் தாலு மயனுற்
பிறன்மனை புக்கி யறம்பிழை செய்யிற்
பிராண னழிவு றுசாப
முறலாலு மற்று டவர்கள் தொடவே
முடியாமை யாலு நலமா
யிறவா திருக்கின் றனிலெரு திங்க
ளினில்வந்து மீட்க விலையேல். [அச]

இலையென் றெனக்கந் திமக்கட ஞங்கே
யியற்றிடச் சொல்லி டெனவந்
நிலையொன்று மெய்தா தெனத் தேறுதலை
நிகழ்த்த மனது மகிழ்வாய்க்
கலையிற் பொதிந்த சூடாமணி யீந்து
கனிவுடன் செல்கென் றியம்பப்
புலைய முறையிந் நகரை யழித்தலாற்
போகிலே னென்று மொழிதல். [அடு]

மொழிதற் கருந்திற மென்பன வெல்லா
முறினும் பிராணன் விதியா
லிழிவாய் நடைகொண் டடுத்த வகத்தி
லியைசீவ நட்பி னணுகி
வழிவெய் திடலாலு மற்றய தொன்று
மணுகாமை யாலு மினிதே
யழியா துயிர்க்கிளே நிற்றல்பின் னேர்திங்க
ளாகி லழிதல் லறிந்தே. (கூடுஉ)

அறிவு நலத்தினுல் விந்து குளிர்ச்சி
யடையச் சுழினே யமிதஞ்
செறிதா ரணைசெய விந்திற் சூடாமணி
சேர்நலத் தாற்கீழ் தான
நெறிசேரு மூல நிலையைப் பெயர்க்க
நிமிர்கதி கொள்ளல் பொழிலே
முறியச் சிதைத்திலங் காபுரி யுள்ளவர்
மூர்ச்சை யுறவே யொலிக்க. (கூடுங)

ஒலி கேட் டிரர்வண னப்புன் குரங்கை
யுயிராய்க் கொணர்தி ரெனவே
வலிமை மிகுகிங் கரர்களே யேவ
வவர்க ளெதிர்த்த ணுமாணற்
பலியா கவுஞ்சம்பு மாலிக்கவ் வாறு
பணிக்க வவனு மணுமான்
வலிமைக்காற் முதுயிர் வீய வறிந்தைந்து
வாகினி மன்னர் களேயே. (கூடுச)

களேயாது போருக் கனுப்பிடத் தோரண
கம்பத் தடியி னணுமா
னிளேயா திருத்தலேக் கண்டு வெகுண்டெதி
ரேசென்றத் தீயோர் ஒருங்கே
வளேத்துப் போர்செய்யலு மாருதி யோங்கி
வளர்ந்தவ் வரக்கர் ரனீகங்
களேக்கொன் றவர்கள் தலேவரா மைந்து
கயவ ரில்லாவா றுகொல்ல. (கூடுரு)

கொலலுற்ற வாறுணர்ந் தக்க பெயர்கொள்
குமாரர்க்கவ் வாறே பணிப்ப
நலமென்றணு மனேடைக் கன்போர் செய்து
நமனுல கேற வதனுற்
புலம்பொலி கேட்டிந் திரசித்தனங் குற்றுப்
போர்மிக வாற்றி யணுமான்
பலத்தை யுணர்ந்து பிரமாத்திரமெனும்
பாச வலியாற் பிணித்தல். (கூடுகூ)

பிணிப்பு நிலேயாய்க் கவிழ்ந்தமூ லத்தின்
பிடிப்பற் றிடநடு நாடி
குணிப்ப யுயர்கதி கொள்ளு மொலியங்
குறவிரா வண்ண மலேயுங்
குணியால் மணஞ்சுவை யூருெளி யெல்லாங்
குறுகியொன் றென்று நடுவி
னணியான தண்டடி நின்ற சுழினே
யதுகதி கொள்ள வழிய. (கூடுள)

அழியாத கூர்மன் சுழிமுனே நேரி
லணுகியந் நாடி யயர
வெழிலி யொலிசெய லாநடு நாடி
யியக்கங் குறைவா யடங்கல்
அழிக்கா துயிரொடு கொண்டு வருக
வணுமனே யென்றே யரக்கன்
மொழியவவ் வாறு கொடுசெல ராவணன்
முன்பஃ தறிந்த வணுமான். (கூடுஅ)

அணுகியெண் டிக்குளோர் மேல்கீ முலக
மதிலுளோ ரெல்லா மொருங்கெங்
கணுநிறைந் தேவ லெதிர்பார்த் திருக்கக்
ககுபமா காய மதலங்
துணுக்குறப் பத்து முகங்களு நோக்கித்
துலங்க வரியா சனத்தக்
குணுங்க னுறக்கண்டு பாசம் பொடிபடக்
கோபித் துதற லெதிரே. (கூடுக)

எதிரில் சுழிமுனே நாடி யயரா
தியங்க நடத்திப் பிராணன்
வதியு மிடமுறச் செய்யந் நிலேய
மதிலெண் டிசைமே லொடுங்கீ
ழதினு நிறைந்த கருவியின் கூட்ட
மடங்கல் சமைவா யிருக்கப்
பதியிலெண் டிக்குமேற் கீழாந் திசையது
பத்துத் தலப்புந் துலங்க. (கூடு)

துலங்கு தலேகொள் பிராணனேச் சேர்ந்து
சுழினே யயர்வு தெளிய
லிலங்கை யரசன் முன் னுன்னத மாய்வீற்
றிருந்தெம் பிரான்றூ துனக்குச்
சொலச்செய்ய விங்குற்றேஞ் சீதையை விட்டுச்
சுவாமீ சரணென் றடைந்து
நலமெய் திடுதி யிலேயேற் பிரானம்பி
னற்கிளே சோ வழிவாய். (கூடுக)

அழியா வரமொடுன் சீருஞ் சிறப்பு
மழியு மெனச்சொல்ல வேயம்
மொழிசெவி சுட்டிடக் கேட்டு மிகவு
முனிந்திவ னைக்கொல்லு மென்று
விழிதீ யுகச்சொல நீதியன் றென்று
விபீடண னுங்கே தடுக்க
விழிவாங் குரங்கிதன் வாலைப் பொசுக்கொரி
யிட்டோட் டிடுமென் றிசைக்க. (கூஎஉ)

இசையாப்பிராண னெதிரி னிலைகொண்
டியங்கிச் சுழினை யுயர்வா
மிசைசேர் குறியா யுயிர்க்கிளை மேன்முக
மெய்திச் சுயமா யவாம
மிசைசேரச் சிந்தை யுரம்பெறச் செம்மை
யியைய மதிய மிதத்தா
லசையா தமூலம் புறஞ்செல் கருவி
யடங்க லழிவ துடனே. (கூஎக)

உடலிரா வண்ண மலையுந் தமைகமை
யொழிந்தி டறேன்ற வொலிசெய்
திடக்கீழ் நிலையாம் பிராணனதிர்ச் சியாயச்
சீறிக் கெடுக்க முயல
வுடனே யபானன் றடுத்துச் சுழினை
யுயர்வழியாமாறு செய்யச்
சுடரொரி தோய்ந்தச் சுழினை குறைவாய்ச்
சுழன்றே டிடவே யொலிக்க. (கூஎச)

ஒலித்துக் குமுறுங் கடல்போ லரக்க
ரொருங்கே திரண்ட ணுமானை
நலித்திடச் சூழ்ந்தவர் வாலி லிலங்கை
நகரத் திலுள்ள கயிறுங்
கலிங்கங் களுஞ்சுற்ற வாலைப் பலர்களுங்
கைகளாற் முங்கிப் பொறுத்து
வலிவாய்ப் பிடித்திட நெய்யால் முழுது
மறைய நனைத்தெரி மூட்ட. (கூஎங)

எரிமூட்டிச் செய்தி யிலங்கையுள் ளார்கள் கேட்
டேளனம் பேசி மிகவே
சிரிக்கவீ தெல்லா மறிந்த சனகிதன்
சிந்தை மெலிந்து சுடர்வீச
செரித்தேவ நீயனு மாற்குக் குளிர்ந்தி
ரெனவேண் டிடச்சொற் றிறம்பா
வரிவைகற் பாலவன் மாருதி வாலென்
பதுவும் நடுங்கக் குளிர்ந்தான். (கூஎசு)

குளிர்ந்தன வண்ட புவனத்தீ யோடு
கொடுநர கங்களொ ரேழுங்
குளிர்ந்தன வூழி நெருப்பென் னெருப்புங்
குளிருதல் கண்டு சனகி
யளித்த நலமென் றறிந்துயர் பேருரு
வங்கொண் டுவானுற வோங்கிப்
பளிச்சென்று விண்ணூடு பாய வரக்கர்கள்
பாரினில் வீழ்ந்துமடிதல். (கூஎள)

மடியா வதநிலை வாயுக் கிளையெலா
மாறு படநடு நாடித்
துடிப்பதறச் சூழ்ந்து மூலத் தொியதிற்
றேயும் படியே யழுத்திப்
பிடிக்கவும் மூலத் ததவாயு வெல்லாம்
பிறங் கொலி செய்ய வதுபோய்க்
கடிதே யுயிர்க்கிளை சார வமிதாற்
கனல்குளி ராமா றிசைக்க. (கூஎத)

இசைசே ரமுரியாங் கற்ப நலத்தா
லெரிகளெல் லாமுங் குளிர்ந்த
திசைமேவு மண்டபிண்டத் டத்தொரி ஏழா
கியகீழ் நிலைய வெரியு
மசையாத மூலவெரியோ டொரியெலா
மாங்கே குளிர வுயிரி
னசையாங் கிளைதரு மிவ்வரு நன்மையி
னுநடு நாடி கதியாய். (கூஎஙு)

கதிகொண் டுயர்ந்தண் டமுட்டியே பாயக்
கனலி லழுத்திய வாயு
வதினிலை கீழுற லாமணு மான்வா
லதைப்பா தகர்சே ரிலங்கைப்
பதியினி லெங்குஞ் செலுத்தி யொிதழற்
பற்றச் செயவ னகர
மதிற்பெருந் தீமண்டி யுண்ணத் தொடங்க
வரக்கரெல் லோரும் மருண்டே. (கூஎல)

மருண்டேகி வாரிதி புக்கி யொளிக்க
வளரொரி யெங்கும் படர்ந்தங்
கிருக்க விடமிலா தெங்கு மொிய
விராவண னில்லு மொிய
வுருத்தவ னீதென்ன வூழித்தீ யோவென்
றுரைத்துக் ககன வழிமே
லிருக்க வணுமா னெனுங்குரங் கிட்டதீ
யென்ன மிகவுஞ் சினந்தே. (கூஎஙு)

சினந்தீர வப்புன் குரங்கையுங் கொன்றுசெந்
தீத்தேவை யிங்கு கொணர்தி
ரெனவரக் கர்கள் வெகுண்டனு மானே
யெதிர்க்க வவனு மெரிவா
லனலுள் வளைத்துக் கொலவக் கினித்தேவு
மஞ்சி மறைய வணுமான்
றனலிற் குளிர்சூழ லுற்றச் சனகியைத்
தாழ்ந்து ககனத்தி லேகல். (அசஉ)

ககனத்தி லேகு முயர்நடு நாடி
கதிகொண் டதோகதி வாயு
மிகச்சேரு மூலத் தெரிவளர்ந் தோங்கி
மிளிர வுயர்கதி கொள்ளத்
தகவாற் பெரும்பாழ் நெருப்புப் படரத்
தவிர்தத வாயு வொளிய
வகமிரா வண்ண மிழியும் பிராண
னதுசே ரிடமு மெரிய. (அசஊ)

எரிதாவி யோங்கப் பிராண னுயர்ந்தண்ட
மேகிநடு வான நாடி
திரியா தொடுங்கவம் மூல வெரியதுஞ்
சிக்கென் றடங்கு வகையுச்
சரிக்கவுஞ் சேர்கீழ் நிலேவாய் வொழியத்
தழலு மறைய மறைகட்
குரித்தான நாடி குளிர்சூ ழுயிர்க்கிளே
யுற்றண்டந் தாவ வுயரல். (அசச)

உயர்ந்து ககன வழிதாவி மைநாக
முற்றுற்றது சொல்லி விண்ணி
னுயர்ந்து வருகையில் வானரர் கள்கண்
டுவகை மிகுத்தார்ப் பரிக்கச்
செயநமக் கென்றவ் விடங்குதித் தெல்லாந்
தெரிவித் திதுந மிறைவ
னயர்வற வொல்லையிற் சொல்வோ மெனநடந்
தாங்கு மதுக்கா டடைந்தே. (அசஎ)

அடவி நிறையு மதுவுண்டு நீண்டநா
ளாகார மில்லா திருக்கு
முடல்மெலி வைப்போக் கிடவணு மானிட
முத்தரம் பெற்று மதுசே
ரடவி புகுந்து மதுவுண்டு காவல்செய்
வானே யடித்துத் துரத்த
வுடனவ ணெடி யலறிச் சுக்ரீவர்க்
குணர்த்த வவனுங் களித்தே. (அசஅ)

களிப்பு மிகுதியாற் செய்தமை யென்று
கருதிடும் போதி னணுமான்
களிப்பு மிகவோடி வந்து வணங்கியே
கண்டேன் றலேயாய கற்பி
னெளிவீசு தெய்வ மணையநல் லாளையென்
றேதிப் பிரானனின் மனது
குளிரப் பிராட்டியார் சொன்னதுஞ் சொல்லிக்
கொடுத் தான்சுடா மணியையும். (அசக)

சுடாமணி யாய்விந்து துறுநலங் கொண்டு
சுழிமுனை மேலோங்கி யண்ட
கடாக முயரும் வழியிற் சுகப்பெருக்
காம்நிலே யுற்ற மிதநீர்
விடாது பொழிந்துயர் கான்மன பூரக
மேவுறு நாடியெ லாநின்
றிடாது கதிகொள வுற்றங்கு தாரணை
மேம்படச் செய்து நலமே. (அசன)

நலமிக விவ்வா றகன நிலேமன
நாடியே நாடி யெலாமத்
தலமே செலக்கதி கூடி யனுகதந்
தாண்டி விசுத்தி நிலேயின்
நிலவமி தத்தைக் களேப்பற நாடி
நிறப்பச் சுழினை யுதவப்
பலமிக வாயமித பூரகஞ் செய்த
பண்பால் வலுத்துக் கதித்தே. (அசஅக)

கதித்தந் நிலேயத் துறுநாடி சென்ற
கனல்சே ரிடையா னநாடி
யதிலுற வந்நலத் தாலுயர் வெய்திடு
மப்போ துயர்ந்தசுழினை
கதித்தோடி வந்தங் கடங்கித் தெளிவாங்
கதியான் மனம்போத மெய்த
வதிநல மாங்கற் பஞ்சேரக் குளிர்ந்தவிந்
தாம ணியையும் பொருத்தல். (அருப)

பொருந்து நலமணி கண்டு பிரானுளம்
பூரித் தினிச்சீக் கிரத்திங்
கிருந்து செலவேண்டு மென்னவவ் வாறே
யிராம ரிலக்கு வணர்க
ளிருவரை மாருதி யங்கதன் றேண்மே
லிருத்திச் செலவா னரரெம்
மருங்கினுஞ் சூழ நடத்திநீ லன்செல
வந்துற்றனர்தென் சமுத்ரம். (அருக)

சமுத்திர வித்தாய்க் குளிரு விந்தெய்து
தகவான் மனம்போ தமுற்றுச்
சுமுக முறக்கதி யாய்மனம் புத்தி
சுழிபின் கலையுற நாடிச்
சமுக முயர்கதி யாய்நடை கொண்டிடச்
சங்கினி நாடி யுதவக்
குமுகு மெனவலை சேர்மன பூரகங்
கூடல் சுபம்பெ ருகவே. [அருயஉ]

அங்கிதாரணை அமிததாரணைப் படலத் தொகுப்பு

சுபம்பெரு கச்செய வண்டத்தை முட்டிச்
சுழிமுனை நாடி கதிகொண்
டபவருக் கந்தர வேமன பூர
மதுகடந் தேகு விசையிற்
சுபவ திட்டான நிமிர்ந்து தடுக்கச்
சுழிமுனை நாடி நிலையா
துபதச வந்தமா மூலதா ரையதி
லுற்றடங் கிப்பின் னெழும்பி [அருயக]
எழும்பி யடங்க வெதிர்கலை யோமென்
றிலங்குமூ லத்து ளணுவா
யழுந்தி யிருநான் கிதழு நடந்தே
யயர்ந்து சுழன்றெ ருபாங்க
ரழுத்துயி ரின்கிளைப் பையிலணுவா
யடங்கிப் பிராண னுறலைப்
பழுதின்றி விந்துற லான தகவாற்
பதிந்தலஃ தயர்கதி கொள்ள. [அருயச]
கதிகொண லத்தா லுயிர்க்கிளை சூழ்ந்த
கருவிக ளெல்லாந் தளர்ச்சி
யதிகமாய்ச் சோரக் குருக்கத் தியோர
மழிவெய்த விந்து செலலும்
மதிய மிதத்தா ரணைசெய்து விந்து
வலுவாக வேகலை யாழி
பதியச் செயவுயர் வேதைக் குளிகைமுன்
பாம்பொரு ளென்ன வுயர்வாய். [அருயகு]
உயர்மாறுதலை யடைந்து சுழிமுனை
யோங்கு நலமாக வென்று
முயர்ந்தழி யாமையைக் கற்ப நலத்தா
லுறச்செய லானடு நாடி
யுயர்கதி கொண்டண்ட முட்டி யெழும்பியுங்
கோங்கி யடங்க லிலைவிந்
துயர்நலம் பெற்றுச் சுடாமணி சேர
வுதவச் சுழியின் முனையே. [அருயசு]

முனைந்துயர் வான கதிகொண்டு மூல
முலையச் செலவே பிராணன்
முனைந்துகீ ழாங்கதி கொள்ள வுறுமண
மோடு சுவையூ ரெளியாங்
கனைந்துயர் தண்டடிநின்ற சுழிமுனை
யாலழி வெய்த வெழிலி
யனைய வொலியெதி ராகச் சுழினை
யயர்ந்துமூ லத்தை யணுகி. [அருயள]
அணுமா வுருக்கொளு நாடிமூ லத்தி
லதமூர்த் துவமெண் டிசையெங்
கணுநோக் குறுங்கீழ் நிலைவாய் வெதிராய்க்
கதிகொண் டுயிரி னசையை
யணுகிச் சுயவாம முற்றுமனம் போத
மாயமி தத்தா ரணையெங்
கணுஞ்சேரக் கீழ்நிலை யாவன வெல்லாங்
கழியுங் குறியா யொலிக்க. [அருயஅ]
ஒலிநே ரெதிராய்ப் பிராணன் சுழினையை
யோங்குமூ லத்தி னொரியில்
வலிதா யழுந்தச் செயவிந்து கற்ப
மதினலஞ் சேரும் பலத்தாற்
சலித்த தினுங்குளி ராயெத் தலத்துத்
தழலுங் குளிர்ந்த தகவான்
வலிமை மிகவாய்ச் சுழிமுனை யோங்கி
வளரங் கிதார ணையதே. [அசுபக]
நயமோங்கச் செய்யப் பிராண னுயர்நிலை
நாட நடுவா னளடி
இயங்கப் பிராண னெதிரொலியா லங்கி
யேகச்சுழி விந்து நண்ணி
யுயர்ந்து சுகவதிட் டானத் தமித
முறுதா ரணைசெய் தெழும்பி
யயரா நடைகொள் மனபூ ரகத்து
மமிதம் பொழிந்தே நிமிர்ந்து. [அசுப]
நிமிர்நா டிசூழ வுலகதந் தாண்டி
நிலவமி தஞ்சேர் விசுத்தி
யமிதம்பூ ரிக்க வுயர்தா ரணைசெய
வந்நிலை நாடி யகனற்
சமிப முறும்போ துயர்நடு நாடி
தணிவாய் மனம்போ தமெய்த
வமித நலஞ்சேர் சுடாமணி யாய்விந்
ததுசேரக் கற்ப நலமே. [அசுபக]

நலமிக் குயரமி தத்தா ரணைசெய
லான்மனம் புத்தி மிகவே
பலமாய்ச் சுழிமுனை பின்கலை நாடியைப்
பற்றிச் செலச்சங் கினிமெய்
நிலவிடு நாடி யெலாங்கதி கொள்ள
நிகழ்த்த மனம்பூ ரகங்கொள்
தலத்தை யணுகிச் செயம்பெறு மார்க்கத்
தடைந்தவா றீது வரையே. (சுசுபஉ)

அங்கிதாரணை அமிததாரணைப் படலத் தொகுப்பு முற்றிற்று.

ஒடுக்கப் படலம்

இதுவரை தாய்க்கருவேற்ற செனனங்க னெத்தனை கோடியளவஃ
ததுவது வும்புதி தென்னத் திரையோத மாயியை மாயை யொடுங்கு
பொதுவது வானமெய் ஞானத் துலங்கும் புவியண்டரண்ட புவன
மதுபுகழ் சித்தெலாந் தேடிவந் தெய்தும் அராஉமா என்னு மவரை. (சுசுபக)

வரைவி லெரியா லிலங்கை யழிவுற்ற
வற்றைமுன் போல வமையென்
றுரைக்க மயனுக் கவனுமுன் போலவே
யுற்பத்தி செய்யவதிலுற்
றரசவை கூட்டி யணுமான் செயல்பற்றி
யாலோ சனைகள் நடத்தப்
புரையே ரெலாந் துன்மதிகூ றவீடணன்
புத்தி சொலல்கேட் டிகழ்ந்தே. (சுசுபச)

இகலோ ருறவுகொண் டென்செல்வங் கொள்ளு
மியல்பாந் துரோகி யடவென்
முகநோக் குரு தகலென்று வெகுண்டு
மொழியவ வனஞ்சி யொன்றும்
புகலிடந் தோன்று திராம ரிடத்தே
புகலாக வெண்ணி விரைவிற்
ககன வழியினு லங்கெய்தி யேரா
கவசர னென்றே யியம்பல். (சுசுபடு)

இயமிக்கு மூலத்தெரி யோங்கி முன்பா
மியற்கை யறவே யமைந்த
நயமறக் கீழாம் பிராணன் கதித்தலி
னுற்றணஞ் செய்வாயு முன்பா
மியற்கையாய் மூல மமையச் செயவங்
கியங்கிப் பிராண னெடுசே
ருயர்வாயுக் கும்ப லதோகதி யாக
வொலிக்க விசையா தெதிர்த்தே. (சுசுபசு)

எதிர்மறை யாக வபான னியங்க
வெழின்மூலா தார நிலய
மதிநல மெல்லா மபான னுறவா
மதுதோன் றிடலாற் பிராண
னதிமாறு பாடுகொளவே யதிலுற
வாந்தொடர் பற்றே யுயர்ந்த
கதியாய் மனபூ ரகத்தி லமைவாங்
கதிகொண் டிடலா மபானன். (சுசுபஎ)

அபானனும் விட ணனிரா கவசர
ணம்மென் றழைத்த வொலிகேட்
டபாய மெனவந்த தஞ்சலி ரென்ன
வணுமா னுரைத்தெம் பிராட்டிக்
கபாயம் வராது காப்பானே னிலங்கை
யரையர்க் கிளையோ னெனக்கங்
கபாய விளைவைத் தடுத்தோன் சரனுமக்
காரு னெனரா கவர்க்கே. (சுசுபஅ)

அவர்நலந் தோன்ற வுரைக்க வவனை
யழைக்கச்சுக் ரீவர்க் குரைக்க
வவனப் படியே செயவீ டணன்வந்
தடிபணிந் தேத்த மகிழ்வா
யவன்முக நோக்கி யுலகேழோ டேழா
மடுக்கு மென்பேரு நிலவு
மவளவு நாளு மிலங்கைப் பெருந்திரு
வானது னதே யளித்தேன். (சுசுபக)

அளித்தே னெனவே மகிழ்ந்துன் திருவடி
யாமெள் ளிசூட்டு கெனவே
களித்தீய்ந் தெலோரு மறிய வலமதா
கச்செய் தனர்க ளவனை
விளித்தி றையோனி லங்கைப்பதி யின்றிறம்
விள்ளுக வென்ன வவனென்
றெளிக்கா திராகவர்க் குள்ள படியே
யுரைக்க தொடங்கல துவே. (சுசுப)

அதுமன முற்றமை வாங்கதி கொள்ள
வழல்நா டியாங்கே யமைத்துப்
புதுமை யுறவுயி ரின்கிளை காப்பாய்ப்
பொருந்திய வாயு புரியெட்
டதுளுரை வாய்வுட னும்வாய் வழல்நாடி
யாங்கழி யாது நலமிக்
கதுவாக் கபானன் மனநிலை சேரக்

கலையா தபானனைக் கூடி மனநிலை
காட்ட வபானன் குழைந்தந்
நிலையிற் படிய விரண்டே ழடுக்கு
நிலையோடு வேத நிலவுந்
தொலையாத கால வரைபு ரியட்டத்
துறைநலஞ் சேரு நலமே
யுலையா தளித்தடை யாள முடியி
லுறவே நடத்த வமைவே. [ஸ்ஷ்க]

அமைந்து புரியட் டமாமூலத் தன்மை
யபானன் னுறவி னறித
லமைந்திரா வண்ணமதோகதி யாக
வலையும் பிராண னிலையாய்
யமைந்த புரியட்ட மேயிரா வண்ண
னரசா ளிலங்கை நகர
திமைய மலையா மகனலா தாரத்
தினிற்பிரி வான முடியே. [ஸ்ஷ்க]

முடிமூன் றெனவுரை மும்மண் டலத்தடி
மூலமெனுநல் லிலங்கைப்
படியதில் நுண்மைக் கருவி வகைகள்
பலவுள தாமத் தலத்திற்
கொடியோர் குழுவா மதோகதி வாயுவின்
கூட்ட மிடமும் வலமா
யடிக்கடி செல்லல்காப் பாக லதிற்கொடி
யார்களாம் வாயு வகையே. [ஸ்ஷ்ச]

வகையா மகம்பனி கும்பன்பிசாசன்
மகோதரன் றுன்முக னென்னும்
பகைநச் சுவாய்வுப் பிசமு நடுக்கம்
பருவ யிறும்முக வாத
மிகைநோ யிரவிப் பகைஞனுங் கும்பன்
விலங்குநா டன்றூம நாடன்
றிகைக்க நயன மறைப்பு வயிறுநோய்
தீயவா யுக்குத் தடைப்பே. [ஸ்ஷ்ரு]

அடைவாம் பெரும்பக்கன் வேள்விப் பகைஞ்
னவன்பக வாய்வக் னிமந்த
முடையவாய் வெல்லா மிலங்கையா மூலத்
துறுமீ தெலாவற் றினுந்தீ
துடைபிர தத்தனுந் தம்பனவாயுவென்
றென்றுண் டிராவண் ணமாலை
னுடைய விளவலாங் கும்பகண் ணன்னெனு
மூர்க்கனுங் குண்ட லியதே. [ஸ்ஷ்கூ]

இயறேவி யென்னுஞ்ச ரசோதி வஞ்ச
மியற்றலா லென்றும் முறங்கு
மியல்புள்ளதான திராவணன் றேன்றலா
மிந்திர சித்தாய கூர்மன்
கயவ னிளயோ னதிகாயன் றேவாந்த
கன் நராந்தகன்றி ரிசிரா
வுயர்தூல வாய்வும் மயக்கமாம் வாயு
வொடுவெறி முத்தொந்த வாய்வே. [ஸ்ஷ்ள]

அவாயுவுக் கூட்டத் ததிப னெனுமிரா
வண்ணன் பிரம னெனுநற்
சுவாதிட்டானத் தொடர் மூன்றும் விசுத்தியிற்
றேன்றி யதனுற் பலஞ்சேர்
சுவாப மெலாம்பெறல் வேதனின் பேரர்க்குத்
தோன்றலாய்த் திண்மை யுறலா
மிவாறு னவனெண்டிசை யெங்குஞ் சென்றுங்கு
வெற்றி யடையு நலமே. [ஸ்ஷ்ஜ]

நலமில் பிராண னுலகா முடலெங்கு
நாடி யெதிரொன்று மில்லாப்
பலத்தா லகன நிலையாங் கயிலைப்
பதிதாண் டவொண்ணுத தாலத்
தலமும் பெயர வதனடி யாயிரத்
தாண்டாஞ் சுவாசம் மியங்கித்
துலங்கு மிடத்திலொரு தலையா மூர்த்
துவகதி யற்றே யழுந்தல். [ஸ்ஷ்கூ]

அழுந்திட மூனரைக் கோடியாண் டாமெய்
யதிற்றுளை யெல்லாந் திரிந்தெப்
பொழுதுந் தொலைந்திடும் வாளாம் முரிவும்
பொருந்த லெண்டிக்குக் காரிக்கொம்
பழுத்திய மார்பு புரியட்டந் தன்னி
லழுத்து முரமா மிரண்டோ
டெழுகி ரகங்களா மாதார மண்டல
மென்னு மொன்பான்ப டியதே. [ஸ்ஷ்ய]

படியமி தித்திராவண்ணப் பிராணன்
படர்நடை கொள்ளல் வலிய
பிடியாக வாலியாம் பின்கலை நாடி
பிணித்தெழுந் தேழு கடலா
மடியேழ் நிலையும் படிய விராதே
யலையும் பிராண னுறலப்
படிக்கார்த்த வீரிய னுமா யிரமிதழ்ப்
பத்மத் தலத்து மிரிதல். [ஸ்ஷ்ஸ்]

இரிந்தா யிரவேத மாங்கலே யுற்றே
யியங்கிரா வண்ண னிலேமை
தெரிந்து சனகியெனும் விந்து மேனிலே
சேரச்செயல்நல் லிலங்கா
புரியெய்தச் சாகரப் பாதையை வேண்டியே
புல்லனே யுற்றேழு நாட்கள்
பாவிவாய் வருணனே வேண்ட வராத
படியால் வெகுண்டவ் வலேயே. (சஅஅடீ)

அலேயாழி யெல்லாம் வறண்டு புழுதியா
யாகும்படி வன்னி யம்பைச்
சிலேவளேத் தேவிட வேழுக டலுமத்
தீயாற் கொதித்த ததினு
மலேவேந்த னெய்தாமை கண்டு பிரமாத்தி
ரத்தைத் தொடுக்க வருணன்
நிலேகொளா தோடோடி வந்து வணங்க
நிகரி லாவத் திரமதே. (சஅஅக)

திரளாய் மருக்காந் தத்தரத்துறை வெய்யவர்
தீயும் படியே விடுத்தல்
முரணு மனபூ ரகவழி மூல
முறப்பின் புறம தணையுஞ்
சரத்திற் றுயின்றேழ் நிலேரவி செல்லத்
தனேநா ளளவு கிரியைக்
கரன்வச மெய்தாத தால்மூல தண்டாற்
கனற்று ரணேயே செயலும். (சஅஅச)

செயவன் னியோங்கி யெழுநிலே யெங்ஙணுஞ்
சேர்த்தும் வசமுற் றிடாதா
லயராப் பிரத்தியா காரஞ் செயவாங்
கணேந்தேழ் நிலேயான மூலத்
துயர்மீன மாம்வாசிச் சிக்க லொழித்தங்
குறவாய்க் கிரியைக் கரன்ப
தியலுஞ் சரஞ்சென்று மூல விருளற்
றிலங்கும் படிசெய் நலமே. (சஅஅகு)

நலமா யிலங்கை யுறவழி வேண்டிட
நன்றுய்க் கடலி னணையிட்
டிலங்கையுட் செல்லு திரென்றுந் தாழாததை
யான்றுங் குகின்றே னெனவச்
சலதிவேந் தன்சொல வானரர் கூட்டங்க
டாவி மலேகள் கொணர்ந்து
பலமாய் நிறைக்க நளனெரு வன்கரம்
பற்றி யடுக்க வணையே. (சஅஅங)

அணேந்திட மூல நிலேயதிற் றுரை
யமையக் கிரியைக் கரன்றுன்
துணேயாக வென்று முதவிட நாடித்
தொடரெலாஞ் சென்னி யதிலுற்
றணேய யிடையினும் நள்ளி யெலும்பி
னதுமூலா தார நடுவா
மணேயெனுந் தாரை யமையச் செயுஞ்செய
லாகுந் திருவ ணேயதே. (சஅஅஎ)

திருவ ணேநூறே சனேநீள மாய்ப்பத்
தியோசனே தூர வகலம்
பொருந்த வமைத்தே பிரானிடம் வந்து
புகலச் சனகன் மகளாந்
திருவினே யெய்தினுர் போல மகிழ்வெய்
தியேவா னரர்கள் படையின்
பெருந்திர ளோடுறு மாருதி வீடணன்
பின்முன் னுறச்சென் றடைந்தார். (சஅஅத)

அடைவாக மூலத் திதழ்பத்து முட்பிரி
வாம்நூ றிடமெங்கு நாடி
நடைகொளத் தாரை யமைய வறிந்தத
னனல் லுமிரி னசையை
யடைந்தமை போன்மகிழ் வெய்தியே நாடியெல்
லாமுஞ் சுழினை யபாணன்
புடைசூழப் பின்முன் மனம்புத் திமூலத்துட்
புக்கலாந் தாரை வழியே. (சஅஅஙு)

வழிசென் றமர்ந்து சுவேலப் பெயராம்
வரையுற் றிலங்கை யளவு
மொழிந்திட வீடண னுருரை கேட்டிடு
மொல்லே யிராவண் ணனுரவ்
வுழியிரா மன்சேனை காண வுயர்நிலே
யுபவிருக் கைசேர்ந்து நோக்கப்
பழியோ னெதிர்சுக் கிரீவன் பாய்ந்தேமுடி
பத்தையும் பற்றித் திரும்பல். (சஅஅய)

திருகு நிலேயி லொருமுனே யுச்சியிற்
சேர்ந்துமூ லத்தி னியல்பைப்
பெருக வபான னுறவா லறியப்
பிராண வாய்வும்மெதி ரோங்கி
யொருவுயர் வாம்நிலே சேர விடைகலே
யுற்றப் பிராண னிலேமை
தெருமரச் செய்தே மனம்போத முற்றுத்
திகம்நுலஞ் செய்யு முறையே

முறையே யெழுபத் திரண்டுவெள் ளஞ்சேனை
முற்றுகை செய்தே யிலங்கைக்
கிறையிட மங்கதன் றூது சொலச்செய்
திணங்காமை கண்டு சமரென்
றறைய விராவணன் மாலிய வான்சொல்
லதைமறுத் தாயிர வெள்ளம்
மிறையரக் கர்படை சூழ வெதிர்க்கலும்
வீரரும் வீரர் மலைந்தார். (சுகூஉ)

மலையாத மாருதி யோடிரா வண்ணன்
வலியகுத் துப்போர் தொடுத்துக்
குலைந்தா னணுமனு மவ்வா றுறலக்
குவண னெதிர்த் தேவு வேலால்
நிலைதளர்ந் தானணுமான் றேளிலுற்றந்
நிலைகண் டிறையோ னெதிர்க்கத்
தலைமுடி யோடுபடைக்கல மற்றுத்
தளர நாளைவரு கென்றார். (சுகூங)

வருகக் கொளுநிலை யத்துநா டிக்குழா
மாயிர வேழ்பத் திரண்டும்
பொருந்தவங் கத்ததப் பின்கலை மூலத்துட்
புக்க வுயர்வெய் திடாதாற்
றிருந்திடத் தாரணை செய்யச் சமானன்
றிரத்தடங் காதே பிராண
னருந்திர லாக வதோகதி வாயு
வடங்க லுடனே யெதிர்க்க. (சுகூச)

எதிருறு நாடிக் குழாத்துடன் மோதி
யிரியவி ராவண்ண வாயு
வதிமூன யாகச் சுழினையின் மோதி
யலமரச் செய்ய வதுநேர்
மதியு மயங்கச் சுழினை தெளிவுற
வாக்கிடத் சிந்தை சுழியுற்
றதினே குறவே பிராண னதோகதி
யற்றது வாகத் திரும்பல். (சுகூசு)

திரும்பி நிலைதளர் வெய்தி யரண்மனை
சேர்ந்தேழ் கடலு மதுசூழ்
பெருந்தல மேழொடு தீவு களேழும்
பிலமே ழொடேழு மலையும்
பொருந்தரக் கர்குழு வந்திங் குசேரப்
புகலென்று தூதரை யேவிப்
பெருந்துயில் கொள்தம்பி கும்பகன் ணன்செய்
பெருநித் திரையைக் கலைக்க. (சுகூசு)

கலையாவிறட்கிங் கரர்களை யேவிக்
கலைக்கக் கலையாமை யாற்கைத்
தலமாவை யாளியை யேவி முடியாத
தாற்பல மல்லரை யேவ
மலைப்புற் றவர்கள் வன்கா திற்றுரை
வளைசின் னமூத வதிலுந்
தொலையா வுறக்கங் கொளத்தண் டுசம்பட்டி
தோமரங் கொண்டே யடிக்க. (சுகூள)

அடிக்கச் சுகமா யயர்வுற் றுறங்க
வவர்கள் கரஞ்சோர்ந் துயேகச்
சடிலப் படைகளை யேவ வதன்மிதி
தன்னலு மாகா தறிந்து
கொடிய வரக்கர்க ளாயிரம் பேருக்
குரைக்க வவரெஃ குலக்கைத்
தடிகொண்டு கன்னத் தடிக்க வுயிர்வந்
தவன்போல் விழிப்புற் றெழுந்தான். (சுகூஎ)

எழுந்திரா வண்ணப் பிராண னியல்பழிந்
தேகிமூ லத்தி லியைபுற்
றெழுநிலை யான வடுக்குத் தலமு
மிதிற்சந் தியுங்கீழ தான
வெழுநிலை யேழுமூட்டத் தியிடத்து
மியங்குறு வாயுக் குழாங்கள்
முழுதும் பொருந்தக் கதித்துரும் பிக்கணின்
மூடித்துயில்குண் டலீயை. (சுகூக)

அலிலியை பில்லா விழிப்பு நிலையுற
வாக்கப் பரிசித்து மோதி
யொலித்து முறசி யுருத்தி யடித்தே
யுறக்கங் கலைத்தே யெழுப்பல்
வலியரும் பக்கணன் பேருண்டி யுண்டுதம்
மண்ண னிடஞ்சேர வேயென்
நலியை யகற்றெனப் போர்க்கோலஞ் சூட்டியே
நால்வகைச் சேனை கொடுத்தான். (உஅ)

கொடுந்திற லோன்பல புத்தி சொலவவன்
கொள்ளா ததனுல் வருத்த
மொடுபோர்க் களமெய்த ராகவன் வீடண
வோங்கலிற் கால்கர முற்றே
யடுத்த தெனவரு வோன்யா ரெனலு
மவன்றிறங் கூற வவனம்
மொடுகூ டினன்றென வவ்வா றவனுக்
குரைக்க வினங்கா தறிந்தே. (உஅக)

அறியாமை மிக்க வரக்கர் குழாத்தொ
டணியாக வானர வீரர்
வெறிமிக் கபோராற்றி யேயழி வெய்திட
வேகும்ப கண்ண னிதனே
யறிந்து குரங்குப் படையெலாம் வாரி
யரைத்து நசுக்கிப் புசித்துச்
சிறிய கொசுகெனத் தேய்த்து வெறுங்களத்
தேதிரி காலே யெதிரே. (உக)

எதிர்த்துத் தளபதி யொவ்வரு வர்களு
மேமா மலைக ளெறிந்து
அதிரச் செயுஞ்சம ருக்கிளே யாமை
யறிந்திளே யோன்மா ருதிதோ
ளதினுற் றெதிர்த்து நிராயுத னுக்கி
யகலச் சுக்ரிவ னவனே
டெதிர்க்க வகங்கையுட் கொண்டிலங்காபுரிக்
கேக வழியி லவனே. (உக)

அவசமு றராம பாணம்படச்செவி
யைமூக் கையும்பேர்த் தெடுத்தாங்
குவகையு டன்மீன் டிராகவன் பக்க
லுறக்கும் பகண்ணன் னெதிர்க்க
வவனுக்கு நன்மொழி கூறவிணங்காமை
யால ண்ணலம்பி லவனு
கவபூ மியிற்றுண்டு துண்டாக வீதுத்தவக்
காலும் மெதிர்த்து வரவே (உக)

வரக்கண் டுவெய்ய சரங்களே மென்மேலு
மாரிபோற் றூவ வவனேந்
திரங்கிப் பலநன் மொழிகூறி யென்சிர
மீர்த்துச் சலதி யிடையிட்
டுரன்மிகு வெற்றி யடைவீ ரெனவே
யுரைக்க வவ்வாறம்பை யேவிச்
சிரங்கட லாழ்ந்திடச் செய்தெதி ரில்லாச்
செயம்பெற்று நிற்கு நலமே. (உஎ)

நலமிகுங் குண்டலி சத்தி விழித்து
நறவ மிதமா கவுண்டு
பலம்பெற்று யிர்வாய் வணுக வுரன்மிகு
பண்பா லுயர்வு நெறியே
துலங்க வதோகதி யற்றிடற் றேன்றச்
சொலித்துயர் நாடிக் குழாங்க
னிலங்கு நிலேசே ரபானற் கியைவுற்
றிடாமையா னடி யடர்வே (உஅ)

அடங்கலுங் குண்டலி சத்தியுட் பாய்ந்தும்
மீணைந்தும் புகுந்தும் முறைந்தும்
முடங்கப் பெருநாடி யொவ்வொன்று மண்ட
முளேகதி யாய்க்குண் டலியி
னிடம்பாய்ந் தடங்கச் சுழினையிற் புத்தி
யியைவாய்ச் சரங்கள் செலுத்தித்
தடங்கலுறச் செய்தொ துங்க விடைகலேத்
தண்மதி யாங்கு புகவே (உன)

புகுந்ததைக் கொண்டு புரியட்டத் திற்கீழ்ப்
பொருந்தச் செலுங்குண் டலிக்குத்
தகுந்த சரம மிதமாய்நினைப்புடன்
முக்க விடது கலையும்
மிகுந்த வுரங்கொண்டு குண்டலி கீழுரு
வெய்ய கதிகொண் டெழும்பிச்
சுகுண நிலையுற வுள்ளந் தெளிவாய்த்
தொடர்ந் தேயமிதஞ் செலுத்த (உஅ)

செலுத்துஞ் சரத்தாற் பொலிவெய்திக் குண்டலி
சேரெட்டிதழ் துண்டு துண்டாக்
கலுநல் லுணர்வு வரவே மனபூர
கத்தத னின்முடி சேர
வலுவாய்ச் சரத்தைச் செலுத்தி யுயர்வாம்
வகைசேரு நல்ல நெறியே
பலுகச் செயுமமி தத்தா ரணையே
பதிந்திட வாக்கு செயமே. (உக)

செயல்வல் லதீயோ குரைப்படி ராவணன்
சென்றே சனகி யவள்பால்
நயம்பல பேசியென் காமந் தீரென்று
நவில வதுகேட் டழன்றக்
கயவனே நிந்தனே கூற வவனுங்
கனன்றுதன் பக்கத் திலைக்க
வுயவுறக் கட்டுண்ட தந்தை யிராவணர்க்
கொப்பச் சொலலே யறிந்தாள். (உல)

அறிவிலாத் தீயவர் மாயச் செயலென்
றறிந்து மிகவுங் கொதித்துப்
பொறியிலோ யெம்பிரான் வாளியுன் னெஞ்சிற்
புகுக வுனது தலைகள்
தறிபட்டு மண்ணிற் புரள்க வுனது
தலைய னிளையார் சரத்தால்
மறிக்க வதுகேட் டலறநீ நானந்த
மங்கலச் சொல்லாற் களிக்க (உஅக)

களிப்பாக வீடணற் குன்செல்வ மாகக்
கனியவென் சிந்தை யெனக்கற்
பொளிவீசு நங்கை யுரைக்கவாங் கேதூத
ரோடிவந் தேகும்ப கண்ணன்
விளிந்தனன் ராம பாணத் தாலெனவே
விளம்பப் புலம்பி யகலக்
குளிர்ந்தன ளுள்ளஞ் சனகி திரிசடை
கூறினு ளுண்மை மொழியே. (உஅஉ)

மொழியு மதோகதி வாயுக் குழாங்கள்
முடுக விராவண்ண வாயு
வழியா நலன்மிக் குயிர்க்கிளைத் தான
மணுகி யிழிவாய் நடக்கப்
பொழியமி தத்தா ரணையால் வலிமை
பொருந்தி யசையாத விந்தவ்
வுழிகலங் கும்படி பொய்மயக் காங்கே
யுணர்த்த மிகவும் முரத்தே. (உஅக)

உரன்மிக் கிராமவாம் வாசி யழுந்த
வொழிய வதோகதி வாய்வச்
சரத்தினுற் கூர்மன் செயலற்றுத் தாழவித்
தன்மை யுறலா நலத்தாற்
றிரமா யபானன் புரியட்ட வைபவஞ்
சேருமிச் செம்மை விளங்க
வுரப்பெய் தலுங்குண் டலிமே னிலையி
லுறா லிராவண் ணவாய்வே. (உஅச)

இராவண் ணமோடி நிலைகுலை வெய்த
வெழில்விந் திளகா துகாப்பா
யிராநிற் கபானன் கிளைச்சுக் கிலப்பைக்
கினிய நலமே யளித்தல்
பராந்தக ஞகயான் செல்வே னெனவே
பகர்ந்ததி காயன் கிளம்ப
நராந்தகன் தேவாந்கன் முருகன்கால
னஞ்சினும் வெய்ய குலிசன். (உஅசு)

குலிசமே னிக்கால சங்கன் மருத்தன்னி
கும்பகும் பன்முச் சிரத்தோன்
வலிமத்தன் மத்தனும் மாலி முதலாம்
வயவரெல் லோருந் தொடர்ந்தா
ரொலிமிக்க வாரிதி பொங்கி யெழுந்ததை
யொப்ப நாற்சேனைப் பெருக்கப்
பொலிவுட ஞங்கது கேட்டி ளையோனும்
பொருத விற்கைகொண் டெழுந்தான். (உஅசு)

எழுந்தது பூசல் மலைந்தனர் வீரர்க
ளெண்ணற் றபோர்க ளதுபோ
தழுந்திட வம்பு மழையாய்ப் பொழிந்தே
யழித்தா னிலக்கு வணனப்
பொழுதினிற் முருகன் காலன் குலிசன்
புகல்கால சங்கன் மருத்தன்
விழுந்தனன் மாலியும் பட்டா னதுகால்
வெகுண்டதி காயன் னெதிர்த்தான். (உஅள)

எதிர்த்தா னிலக்குவ னங்கதன் மேளினுற்
றெண்ணிலா வம்பைப் பொழிந்தா
னதினவன் வீயா தறிந்து பிரமாத்தி
ரத்தைத் தொடுத்தே யழித்தப்
பதிநீங்கத் தேவாந் தகனனு மானெதிர்ப்
பட்டுயிர் பட்டா னராந்தன்
கொதித்தங் கதனுல் மடிந்தான் வயமத்தன்
குன்றினு னீலன்னு ரத்தால். (உஅத)

உரன்மிகு மத்தனும் மாண்டனனீலனு
லோங்கணு மாளு னிகும்பன்
சிரமூன்று டையோ னழிந்தான் கவிவேந்
தினுற்கும்பன் மாண்டா னிவாறப்
பரந்தலை வெற்றிட மாக்கு மிலக்குவன்
பண்பு கண்டோடி யதனை
யரற்ற விராக்கதர் கோனுக்குத் தூத,
ரறிவிக்க வெம்பித் துடித்தான். (உஅசு)

துடியா மதிதூல வாயு வெழம்பத்
தொடராய் வெறிகொள்ளு வாய்வுங்
கொடிய மயக்கவாய் வாட்டிடு வாயுவுங்
குன்றப் பிடித்திடு வாய்வு
சடிதியாய்க் குத்திடு வாயு முடக்குத்
தருவாய் வருசி யுதர
மடியான வுப்பசங் குன்மமும் முத்தொந்த
வாயு வதிக திமிரே. (உஅப)

திமிர்வாயு சென்னிச் சுழற்ற லிவற்றின்
றிரள்வாயு வெல்லாங் கிளம்ப
அமிதமாந் தாரணை புத்தி வலிமையி
னற் செய்ய வெண்ணற்ற நோய்கள்
துமிச மடைந்தன வாட்டல் பிடித்தல்
சுறுக்கெனக் குத்தல் முடக்க
லுமிழ்நீர் வழிதல் சுழற்றலிந் நோய்க
ளொழிய வதினுங் கிளைத்தே. (உஅக)

கிளைத்தெழும் பும்மதி தூலமாம் வாயு
கெடவங் கதமான நாடி
வளைய வமிதமாந் தாரணை செய்தும்
மடங்காமை கண்டே கதித்துத்
சளையாப் பிரத்தியார காரத் தழித்துத்
தணிய மயக்கைச் சுழினை
க்ளைய வெறியங் கதத்தா லழியக்
கதிசங் கினியின் வலியால். (உஉபஉ)

வலியற்ற திதிமி ரோடு திமிரு
மழியச் சுழினைக் கதிப்பால்
நலியுப்பச முந்திரி தோச தொந்தமு
நாசம தாக வுதர
வலிநோ யிடைகலை தாக்கவழி வெய்த
வாரு லிராவண் ணவாயு
பொலிவற் றயர்ந்து நிலைதடு மாறிப்
புரண்டு துடிக்கு மியல்பே. (உஉபக)

துடிக்கு மியல்பறிந் திந்திர சித்தனுந்
துன்புற் றிலக்கு வணனை
முடித்தல்லது மீளு கேனென்று வீரம்
மொழிந்து கடலன்ன சேனை
படியதி ரச்சூழ வாகவ பூமி
படரவீ தெல்லா மறிந்து
கடிய சமருக் கிலக்குவன் முற்படக்
கண்டிரு தண்டுங் கலந்த. (உஉபச)

கலந்து பெரும்போர் செயத்தானை மாண்டமை
கண்டணு மான்றேளி லேறி
இலக்குவ னம்பு மழையா லிராக்கத
ரின்குழு மாளச் செயக்கண்
டலக்கணுற் றிந்திர சித்தன் பெருஞ்சம
ராற்றிக் களத்தே விழித்துப்
பலவெண்ணி வஞ்சகப் போர் செய்ய
வானூடு பாய்ந்தேயுருவங் கரந்தான். (உஉபஞ)

கரவெண்ணந் தோன்று திலக்குவன் மேனி
களையாறும் போது கொடிய
அரவுப் படையை விடவேண்டி டிசையு
மழலாய்க் கருகும் விடத்தீ
பரவ விலக்குவன் றேளைப் பிணிக்கப்
பதறியே யொன்று மறியா
திரங்க வணுமான் முதலாம் படைவீர
ரெல்லோ ரையுமே பிணித்த. (உஉபங)

பிணிப்புற மாருதி மட்டு முணர்ச்சி
பிழையா திருந்தா னரக்கன்
துணிவாக விண்ணின் மறைந்தம் புமாரி
சொரிந்தே யிரத்தப் பெருக்கிற்
பணிவுறச் செய்திரா வண்ணனிடம் போய்ப்
பகர்ந்துடற்சோர்வை யகற்ற
மணியொளிச் சேக்கை யணைந்தான்
பிரானங்கு வந்தீதெலாமும்முணர்ந்தான்(உஉபச)

உணர்ச்சி யொடுங்கச் செயுங்கூர் மவாயு
வுருத்துக் குழாத்தோ டெழுந்த
குணங்கண்டு புத்தி களையா தமிதக்
குளிர்தாரணை செய் தடக்கவ்
வணத்தாற் பலங்கெட்ட கூர்மன் னடங்க
மறைநாடி சேர்ந்தஃ திணங்கு
மிணக்க மறிந்ததிற் புத்தி பொருந்தி
யிளையா தமிதஞ் செலுத்த. (உஉபத)

செலுத்த வணுவுரு வாய்க்கூர் மனண்டச்
சிகரத் தலத்துற் றிடிமின்
னலுஞ்சே ரொலிசெய புத்தியு நாடி
யரவுமிழ் நஞ்சுண்ட வாறுய்
யலுத்துப் பதைத்து வியர்த்துந் நடுக்குற்
றடங்க மறைநாடி யொன்றும்
வலுவற் றுணர்ச்சித் துடிப்போ டிருந்த
வதுபோது கூர்மன் மறைந்தே. (உஉபக)

மறையான கீழ்மூலஞ் சேர்ந்திரா வண்ணமாம்
வாயுவ தாக்கம் பொருந்து
முறையா யமைவுற வப்போது சிந்தை
மொழியுமீ தெல்லா முணர்த
லிறையா மிராம ருளஞ்சோர்ந் திவ்வாளியை
யீய்ந்தவ னேவந்து மாற்றிக்
குறைதீர்த் திடுக வீலையே லுலகங்
குலைய வெரியா லழிப்பேன். (உஉப)

அழிப்பே னெனவே வெகுண்டற மோர்ந்தமை
வாம்போ தரவங் குலைந்தற்
றெழிய வொலித்துச் சிறைவீ சபித
வுலவையால் மேனிவ டுவும்
சுழிந்த வுயிருந் திரும்பிட வானிற்
கருடன் பறந்து வருக
விழிப்புற் றெழுபது வெள்ளம் படைவீரர்

எழுந்தமை கண்டு மனங்களித் தண்ண
லெமது தவப்பய னுயிங்
கெழுந்தருள் செய்யுநீ ராரோகைம் மாறென்
றிதற்குத் தரமோ வெனவே
வழுத்த வதுபழ மைத்தொடரிந்த
வகைபின்னர் தோன்று மெனமேற்
கலுழனுஞ் சென்ரு ளிவைதூதர் பத்தான
கந்தரத் தோனுக் குரைத்தார். (உகூஉ)

உரைப்பா மனஞ்சோர்ந் திறைவ னருளா
லொழித் திடவேண்டு மிலேயேற்
புரையுற்றிக் காய மழியுமச் செய்கை
பொருந்தா தெனவோர்ந் தடங்க
கரையற்ற காதற் குருநாத னுச்சியின்
கண்ணமி தத்தாரை யூதவ்
விரைச்சலால் நாகவிட மற்ற தென்னவே
மீண்டுமுன் போலாய்த் தெளிந்த. (உகூக)

தெளிந்தது நாடியேழ் பத்திரண் டாயிரஞ்
செம்மை மிகுபுத்தி யுள்ளங்
களித்த திறையாங் குருவருள் பெற்றுக்
கனிந்தே யதற்கொ ரிணையா
யளிக்கும் வகையேது மின்றித் துதித்தாங்
கருளுந் தொடர்பு வினவக்
குளிர்ந்தவர் முன்னைத் தொடர்பாகும் பின்மக்
குறிதோன்று மென்று செலலே. (உகூச)

செலவுத் தரங்கேட்டு வேள்விப் பகைஞன்
றினகரன் சத்துரு மாலி
யலகையான் வச்சிர தந்தனிவ் வைம்படை
யாதிகள் சேனையொடு போர்த்
தலநண்ண ராக்கதர் வானரர் தானை
சமர்செய் தழிய வணுமான்
பலமாய்ப் புகைக்கண்ண னைவாலி சேய்பெரும்
பக்கனைக் கொன்ரூர் பதைக்க. (உகூடு)

பதைத்திட மாலியைக் கொன்றன னீலன்
பனசன் பசாச னுயிரை
வதைத்தா னிரவிப் பகைஞனைச்சுக் கிரீவன்
வச்சிர தந்தன் மடிய
வுதைத்தா னிடப னிலக்குவன் வேள்விக்
குறுபகை யோனைய ழித்தான்
இதைத்தூத ரோரோடி ராவ ணேசர்க்கே
யிசைத்தி டவுள்ளங் கொதித்தான். (உகூசு)

கொதிக்கு முதராக் கினிப்பகை வாயுசக்
குப்பகை வாய்வும் மயக்கம்
அதிருந்தலைச் சுற்றுப் பற்கிட்ட லிந்தவைந்
தாதித் தொடர்நோய் கிளம்பக்
கதிகொண்டு நாடிக் குழாங்கள ழித்துக்
கழியச் சுழினை கதித்தங்
கதிகப் புகைச்சலாங் கண்ணெயை மாற்றிட
வங்கத மான கலையே. (உகூன)

கலையாத பக்கவாய் வைக்கொல்லச் சங்கிளி
கண்டித் திடவே மயக்கைத்
தலைச்சுற்று வாயுவைப் பின்கலை யின்கிளை
தாக்க நயன வளியைக்
குலைக்க விடைகலை பற்கிட்டு வாயுவைக்
கோறவந் நாடி யுறவு
நிலையான புத்தி யதக்கினி மந்த
நிலைகுலையச் செய் தழித்தல். (உகூஅ)

அழிக்க மகரக்க ணன்சேணை யோடாங்
கணைந்து போர்செய்யப் பிரான்வந்
தொழிக்கக் குருதியாங் கண்ண னளனு
லொழியவே சிங்க னுயிரை
யழிக்கப் பனசனிதைத் தூதராற் கேட்டி
ராவண் ணனிரா வணிக்கு
மொழிய வவன்சேனை வெள்ளந்தொடர
முடுகிச் சமருக் கெழுந்தான். (உகூக)

எழுந்தன கண்கூசுவாயுத் தொடர் நோய்க
ளெல்லா மனது வலிமை
யழுத்தம தாய்த்தா ரணைசெய் தொழிக்க
வதிகுரு திக்கண்ணு நோயைப்
பழுதுற நள்ளியு றுநாடி செய்யப்
பதைப்பாங் கடுப்ப தறவே
முழுநல மாம்பின் கலைத்தொடர் நாடி
முடுகிடக் கூர்மன் கிளம்பல். (உகூஎ)

கிளம்பிச் சமர்க்களஞ் சேர்ந்து செயுமொலி
கேட்டுக் குரங்குப் பதாதி
யுளைநந் தொளிக்கப் பிரானனு மான்ரே
ளுறவங் கதன்ரேளி லேறி
யிளையோன் வரச்சேர்ந் திராக்கதர் சேனைக
ளெல்லா மொழித்தொழி யாதக்
களநிற் கிராவணி யோடிளை யோரனுங்

அவச மடைந்து ருவங்கரந் தேவிண்
ணகத்தூடு செல்ல வேலக்
குவன்பிர மாத்திர மேவ முயல
விராமன் றடுக்க வதனை
லவனமை வாக வரக்கன் படிறுசெய்
தற்கிலங் கையுட் புகுந்தா
னிவர்கள் செருவொழிந் தார்களி ராம
னிளையோன் றனிக்கப் பிரிந்தான். (உசுப)

பிரிவான நாடிக ளெல்லா மொடுங்கிடப்
பேரொலி செய்திட கூர்ம
னிரிய மனம்புத்தி யூக்க மிகவா
யியங்குஞ் சுழிபின் கலைசேர்த்
தரிய கதிகொண் டமிதச் சரத்தா
லளவிலா நோய்வாய் வொழித்துந்
திரிபின்றிக் கூர்ம னிலங்க லழிவு
செயப்புத் தியோர்ந்த மிதமே. (உசுக)

அமிழச் சரந்தா ரணைசெயக் கூர்மன்
னடங்கிச் சிரத்துச் சியேகச்
சிமிழ்க்கப் பிரத்தியா காரஞ் செயுங்காற்
செயற்றடை யாக மனது
கமித்திடப் புத்தி யமையவே கூர்மன்
கடிதேகி மூலம் புகுந்த
திமிதமாந் தாரணை நீங்க மனம்புத்
தியுந்தொடர் பற்றுக் கலந்த. (உசுச)

கலையா வுரன்மிக் கிராவண னெடு
கலந்தப் பிரமாத் திரத்தாற்
றெலைத்திட வெண்ணி மகோதரனைத் தானை
சூழ வனுப்ப வவனச்
சிலைவீர னல்வலி குன்ற வகம்பன்
றிறல்மா ருதியா லிறக்க
நிலைதளர் வெய்தி மகோ தரனண்ட
நிலைபுக் கிமாயை வலியால். (உசுடு)

வலியபோ ராற்று மமையத் திராவணி
வஞ்சமாய் விண்ணின்று வேதன்
சிலிமுக மேவப்பல கோடி யாய்வந்
திலக்குவன் மேனி யுறவே
சலித்துணர் வற்று விழுந்தா னணுமன
தானன் றளங்கள் மடிந்த
கலிநீங் கியதென் றிராவணி வெற்றிக்

புகுந்தபின் னண்ணலங் குற்றெலாங் கண்டு
புலம்பிமூர்ச் சிக்க வதனை
மிகுமெக் களிப்புடன் கேட்டி ராவண்ணன்
விரைவா யிராமன் சரத்தாற்
செகுத்த பிணமலை வாரிதி புக்கிடச்
செய்தே மனித னிலைமைத்
தகுதிகா ணென்று விமானத் திலேற்றிச்
சனகிக் குணர்த்தப் பணித்தான். (உசுள)

பணித்த படிகளங் காட்டச் சனகி
பதைத்துத் திரிச டையளாற்
றணிந்தா ளுணவுடன் வீடணன் போர்க்களந்
தன்னை யடைந்துற்ற தோர்ந்து
திணிமை மிகுமணு மான்களை நீங்கிடச்
செய்து வலிமிக் கசாம்ப
னணிமை யுறவவ ளேர்ந்தைந் தடுக்கலுக்
கப்பால் மருந்து மலையில். (உசுத)

மலைவாழ் கரணிகள் நான்குங் கொணர
வழிசொல் லமாருதி யோங்கித்
தலைவானிற் றட்ட நிமிர்ந்து கயிலைத்
தலத்தீச ளெடைந்து கர்த்தாள்
நிலைகண்டு திக்கெட் டுறைபா லகர்கள்
நிலைகளுங் கண்டு ககனத்
துலைதாண் டியேயுத் தரகுருவஞ் சேர்ந்து
சூர்யன் றுலங்கல் லறிந்தே. (உசுக)

அறியாமை நீங்கி மருத்து மலையை
யடியோடு பேர்த்தே யிலங்கை
குறியாய்க் ககன வழிவரக் காற்றங்
குலவவெல் லோரும் முயிர்த்துத்
தறிபட்ட வங்கங்கள் கூடித் தெளிர்துமுன்
றன்மைய ராளர் விசும்பி
நெறிநின்ற சஞ்சீவி யோங்கலை முன்பாம்
நிலைசேர்த் தணுமா னுவந்தான். (உசுப)

உவந்த செயலிரா வண்ணவா யுக்கதி
யுற்றுப் பிரத்தியா காரந்
தவறி யதனல் மகோதர நோய்த்தொட
றன்னைக் கிளம்ப மனது
கவனமாய்த் தாரணை செய்தே யடக்கவ
கம்பித நோயைச் சுழினை
சுவலித் தழிக்க மகோதர வாய்வ

மயக்க மிகவாகு வேளையிற் கூர்மன்
வழுவாம் பிரத்யா கரத்தைப்
பயன்பட செய்யப் பலங்குன்றிப் புத்தி
பதறி யடங்கச் சுழினை
யயர்ந்தது நாடிகளெல்லா மொடுங்கியவ்
வாரு யினகூர் மவாயு
சயமாய்ப் புரியட் டகநிலை சார்ந்த
தமைய மனதுங் களைத்த. (உருபஉ)

களைப்புற் றகாலை யதோகதி வாய்வு
கதிகொண் டதன்றெந்த வாய்வின்
னிளைப்ப மறச்செய்துயிர்க்கிளை சோர்வா
யியங்கச் செயப்பாது காப்பாய்
வளையா சயத்தா நிலைக்க வபானன்
வளமாய் கதிகொண் டெழும்பி
யிளைப்பாஞ் சுழினை தெளிவுறக் கூடி
யியல்தாலு நாடி யணுக. (உருபங)

அணுமா வுருக்கொள் சுழினையை யைந்தா
மடுக்கு நிலையுங் கடந்தாங்
கணுகிநா லான வமித மூலங்கொண்
டணையச் செயவே கதித்தெங்
கணுந்தோண வோங்கி யகனலிற் சீவனைக்
கண்டைந்து கர்த்தர் நிலையு
மணுகிப் புரியட்ட கபாலனஞ்செய்
யருட்டெய்வ நோர்மை தெரிந்தே. (உருபச)

தெரிய வொண்ணுத பெருவெளி யென்னுஞ்
சிரமேறி யுத்தர மூல
வரித மடைந்தாங் கிரவி யொளிர
வறிந்தையந் தீர்ந்தச் சிரத்த
முரியா மமிதம் பொருந்தக் கீழ்மூல
முறநா டியும்புத் தியெல்லா
மரிய நலமே பொருந்த வெளிநிற்
கமித மமைத்தே திரும்பல். (உருபரு)

திருநிறை யண்ணல் களித்தணு மானீ
சிரஞ்சீவி யாயென்றும் வாழிப்
பெருநலந் தந்தே னெனவாசி சொன்னுள்
பிரமாத் திரமற்று முன்பா
முருவோ டெலாமீண்ட செய்தி யிராவண்ண
னுக்குச் சொலவி ந்ரசித்த
னருமக மாக்கி முடித்திட மாய்கையா
லாக்கிய சீதை யுடனே. (உருப்சு)

உடனிக ரில்லா வணுமா னெதிரினி
லுற்றவள் சென்னி யதுவற்
றிடவாளால் வீசி யயோத்திவாழ்வோரைச்
செகுப்பே னெனவே விமானத்
துடன்செல் லலைப்போன்று காட்டி நிகும்பலை
யோமஞ் செயவே புகுந்தான்
படருற்று மாருதி சொல்லவெல் லோரும்
பதறி யழுதேது டித்தார். (உருபள)

துடிக்கலும் வீடணன் றேறுதல் கூறியஃ
துண்மையைக் கண்டு வரவா
றடியுருக் கொண்டிலங் கைசென் றணங்குநல்
லாணலங் கண்டே யரக்கன்
படிறுணர்ந் துற்றது சொல்ல விறையோன்
பரிந்து தன்றம்பிக் ககத்யன்
நெடிய சிலைவாளி விஞ்சை யளித்தின்று
நீ வெற்றி யாய்வரு கென்றான். (உருபஅ)

வருகு நிறைநலத் தான்மனம் போத
மடைந்து சுழினை யழியாப்
பெருநல மீய வழுவான தாரணைப்
பின்னங் கெடநா டியெல்லாக்
கருவி களுநல முற்ற திராதே
கழிந்தோடு வாயுக் கடுக்க
வுருமொலிக் கூர்மனு தரக்கடுப் புநோ
யுண்டாக்கு வண்ணங் கொதித்தே. (உருபசு)

கொதிப்பா நடுநாடி சோர வுயிர்க்கிளை
குன்றிக் கழிவுற் றதோவென்
றதிசங்கை கொள்ளச் சுகவதிட் டானத்
தழலையுண் டாக்கி யமைவா
யதிநலஞ் சேருங் கருவிக ளெல்லா
மழன்றிடச் செய்யும் வகைபோற்
பதிய நடுநாடி வெம்மை யுறவே
பதறியெல் லாமும் மழன்ற. (உருபஎ)

அழன்றிட் டகாலை அபானன் கதித்தே
யழன்மாற மெய்மை நலமே
எழவண் டிசையாக மூலத் தணுகி
யினிதா முயிர்நட்பு நண்ணிக்
குழவுறச் செய்ய மனந்தெளிவுற்றுக்
குலையா நலஞ்சே ரகத்து
ளழற்றண்டி னைடு சரம்புத்தி சேர
வனித்துநன் முமா றமைத்தல். (உருபஏ)

அமைத்த நிகும்பலே வேள்வி யழித்தே
யணுமன் றேரேறி யிளையோன்
இமையவர் கோவைரி யோடு பெரும்போ
ரியற்றி யரக்கன் றளங்க
டமையெலாங் கொல்ல விராவணி யெய்த்துவிண்
டன்னின் மறைந்தே யிலங்கை
யமைந்த ழியாத பெருந்தேரில் வந்தாங்
கதிரச் சமரம் புரிந்தான். (உசுபஉ)

புரியவீ டண்ண னிலக்குவர்க் குண்மை
புகலவவ் வாறம்பை யேவி
யரியபோர் செய்தவன் றேரைக் பிரிய
வழிக்கலும் விண்ணின் றரக்கன்
சொரிந்தம்பு மாரியால் வானரர்சேனை
தொலையச் செயவிற் கரத்தை
யரிந்தா னிலக்குவன் பின்னும் போர்செய்ய
வவனைத் தனித்த வுடனே. (உசுபக)

உடல்வேறு சென்னிவே ருகப் பிறைமுக
முற்ற வலிய கனையே
விடவப் படியாக வானவ ரார்த்தனர்
வேதமு தலாமு மூர்த்தி
புடவியிற் றேன்றினர் மாண்ட குரக்கினம்
புத்துயிர் பெற்றே யெழுந்தார்த்
திடவிளை யோன்மாருதி தோளின் மேல்வர
விந்திர சித்தன் முடியை. (உசுபச)

முடிவிலா நன்மை யளிக்கும் பிரான்றிரு
முன்னங் **கதன்**கொண்டு சென்றே
யடிகளிற் ருழ **மகிழ்ந்திவ்** வலன்வீட
ணன்றந்த தாமென் றிசைத்தார்
மடிந்தவிச் செய்தியை ராவணன் கேட்டு
மனம்பதைப் புற்றுப் புலம்பிக்
கடிதக் களஞ்சேர்ந் தவன்முண் டமுங்கரங்
கைக்கொண் டழுதாங் கனைந்தான். (உசுபடு)

அணையா தெழுமுத ரத்துக் கடுப்ப
தறத்தா ரணைசெய் துமையத்
திணைநா டியைப்புத்தி சேர்ந்தெதிர் கூர்மன்
றிறங்கெட் டயரச் சரந்தா
ரணைசெய் ததன்றொடர் வாயு வொழிக்க
வலியற்று மேற்சென்று மூலத்
துணைகொண் டெழும்பி யதிர வொலிக்கத்
துணையா யபான னுதவ. (உசுபக)

உதவியாற் புத்தி சரம மிதமா
யுறச்செய்து கூர்ம னிலையை
யதஞ்செய்யச் சென்னியி லேறியே நாடி
யடங்கும் படிசெய் யவப்போ
ததன்றண் டிணைப்பறச் செய்ய வதிலு
மடங்கா தியங்கல் லறிந்தக்
குதக்க தறவே பிறைமுகங் சேர்சரங்
கூட்டித் தொடர்பை யறுக்க. (உசுபள)

அறுந்தது வேறு, படவுட் கருவி
யடங்கல் நலமாய்த் துலங்க
லுறும்போது முச்சுட ராங்கே யொளிர
வுயிரற் றநாடிக் குழாங்க
ளிறும்பூ துறவுயிர் பெற்றன மையத்
திருகதிற் புத்தி யுறவாய்க்
குறுக மனநிலை யங்கதப் பின்கலை
கூர்மன் றலைப்பைக் கவர்ந்தே. (உசுபத)

கவர்ச்சி மிகமனஞ் சார்ந்தே யமையக்
களிப்புற் றபானன் கொடுத்த
நிவப்பென்று சிந்தை தெளிபோத மெய்த
நிலையா ததோகதி கொண்டாங்
கவஞ்செல் பிராண னிலைதடு மாறி
யதமாய கூர்ம னுறவா.
யவலம் பொருந்தியே மூலத் தமைவுற்
றழுந்துஞ் செயலின் முறையே. (உசுபக)

முறைமை யொடுமீண்ட தூதர் பணிந்திங்கு
மூலமாச் சேனைக் குழாங்க
ணிறைந்தன வென்ன வவைகளை நோக்கியே
நீரிரு வீரர் வலிமை
குறைந்து முடிவுறச் செய்திடிர் யானைக்
குரங்கினமெல்லா முடித்திம்
மிறைநீக் குவனென்று சொல்லவச் சேனை
விரைந்தே முரசம் மியம்ப. (உசுப)

இயம்பொலி கேட்டா யிரவெள்ளம் வெய்யோ
ரெழுகீ முலகேழு தீவொ
டுயர்வரை யோடெங் கிலுமுள் ளவர்க
ளொருங்கு திரண்டு வரல்கண்
டயர்ந்து நடுங்கிக் குரங்கப் படையெலா
மவ்விடம் விட்டோ டவாங்கே
செயவீ டணனங் கதன்சுக் கிரீவன்
றிறன்மா ருதியே யிருந்தார்

இருந்தவீ டண்ணனு லண்ண லவர்க
ளியல்புணர்ந் தானங் கதன்போ
யருஞ்சமர் நீங்கள் செயவேண்டா மென்றேடு
மப்படை யெல்லா மமைத்தா
னிருமிப் படைக்குத் துணையா யெனவாங்
கிளையோ ளெடுநின் றபேரை
இருத்தி யிராகவ னெண்ணில் நிருத
ரினம்பட விற்கொண் டெழுந்தான். (உஅப்உ)

எழுந்தது பூச லிமையவ ரஞ்சின
ரீசன வர்க்கஞ் சலீந்திக்
குழுவொன்று சேர முடிக்கும் விதியைக்
கொடுத்தோ மிராமர்க் குயென்றூர்
பழுதின் றிராவண ளெத்த வலிமை
படைத்தவ ரொவ்வோ ரரக்கர்
முழுவதா மாயிர வெள்ளமுங் கூடி
முடுகிச் சமரம் புரிந்தார். (உஅப்க)

புரியத் தனுவாற் சரமாரி யாகப்
பொழிந் தெங்குமெங்கு மெதிரிற்
றிரிந்தெங்கு முள்ளா னிராம னெனவே
திகைக்கச் சரந்தூவி வெய்யோ
ரிரிந்தோ டாவண்ணஞ் சரத்தால் மதில்செய்
திராக்கத வெள்ள மடியப்
புரிந்தான் பெரும்போரி ராக வனுங்கப்
பொழுது நின்றுடக் கவந்தம். (உஅப்ச)

கவந்தங்க ளாயிர மாயிரங் கோடிக்
கணக்கிற் கொருக்காற் கணீரென்
றவரின் மணிக ணகண கணென்றன
தாங்கே ழரைநா ழிகைப்போ
தவளவின் மூலமாச் சேனை யடங்க
லதமா யழிந்த செயல்வின்
ணவரெலாங் கண்டு வியந்தா ரிராவண்
ணனைநாடிச் சென்று னிராமன். (உஅபகு)

இராம லதோகதி செல்லும் பிராண
னியக்கதான் மூலத் தமைந்த
பிராணவா யுத்தொட ரெல்லாம் மனம்புத்தி
பேதப் படவே கதிக்கி
லிராதே நடைகொளு நாடிக் குழாங்க
ளெலாமயர் வாகு வகையப்
பிராணன்கதிக்க முயலவா யுத்தொடர்
பெல்லா மிரைந்தே யெழும்ப. (உஅபக)

எழுந்தன வாயிர மாமித ழின்றெட
ரின்பெருக் கான வளிகள்
முழுவதுங் கீழே ழடுக்கோடு சந்துகள்
மூட்டிற் பொருந்திய தெல்லா
மொழுங்கே கிளம்பிட நாடிக ளெல்லா
மொருவழி யாயோ டவப்போ
நழுவா தபான னிடைபின் கலெயு
நடுநா டியுமே யிருந்த. (உஅபஎ)

இருப்பா யபானன் பொருந்து நலத்தா
லியல்பெலா முள்ளம் முணர்ந்த
தொருப்படா தேயோடு நாடிக் குழாத்தினவ்
வோட்டந் தடுத்தே நிலைக்குத்
திரும்பிடப் பின்கலெ செய்திடப் புத்தித்
தெளிவோ டிளகா தநாடி
யொருங்கே நிலையுறச் செய்த தமாங்கதி
யோடா தழிக்கும் வகையே. (உஅபஅ)

வகையாய் மனமுற் படவுட் கருவி
மயங்க வுயிர்த்தெளி விந்தம்
மிகையா மதோகதி யெல்லாமறச்செய்
விதிநல் கவோடி யலையும்
பகைவாயு வொத்ததொவ் வொன்றுஞ் சகத்திரப்
ப்த்மத் தொடரின் பெருக்கத்
தொகைவாயு வெல்லா முடுகி யெழுப்பத்
துடிப்பாய்த் தனுவை வளைத்தே. (உஅபக)

வளைத்தமி தச்சரந் தாரணை கொண்டல்
வருடித்த தென்னு மளவி
லிளையா கெதிரிட மெங்கு மனந்திரிந்
தெங்கு மனமுள்ள தென்னக்
களைத்த தவாயு வறச்சரஞ் சேர்த்தக்
கதிகொண் டிடாதே சரத்தால்
வளைத்தே யழிக்க விரண்டாய்ப் பிரிந்தத
வாயு நிமிர்ந்தே நடந்த. (உஅஅ)

நடந்திடும் வாய்வா யிரமாயிரங் கோடி
நாடக் கணீலென் றெலிக்கு
முடற்றண் டுறுமணி நாத வொலிவிடா
தோரே ழரைநா ழிமட்டு
மடங்கா தொலிசெய் தனவப் பொழுதி
லதமூல வாயுக் குழாங்கள்
படவுட் கருவி பலமுற் றனவிராப்
பண்பின் மேலான மனதே. (உஅஅக)

மனது வெகுண்டிரா வண்ண னிலக்கு
வணனெடு போர்செய் யவீடண்
ணனன்றந் திரங்கூறல் கண்டி ராவண்ண
னழன்றவ னேக்கொல்ல வெண்ணி
யனல்வேலை யேவ விலக்குவன் முற்பட்
டதைமார் பிலேற்கப் புறம்போ
யினவிரா வண்ண னிலங்கை புகுந்தா
னிரங்கிவீ டண்ணன் புலம்ப. (உசுதஉஉ)

புலன்மிக் கசாம்ப ணணுமனை நோக்கிமுன்
போலம் மருந்து கொணர்வாய்
நலனுற வென்ன வதுபோல் விரைந்தவ
நாடிக் கொணர்ந்து வரவவ்
வுலவை படலக் குவண னெழுந்தா
னுவகை யோடெல்லோ ருமீண்டு
சொலக்கேட் டிராமன் களித்தா னிராவணத்
துட்டன் துணுக்குற் றயர்ந்தான். (உசுதஉங)

அயரா தலையும் பிராண னதோகதி
யாய்ப்புத்தி மாறு படவே
செயவு மபானன் தருநலத் தாலத்
தெளிவு குன்ருத நிலையி
னியற்கை கெடவே யபானற் கெதிரா
யியங்க வெதிருற்ற புத்தி
மயங்கலுங் கீழாம் பிராணன் மூலத்தே
வதிந்த தபானன் கலங்க. (உசுதஉச)

கலக்க முருநலஞ் சேர வலம்புடை
காட்டு நலத்தா லுயர்ந்த
பலமாய் நடுநாடி முன்போன் றமிதம்
படத்தா ரணைசெய்ய வாங்கே
நலமிகப் புத்தி தெளிபோத முற்றிட
நாடியெல் லாமும் வலுத்து
புலன்றெளி வெய்த நடைகொளக் கீழ்க்கதி
போகும் பிராணன் றிருந்தல். (உசுதஉகு)

திருந்தார் களைக்கொலச் சேனைக ளெல்லாந்
திரட்டித் தசமு கனுங்கச்
செருக்கள நோக்கித் திசையெட்டு மேற்கீழ்ச்
செலுந்தேரி லேறி யதிரப்
பொருத வரவின்று போர்முடி வாகும்
புரந்தரன் றேரீயு மின்னென்
றருளச் சுரர்க்கீச னவ்வா றவர்க
ளனுப்பவந் துற்ற திரதம். (உசுதஉசு)

இரதப் பரியெலாம் வேத மியம்பு
மியல்பாற் றெளிந்தண் டலோகப்
பரப்பெலாந் தம்முள் ளடக்குந் தகையது
பஞ்சபூ தத்தின் வலிதா
மிரதத் திராம பிரானேறி விற்கொண்
டெதிர்க்க மகோதர னுங்கோர்
சரத்தான் மடிந்தா னிராவணன் வெய்ய
சரமிலக் கின்றித் தொடுத்தான். (உசுதஉஎ)

தொடுக்கு மதற்கெதி ராய்க்கணை யேவித்
தொலைத்து மேலுங்கோ டிகோடி
கடுஞ்சர மேவ விராவணன் றேரொடா
காயஞ் செலவப் படிபின்
னெடுசேர்ந் திராகவன் போர்செய்ய வேழ்தீவி
னெடேழ் மலையே ழுவேலை
யொடுவண் டப்பித்திகை யெல்லா மரக்க
னுடையம் புமாரி செலவே. (உசுதஉஅ)

செலவவ் விடங்க டொறுமம் பிராகவன்
சேர்த்தறுத் தானங் கரக்கன்
பலவாளி யேவி யிடிக்கொடி யற்றிடப்
பண்ண வவனங் குவிணை
விலதன மற்றிடச் செய்தான் பிரான்றேரின்
மேற்கரு டன்கொ டியானன்
இலக்கின்றித் தெய்வப் படையெலா மேவி
யிளைப்புற் றயர்ந்தா னரக்கன். (உசுதஉகூ)

அரக்க னிளைக்கப் பலம்பெற் றிராமபி
ரானும் பிறையின் முகம்சேர்
சரமே விடத்தலை யற்றன வற்ற
தலைமீண்டு மீண்டும் முளைக்க
வுரன்மிக் கவாளிக ளேவி யறுக்க
வுததியும் மண்ணு மலைமா
திரங்களு நோக்கிட மெங்கெங்கும் வெய்யோன்
சிரஞ்சிந் தியது நிறைய. (உசுஉய)

நிறையக் கொடுங்கணை யேவியி ராவண
னின்மேனி முற்றுந் துளைத்துங்
குறையா வலிமையைக் கண்டு பிரமன்
கொடுங்கணை யேவ வதுவம்
மறையோ னுருக்கொண் டகில நடுக்குற
வந்தவன் மார்பூடு சென்றுங்
குறைசீ வனையுண் டதுபுற மோட
வுடனிரா வண்ணன் மடிந்தான். (உசுஉக)

மடியப் பிரான் றேரொடுங்கீ ழிறங்கியே
வாஞை ரிரதம் மவர்க்கப்
படியே செலச்செய் திலக்கு வஞுதிகள்
பாற்செல்ல வெல்லோ ருமார்த்தா
ரிடியுண் டவாரு யிராவணன் றேவிய
ரெல்லோருங் கேட்டாங் கிறந்தார்
முடிவு கண்டுள்ளம் பதைத்து வீடண்ணன்
முடித்தான் முடிவுக் கடன்கள். (உகூபஉ)

கடந்தோ டுவாயு வதின்கிளைக் கூட்டங்
கதிகொளத் திக்கெட்டு மேற்கீ
ழிடஞ்செல் நிலையமேற் கொண்டெ திராக
வியங்கவ தோகதி யப்போ
தடங்கிடு மண்டத்தின் மூல மணுக
வமைக்க வுள்ளான கருவிக்
கிடந்தரச் சீவ னதனெளி யாலவ்
வியல்பா யமூல வசமே. (உகூபஊ)

வசமாய் மனஞ்சேர்ந் ததிநிலை வாசி
மறைமுழக் கத்தாற் றெளிந்து
நிசமாக வண்ட கடக மடங்கல்
நிலையாய தைம்பூ தமேலாங்
குசமான மேல்மூல முற்றுத் தெளிமன
மோங்கித் தனுவை வளைத்துத்
தசமா றுறுஞ்சரம் பாய்ச்சப் பெருமு
தரவாய் வொழிய வெதிரே. (உகூபஎ)

எதிர்மாறு பாடா யியங்கிப் பிராண
னிலக்கின் றியெங்குங் கதிக்க
வதினேர தாகச் சரஞ்சேர்த் தடக்கி
யமிதச் சரமே செலுத்தக்
கதித்தூர்த் துவமாய மூலமொ டோங்கு
கதிகொள் ளவவ்வாறு சிந்தை
யதிரத் தொடரவேழ் சந்தி யெழுமூட்
டடுக்கே ழொடண்ட முகடே. (உகூபஏ)

முகங்கீழ தாஞ்சரஞ் சேரவாங் கெல்லா
முயர்கதி கூட்ட நினைவாங்
ககலாத தோகதி யண்டத் தசனி
யறச்செய்ய மாற்றம் மொழிந்து
மிகவுயர் வாமு வணநாத மோங்க
விசைக்க வளவி லதவாய்
வகமெங்கிலுமோடி யோடி யயர்ந்த
ததிதெளி வுற்ற துளமே. (உகூபஐ)

உளநலங் கண்டு மதிமுகுஞ் சேர்தர
முற்றிடச் செய்ய விழிவா
யுளகலே யற்றன வற்ற கலேயஃ
தொடுங்கிடாதே மீண்டு மீண்டுங்
கிளம்பலுந் தாரணைசெய் தேயறுக்கவாங்
கேசோ ரியுந்தூ வெலும்புந்
தளமெட் டொடுண்ணிட மெங்கெங்கும் வேகாத்
தலேயாய் நிறைந்த வதுவே. (உகூபஏ)

நிறையச் சரத்தை யிராவண்ண மோடு
நிலேமுற் றிலுமே செலுத்தி
இறவாமை கண்டு பிரத்தியாகார
மியற்றச் சுருதி யுருவாய்ச்
சிறந்த சரமண்ட பிண்ட நடுக்குறச்
சேர்ந்திரா வண்ண வளியை
யறவுண்டு வேதித்துச் செல்ல வதுபோ
ததோகதி யற்ற தினிதே. (உகூபஐ)

இனிதா மனதுமேல் மூலமுற் றேபுரி
யெட்டிலுற் றண்ட நிலேய
நனிநலஞ் சார வமைவித் துயர்புத்தி
நாடிக் குழாங்கள் வளமாய்த்
தனியா வுரம்பெறச் சார்ந்த ததோகதி
தன்றொட ரெல்லா மழிந்த
தினியாய மானசெயலா லபான
னியங்கிய தீறு கதியே. (உகூபகூ)

கதியீயு மண்ணலே வீடணன் முழக்
கருணையாய் தேறு தலான
மதிகூறித் தம்பியை நோக்கி முறையாய்
மகுடம்வீ டண்ணற் களித்திங்
கதிநலஞ் சேர வருக வெனவப்
படியாக்கி மீள விறைமா
ருதியைச் சனகியிடஞ் சேர்த்தி தெல்லா
முரைத்தி டெனவே யுரைத்தான். (உஅ)

உரைப்பா மனத்தோ டபானன் பொருத்த
லுறத்தெளி வான நிலேயிற்
புரையறச் சேர்க்க முறையா யபானனைப்
புத்தியா லாக்கம் பொருந்து
வரையாய மூல நிலேயுறச் செய்த
வலுவாற் சுழியின் முனையைக்
கரைக்கட்டு ணின்ற வுயிர்க்கிளைசாரக்
கதித்திடச் செய்யு நலமே. (உஅக)

நலமான செய்தியாற் சீதை மகிழ்வெய்தி
ஞளிறை சொன்ன படியவ்
விலங்கை வேந்தன் போய்ச்சனகிக் குரைசெய்
தெழிலோ டழைத்து வரலுங்
கலங்கப் பலவாறு சீதையை நிந்தை
கழறப் பிரானு மதனுற்
குலமகள் நொந்தீளை யோனுக் கியதீக்
குளித்துக் குளிர்ந்தே யெழுந்தாள். (கூஊ)

எழுந்த நலங்கண் டிராமனு வந்தா
னினிதா முமூர்த்திக டோன்றி
வழுத்தினர் நாமே நீயென்று தசரதன்
வந்து நல்லாசி மொழியத்
தொழுது வெறுத்த நல்லாள்சே யீளையுந்
தூணையாம் வரம்பெற்று விண்ணேர்
முழுநல மீய விறந்தவ ரெல்லா
முயிர்பெற் றெழலாற் களித்தான். (கூஎ)

களிப்பாங் கதியா லுயிர்க்கிளை நன்றுற்ற
காலை நினைப்பின் வகைகீழ்
வளிசென் றுயிர்க்கிளை நண்ணிக் கீழ்மூல
மணுகக் கதிக்க வுடனத்
துளியுறப் பல்வகை யாய்விந்தின் மாறுற்
றெதுங்க மனதங் குபுத்தி
தெளிவாய் வளர்த்திய மூலத் தழற்செறிந்
தேகுளிர்ந் தூர்த்து வமாக. (கூஅ)

துவமா நலத்தால் மனம்போத முற்றுத்
துலங்கச் சுடர்மூன்று தோன்றி
நவமா யதுவே மனமெனத் தேறுமெய்
ஞானந் தரச்சித் தவந்தம்
முவப்புறத் தோணத் தொடர்பில் விசுத்தி
யொடுசித்த நண்ணி யுறவா
நிவப்புற் றகக்க ருவிக ணலத்தா
லியக்கற் றதெல்லா மியங்கல். (கூஏ)

இயநல மிக்கவிண்ணே ரண்ணலை நோக்கி
யின்றுட னீரேழ தாண்டுஞ்
செயமே கழிந்தன வின்றே பரதனைச்
சேரவிலையே லவனுங்
குயரொரி மூழ்குவ னென்ன வுடன்செல்
லுயர்புட் பகத்தெ லெவரும்
சுயவுரு மாறி மறையோ ருருவத்
துடனுறச் சனகி யுடனே. (கூஐ)

உடன்வர வேயவ் விமானம் விசும்பூ
டுறச்செய் திலங்கை வலமா
கிடச்செய் துசீதைக் குணர்த்தி வரும்போ
தெதிர்தோன் றணைபுற் கிடக்கை
குடமுனி யோங்கல் மதங்கர் மலையெனக்
கூறிக் கிட்கிந்தை யிதுவென்
றிடச்சீதை யாங்குறை வானரப் பெண்களை
யேற்றிச் செலவே விரும்ப. (கூன)

விருப்பப் படியே விமானத்தி லேற்றி
விசும்பிற் பறக்க வெதிரி
லருந்தவ ஞன பரத்தவ னேக்கண்
டவனே ரிறங்கிப் பணிந்தா
னிருந்து செலலா மெனமுனி வேண்ட
வியைந்தா னெழுபது வெள்ளப்
பெருந்தானை யெல்லா மிமையவர் போகம்
பெறவா குதியே கொடுத்தான். (கூஅ)

கொடுக்க முறையே யமைந்த தணுமனைக்
கூவிப் பிரானும் விரைவி
லடுத்துப் பரத னிடநம் வரவை
யறிவித் தழலை யணைத்துக்
கடுமையின் மீண்டு வருகென மோதிரங்
கையிற் கொடுத்தே யனுப்பச்
சடுதியிற் செல்வழி யிற்குக னுக்கீ
தறிவித் தடைந்தா னயோத்தி. (கூக)

அயோத்தி யுறுமுட் கருவி தருநலத்
தான்மன தீரே ழடுக்குஞ்
சியோக நடையாற் கழிந்தது மிவ்வணஞ்
சித்தத் தணுக விலையே
லயோத்தியான மேல்மூலத் தழிவா
மதுதெரிந் தூர்த்துவ மாயங்
கியோக நலத்தால் மறையுரு வாய்நாடி
யெல்லா முறவே யுயர்ந்து. (கூஇ)

உயர்விந் துடனூர்த் துவகதி யாய்நல
முற்றுப் பூரியட் டமேலா
யுயரும் வழியினுட் டாரை புறந்தாரை
யோடுகீழ் மூலத் தினுச்சி
யுயர்மூல மென்பன கண்டுநா பித்தலத்
துற்றெலா நாடிக் குழாங்க
ளுயர்வாங் கிளைகூடிடச்செய்து மேலு

எழும்பியண் டத்திற் பரத்த வசமா
மெனுமயக் கான நிலையி
லழுந்தி யெழுபத்தி ரண்டாயிர நாடி
யானதெல் லாமுஞ் சுழிக்க
நழுவா துயர்கதி யாகச் சுழிமூன
நாடியைச் சித்த முறவாய்
முழுநலந் தோன்றக் குறியாய்ச் செலுத்தமேன்
மூட்டுற்று வுச்சி யடைதல். (ஈ.ஸ்ரீ2)

அடைவாய்ப் பரத னிறையோன் வராதா
லழன்மூழ்கு வேனென் றுதீயி
லிடையாது சுற்றி வரும்போ தணுமா
னிறையவன் வந்தா னிதோவவ்
வடையாள மென்று கலையாழி யீந்தவ்
வழலை யணைத்தான் மகிழ்ச்சி
யடைந்தா ரெலோரும் மறைக்குலப் புண்யநீ
ராரோ வெனலு முடனே. (ஈ.ஸ்ரீ3)

உடன்மாறி யுண்மை யுருவிற் குரங்கென
வோங்கு முருவோ டுநிற்க
வடங்கிட வேண்ட வமைந்தான் பிரானை
யழைக்க நகரத்து மாந்த
ருடன்சுற்ற மாறுபத் தாயிர மாமக்
குரோணி படைசூ ழுவந்தா
னடவாய் விமானத் துறுமண் ணலுக்கீ
தணுமான் சொலவங் கிறங்கி. (ஈ.ஸ்ரீச)

இறவா நலன்மிக்க தம்பியுந் தாய்குரு
வெல்லோ ரொடன்பு பெருகப்
பறவைத் தகவூர்தி யுற்றே யயோத்திப்
பதிவந் தெலோ ரோடுகூட
விறங்கிப் பரத னுடநந்தி யம்பதி
யெய்திச்சடைமுடி மாற்றிச்
சிறந்த மணியணி பூண்டுதே ரேறித்
திருநக ரத்துட் புகுந்தார். (ஈ.ஸ்ரீ4)

புகுமுயர் வானிலைச் சிந்தை யகனற்
புகாததாற் கால விதியின்
மிகுசித்தஞ் சுற்றிடு மெல்லை சுழிமூன
மேலாங் கதிகொண்டு சிந்தை
புகுநலந் தோன்றக் கலையாழி யாகப்
பொருத்தி விதியைத் துடைக்க
மிகுநலம் பெற்றுக் கருவிக ளெல்லாம்
விளங்கச் சுருதி யுருவே. (ஈ.ஸ்ரீ5)

உருவான நாடி கதிகொண் டுயர
லொடுங்கிட வேண்டிய சித்த
விருப்பப் படியே யடங்க மனதங்கு
மேனிலை சேரும் வகையே
பெருந்தொட ராறுபத் தாயிரஞ் சித்தப்
பிரிவொன்று கூடி வரலுந்
திருகான நாடி யுளஞ்சாரச் சிந்தை
தெளிவோடு சித்த முறவே. (ஈ.ஸ்ரீ6)

உறவாய் மனஞ்சித்த மொத்தெலாங் கூடியே
யொன்று யுயர்ந்த நலமே
சிறக்கமேற் சென்றுயர் வானிலை நண்ணித்
தெளிகுழாஞ் சூழ வகன
லுறவாகி மாசற்று யருள்ளஞ் சித்தத்
துடனெழி லெல்லாந் துலங்கு
திறமுட னேபரி சுத்தத் தலமாஞ்
சிரத்திற் கதியோ டணைதல். (ஈ.ஸ்ரீ7)

அணையாத வீரத் திருவாள ரெய்திய
தால ளவில்லா மகிழ்ச்சி
யணைந்தார் நகரோ ரிறையோன் புகுந்தா
னரண்மனை மற்றைய ரந்த
யிணையில் வனப்பிற் றிகைத்தா ரிராமர்க்
கெழின்மிகு பட்டா பிடேக
மிணையி லுகப்போ டியற்ற வசிட்ட
ரினியன வெல்லாம் புரிந்தார். (ஈ.ஸ்ரீ8)

புரிய் முறையே யளவி லகில
புவனத் துளோரங் குவந்தா
ராரிதமெட் டுஞ்சென்று தீர்த்தமெல் லாங்கொண்
டணுமனும் வந்தான் மயன்முன்
வாழ்சனு ரையின் மகுடா பிடேக
வெழின்மண் டபத்தைச் சமைத்தா
னூரிய நலமா முழுத்தத் திராகவ
னெங்கு மகுடம் பொருந்த. (ஈ.ஸ்ரீ9)

பொருந்த வமைத்த பளிங்குமா டத்திடை
பொற்பீட மேல்வச் சிரத்தாற்
றிருந்து கால்சேர்த்த மாணிக்கப் பலகை
சிறப்போ டமைத்தா ரதன்மேற்
றிருவினு நல்லா ளொடுநா தனுற்றுத்
திகழுவு மங்க லகீதஞ்
சுருதிசங் கந்துடி பல்லிய மார்க்கச்
சுரர்கள்பூ மாரி பொழிய. (ஈ.ஸ்ரீ10)

பொழிய முறையே யபிடேகஞ் செய்தனர்
பொற்புற மாருதி சிங்க
வெழிலணை தாங்கச் சுரிகை யையங்கத
னேந்தக் கவரி யிருவ
ரொழியா திரட்டப் பரதன் கவிகை
யுயர்த்தி டப்பிள்ளை யவர்கள்
வழியுளார் நீட்ட வசிட்டனே வாங்கி
மவுலியை ராமர்க் கணிந்தார். (கூஉடூ)

அணியவுஞ் சீதா பிராட்டி யொடண்ண
லரியா சனத்தே விளங்குந்
தணியா வெழில்கண் டெலோருங் களித்தார்
தவமுனி சொல்லு நெறியே
மணிவண்ணன் பின்னோர்க் கிளவரசுப் பட்ட
மாக்கி மகுடந் தரித்துத்
திணிந்த புகழோடு வாழ்ந்தா னெலோருஞ்
சிறந்தடைந் தார்கள் பதியே. (கூஉடக)

பதியா துயர்சிந்தை யுற்ற தாலங்கப்
பதிசேர் கருவி களெலா
மதியுரம் பெற்றிடச் சிந்தை யுயர்வீ
டடையவ தின்றெட ரோங்கும்
புதிய வெழிலிற் றிளைக்க மனமுயர்
போதமுற்றுச் சித்த பட்டந்
துதியுறச் சேருதற் காமுறை மூளை
தொழில்செய வோங்கு நலமே. (கூஉடச)

நலமே பெருகிடப் பூதிய மெங்கணு
நண்ணுங் கருவிக் குழாங்கள்
வலனுறக் கூடச் சுழினேயா முதார
மண்டல முற்ற மிதமே
துலங்கிடச் சேரத் தனஞ்செய வாயு
சுருதி முறையுச் சிவீடு
பலம்பெற வாக்க முழூத்த மதின்மனம்
பற்றியுச் சத்தை யடைய. (கூஉடத)

அடைவாய்ப் பளிங்கொளி பொன்னெ ளிவைர
வழகொளி மாணிக்க மின்ன
லுடையொளி வீசு மொளிமண் டலத்தலத்
தோங்குபீ டத்தி லெழிலைப்
படைக்குநல் விந்துடன் சிந்தை யுறவப்
பதியிற் றசவி தநாத
மிடையா தொலிக்கவுட் டத்துவ மேன்மல
ரின்ற ரணைபு ரியவே. (கூஉடசு)

புரிந்த தமிதமாந் தாரைமுறையே
புகழ்நடு நாடி யணையாய்த்
தரிக்கவங் கத்தத நாடி முரியேந்
தவுமி ரண்டான கரணந்
திரிபின்றி மாசு துடைக்கவுஞ் சித்தந்
தெளிவீய வுஞ்சித் தமரபுப்
பெரியோ ரருள வசித்தாது சித்தப்
பெயர்மனஞ் சார வொழுகல். (கூஉடஎ)

ஒழுங்கா யுயிர்க்கிளை யோடு நடுவணை
யுற்றுள்ள மோங்கு மெழிலி
லழுந்திக் கருவிக ளெல்லா முயர்வுற்ற
தாக்க முறவடை யாளச்
செழுந்தா தியக்கப் படிமன மிக்க
தெளிவாய்க் கரணங் களுச்சத்
தழுந்து நலமீந் துயர்போத மெய்த
வடங்கலும் வீடு பெறவே. (கூஉடஅ)

ஒடுக்கப் படலத் தொகுப்பு

பெறவங்கி தாரணை செய்துகீழ் மூலத்தைப்
பேதித் ததுமு னிலமை
யுறவே யபானன் பிராணனின் மாறுகொண்
டோங்கியுள் ளத்தொ டுறவாய்ச்
சிறந்த கதிகொளக் கீழ்மூலத் தன்மை
தெரிந்தவ் விடத்தை யணுகப்
புறந்தா ரனையும் பிரத்தியா காரம்
புரிந்தனற் முரணை யாக்க. (கூஉடகூ)

அனற்மு ரணையாற் கிரிகரன் முரை
யமையவு தவக்க தித்தக்
கனன்மூலா தாரத் தெழபத் திரண்டுச
கத்திர நாடி யுடனுற்
றினலாம் பிராண னிலைகெட வாங்கே
யிடைகலை சார்வா கிமீள
நனவுடன் பின்கலை சேரக் கதித்தத
னலந் நிலமை யுணர்ந்தே. (கூஉடக)

உணர்வா யதோகதி மாய்த்திட மூலத்தி
லுண்ணுடி யெல்லாங் கதித்தக்
கணத்திற் சமானற் கமையா திராதங்
கலேவாயுக் கூட்ட மெதிராங்
குணங்கண்டு சிந்தை சுழினேயிற் சார்ந்து
குளிர வமுரிச் சரத்தைக்
கணக்கின்றிக் கூட்ட விராவண்ண வாயு
கதிகெட் டுமூலத் தடங்கி. (கூபக)

அடங்கா துடலெங்கு மேவும தோகதி
யாம்வாயுக் கூட்ட முறவா
கிடவிரா வண்ண மலேவாய் வெழுப்பி
கிளம்பாத் துயிலிற் றிளேக்கு
மடற்குண் டலியை விழிப்புறச் செய்ய
வதுமேன் முகமாய் நிமிர்ந்த
வுடன்முரி யாகவேவிட் டகுறையற்
றெழியச் சரவ முரியே. (கூபஉ)

முரியா தமிதமாய்ச் சேர்த்துப் புரியட்ட
முந்துண்டு துண்ட மதுவாய்
விரியச் செயவிந் தணுகு மதோகதி
வெம்மைக் கிளகா துவிந்து
தரிப்புறக் கீழ்க்கதி கெட்டு விவிதம
தாநோ யெலாமுங் கிளம்பப்
புரியலும் பின்கலே சார்ந்த மிதச்சரம்
புத்தி தெளிவாய்ச் செலுத்தி. (கூபக)

செலுத்தப் பலவித நோயின் குழாங்களுந்
தீர்வுறக் கூர்மன் கதிப்பாய்
வலுவிடி நாத மெழுப்பலும் புத்தி
மயங்கி நடுங்கி யொடுங்கி
யலுத்து வியர்த்து மூர்ச்சிக்க மனஞ்சோர்ந்
தடங்க வருளி னுருவாய்ச்
சொலுங் குருநா தனுற்றுச்சியின்வேதத்
துழனி படவே கதிக்க. (கூபச)

கதிகொண் டுமிக்க தெளிவோ டெழுந்து
கணக்கற்ற நோய்கள் மடிய
மதிதா ரணைசெய்து கூர்ம னடங்கும்
வகையாய்ப் பிரத்யா கரத்தைப்
பதியச் செயமனம் புத்தியின் மாறு
படுமியல் பால்வழு வான
வதினுற் றெளிவுகெட் டுப்புத் திசோர
வறிவும் மயங்கிக் கலேக்க. (கூபடு)

கலேப்புற் றுயிர்க்கிளே சோர்ந்து தெளியக்
கணத்தே யபானன் கதிக்க
இலேத்த சுழினே யெழும்பி யலம்புடை
யின்னலங் கொண்டங் குமேலாங்
துலேவழி நாவைச் செலுத்தி யமிதந்த
தும்புந் தலஞ்சென் றுதக்கு
முலேயின் ரவியொளி கண்டுதெளிந்துகீழ்
மூலத் தமிதொ டுறவே. (கூபக)

உறவாக யாக்கை வலுவாய் மனம்புத்தி
யோங்க நடுவா னனுடி
யிறவா நலம்பெற் றிலங்கிடக் கூர்ம
னெழில்விந் தழியும் வகைபோல்
மறஞ்செய்து மூலத் தழலேயுண் டாக்க
மறைய வபான னறுகாற்
பறவைநா தத்தாற் றெளிவீந்து மூலப்
பதியழன் மாற வுதவ. (கூபஎ)

உதவியாய் புத்திநடு நாடி யுற்றங்
குயர்தா ரணைசெய் தழித்துச்
சிதையவே கூர்மனே வாட்டிச் சரத்தாற்
செயங்கொள்ள வங்கத நாடி
யதன்றலேப் புற்று மனநிலே சார
வதுதெளி வாக வதுபோ
ததவாயுக் கூட்டமெ லாமெதி ராக
வதனெதி ரெங்குந் திரிந்தே. (கூபஅ)

திரிபின்றிச் சிந்தையெங் கெங்கு முளதாய்ச்
சிவமயமாகத் திகழ்ந்த
முரிதா ரணைசெய் தழிக்க வெதிரா
முயிரத வாயு நிலேயிற்
சரிவரப் போகாப் போகாப்புன லென்னமிதச்
சரந்தா ரணைசெய்து மேலும்
விரிவாகி யண்டபிண் டங்களெங் கெங்கிலும்
வேகாத் தலேயாய் நிறைய. (கூபக)

நிறைய வமிதமாய்த் தாரணை செய்தங்
நிலேயற்ற வாயு நிலேயி
லுறவமை யாமையைக் கண்டு மறையொலி
யோங்கப் பிரத்தி யகாரஞ்
சிறப்புறச் செய்த தவாயு வொழித்துமுன்
செய்ய சுழினே யளிக்கு
நறவிற் றெளிபுத்தியைச் சிந்தை நண்ணி

தலமோங் கபானஞ்ஞ் சாகாத காலையுச்
சஞ்சார் புறச்செய்து விந்து
நிலவா சயத்துச் சுழிமூனே சார
நிமிர்த்தவிந்தோடு மனதுங்
கலக்கத் தெளிபுத்தியாக்கு மூலத்தழற்
கண்ணுற் றுயர வுயிராய்த்
துலங்குஞ் சுடர்மூன்று தோன்றலுந் தானதாய்த்
தோன்றி யவுண்மை யறிந்தே. (கசஎக)

அறிவு தெளிவாக மெய்ஞானந் தோன்ற
வதுசித் தமுங்கண் டதாரை
செறிய நலங்கொண் டகக்கரு விநலத்
திற்புத் துணர்வாக நாடி
குறியாய் நடக்க விரண்டேழ தாமடுக்
குஞ்சென்ற தாலோங் குசித்த
நெறியோடு கால விதியிலு ழலாத
நேர்பாய் விதியைத் துடைக்க. (கசஎஉ)

துடைகாலே யூர்த்துவ மாக்கி மனம்விந்
துடன்மறை யாய் நா டிகூட
வடைவா யடுக்குச் சமேறிச் சுழிக்க
வதிற்சுழி யாது சுழினே
விடைகொண் டகனலே நண்ணியே கால
விதியைத் துடைத்தோங் குசித்தத்
தடைதீர்த் துயர்கதி யாய்ச்சிந்தை கூடவ
தங்குச் சமேவு நலமே. (கசஎங)

நலஞ்சேர் பதிசார்ந் தொளிமண் டலத்தி
நடுவனே மேல்விந் துசிந்தை
யிலங்கவங் கத்தத நாடி முரியேந்
திடப்பின் னதான கரணங்
கலந்துற வாக வருட்பெருஞ் சித்தர்
கருனே தரவசி தாது
வலன்சிந்தைக் கீயவுஞ் சித்தா யுயர்ந்துகை
வல்லியத் தெய்தி மகிழல். (கசஎச)

மகிழ்வுட னித்துய்ய ஞானச் செழுந்தமிழ் வாழியவிங்
வகிலத்துள் வேத புராணங்கள் சாத்திர மண்டரண்ட
பகிரண்டமும் புகழ் நாதாக் கடங்கள் பனுவலுயர்
சுகிரதமீந் தோங்க வாழிய வாழியித் தொல்லுலகே. (கசஎசு)

இராமாயண இலக்கியம்
முற்றிற்று.

உ

சிவமயம்

மறைப்பொருள் விளக்கம்

க. மறைப் பொருள் விளக்கக் காரணம்.

வேதம் என்ற சொல் கடவுட் **கொள்கையை** நிறுவிய பெரியோர் களின் பெயரால் விளங்கும் நூல்களுக்கெல்லாம் **பொதுவாக** வழங்கப் பெறுகிறது. ஆயினும் வேதம் என்ற சொல்லுக்கு ஒரு **தனிப் பெருஞ்சிறப்பும்** இலக்கணவரம்பும் நம் தமிழ் வேதத்திற்கு மட்டுமே உள்ளது **அதை** விவரிப்போம்.

வேதம் என்ற சொற்பொருள்.

வேதை வேற்றுமை வேதித்தல் வேத்து என்பனவாகச் சொல்லப் பெறும் மாறுபாட்டு இயற்கைக்குறிப்பே வேதம் என்ற சொல்.

அது நான்மறையான காரண விளக்கம்.

அந்த வேற்றுமை யாவன பூதம் ஐந்து என்ற ஒரு தொகுதி ஆகாயத்தினிடத்து ஒடுங்கி நான்காக இருப்பது போன்றும் அவ்வைம் பூதத்தினுடைய தன்மைத் திரத்தைக் கொண்ட மெய்வாய் கண் மூக்குச் செவி என்பனவற்றில் மெய்யினிடமாக வாய் கண் மூக்குச் செவியாகிய நான்கு வேற்றுமை உறுப்புக்கள் உள்ளன போன்றும் ஒரு அடிப்படையைக் கொண்டு உள்ள நான்கு வேறுபாட்டுத் தொகுதியாக அமைவதே நான்மறை என்றும் நாலு வேதம் என்றும் சொல்லப் பெறுகிறது.

நான்மறையன்றி மேன்மறையில்லை.

எவ்வாறு மேற்கூறிய தொகுதியில் ஒன்றைக்கூட்டவோ குறைக்கவோ முடியாதோ அந்த இயற்கைத் தன்மையுள்ளன போன்று வேதம் என்முல் அது நான்காகவே தானிருக்கும். அந்நான்கும் ஒன்றற் கொன்று எதிர்மாறுன தன்மையைப் பெற்றிருக்கும் அதற்காதியாகவுள்ள வொன்று எனக் கூறிய பூதாதியாகிய ஆகாயம் போன்றும் பூததத்துவாதியாகிய மெய்போன்றும் வேதாந்தம் விளங்கும் இவ்வைம் பூதங்களுக்கும் செயற்பாட்டுத்திரத்தை நல்க பூத நாயகன் ஒருவன் உள்ளது போன்று சித்தாந்தம் தோன்றும். இந்தத் தொகுதியினின்றும் பிறழ்ந்த எந்த நூல்களையும் வேதம் என்ற சொல்லால் அழைப்பது கொஞ்சமும் பொருந்தாது.

மறைப்பொருள் உணரும் வழி

இவ்வுண்மையை விவரமாயறிய வேண்டில் திருஞான சம்பந்தர் அருளிச் செய்த திருமுறையில் காணும் கட்டளைத்திறங்களின் அடிப்படையில் வியாகரணம் என்னும் மேற்கணக்கு ஒன்பதின் நியதிப்படி வகுக்கப் பெற்ற அடங்கன் முறை திருச்சிற்றம்பல தேவார இசை யொலியிற்றேன்றும் எழுதாக்கிளவியின் விளக்கமாக வகுத்துள்ள நான்மறை விளக்கத் திருமுறையிற் காண்க.

வார்த்தை மலைப்பைத் தருகிறதா விடை.

ஈண்டு சொல்லியவற்றில் கட்டளைத்திறங்களென்றும் வியாகரண மென்னும் மேற்கணக்கென்றும் நூற்றலைப்பின் பெயராக வழக்கில் கொள்ளப் பெற்று வரும் அடங்கன் முறை திருச்சிற்றம்பலம் தேவாரம் இவைகளுக்கு வேறு ஏதோ ஒரு பொருள் இருப்பதாகக் குறித்தும் மேலும் இசையொலியில் எழுதாக் கிளவி என ஒன்று தோன்றுவதாகவும் நடை முறை வழக்கத்திற்கு ஒத்துவராமல்

எதையோ கூறுவதாகத் தோன்றுகிறது ஏன் ஒரு பொருள் விளக்கத்தைத் தருங்கால் எல்லா மக்களுக்கும் பயன் தரும்படியாகக் கூறுமல் மறை முகமாகக் கூற வேண்டும் இதனுற்றுன் நம் பெரியோருடைய நூற்கள் போற்றுவாரற்று இருப்பதாகப் பலரும் சொல்லுகின்றனர் என நினைக்க வேண்டாம். அதற்குரிய விளக்கம் காட்டுகிறேரும். (உலகியல் நூல் வேறு மறையியல் நூல் வேறு) உலக மக்களுக்கெல்லாம் புரியும் வண்ணம் ஞானியர்களாற் சொல்லப் பெற்ற நூற்கள் எண்ணற்றன இருந்து கொண்டிருக்கிறது. அவற்றுள் ஒன்றல்ல ஈண்டு கூறிய சிவகலேயாகிய வேதநூல் அதை வகுத்தற்கும் ஒரு தனித்தகுதி வேண்டும் ஓதியுணர்வதற்கும் ஒரு தனிப் பெரும் பயிற்சி வேண்டும் காரணம் ஞானசிரியனுல் உணர்த்த பெற்ற ஞானநூபூதி சாதனவிளைவு பயன்தரு காட்சி இவற்றை நூல் முறையில் சித்திரித்துக் காட்டியதே நமது தேவாரமாகிய மறை நூல்.

அநுபூதியியலே மறையியல்

ஞானநூபூதியின் நாதம் எழுதியோ சொல்லியோ காட்ட முடியாததாக இருப்பதால் அதற்கு எழுதாக் கிளவியென்று பெயர் வந்தது அந்த நாதம் ஐம்பூதங்களுக்கும் ஆதியாகவும் முதற்பொருளுக்கு அண்மையாகவுமிருக்கும். அவ்வாறே நமது வேதமும் நாதத்தை அடிப்படையாகக் கொண்டு முதற்பொருளுடைய இயற்கைவிரியைப் பிரதிபலிப்பாகக் கொண்டு விளங்குகிறது. அவ்விளக்கமே தேவாரத்திற் காணப் பெறும் இறைவன்றிருவருட் குறிப்புச் சொற்கள் அந்த நாதமே எழுதாக்கிளவி அந்த எழுதாக்கிளவியின் பொருளே வேதம் இவ்வாருக இருப்பதாற்றுன் மற்ற தோத்திரப் பாக்களுக்கு பதவுரை சொல்லுவ போன்று தேவாரத்திற்கு பதவுரை சொல்லுவது தேவாரத்தின் பொருளாக வமையாதென்றும் அதனுல் பதவுரை சொல்லக் கூடாதென்றும் ஒரு நியதி அறிஞர் பரம்பரையில் இருந்து வருகிறது.

தேவாரம் தோத்திரப்பாவல்ல

தேவாரம் அல்லாத மற்ற பாக்களுக்கெல்லாம் பாவும் அதையறிந்து பாடக்கூடிய இசையும் என்ற பகுப்புக்கள் மாத்திரம் உண்டு தேவாரத்திற்கு அப்பாவை இசைப்பதற்குப் பண்ணும் அப்பண்ணில் எழும் ஒலிக்குப் பொருள் விளக்கம் தரக்கட்டளைத் திறங்களும் உண்டு. அக்கட்டளைத் திறத்திற்றுன் எழுதாக்கிளவி யாக நான்மறை தோன்றும்.

(வேதமும் வேதச் சாகையும் வெவ்வேறல்ல)

நான்மறையானது அநுபூதி சாதனத்திற்றேன்றும் தச வித நாதங்களின் வாயிலாகவுள்ள நான்கு இடங்களைக் கொண்டு நாலாகவும் அவ்வொலிக்கதிர்களைக் கொண்டு வேதச்சாகைகள் ஒவ்வொன்றிற்கும் இத்தனையென்றும் வகுக்கப் பெறுகிறது.

(வேதம் ஒரு புருஷாகிருதியாக உள்ளது)

தேவாரப்பாவும் அப்பாவிற்குச் சொல்லும் அதை இசைக்கப் பண்ணும் அப்பண்ணிற்குக் கட்டளைத் திறமும் அக்கட்டளைத் திறத்தில் எழுதாக்கிளவியாக நான்மறையும் தோன்றுவதுடம்பும் உடம்பிற்குக் கருவி கரணுதிகளும் அக்கருவி கரணுதிகளுக்கு ஆதியாக உயிர்க்கலேயும் அவ்வுயிர்க்கலேக்குச் சஞ்சாரமும் அதற்கு வாயில்களும் அதன் சஞ்சார விரியும் தோன்றுவன போன்று எழுதாக்கிளவி தோன்றுநிற்பதை அடங்கன்முறை திருச்சிற்றம்பல தேவாரப் பண்ணிசை தருகின்றது.

புருஷாகிருதிக் கூறு பாட்டியல்

தேவாரத்தில் உடம்பு அடங்கன்முறை அவ்வுடம்பில் உயிர்க்கலே நின்றிலங்கும் மேல்மூலம் கீழ் மூலம் இரண்டும் இரண்டு திருச்சிற்றம்பலம். இதற்கிடையிற்றேன்றும் ஞானநூபூதியின் நாதவொலி தேவாரம் அவ்வொலி நின்றிலங்கும் வாயில்கள் நான்கு. நான்கு வேதம். அதில் வெளியின் தன்மையைப் பெற்ற தொன்று வளியின் தன்மையைப் பெற்ற தொன்று தீயின் தன்மையைப் பெற்ற தொன்று நீரமைந்த நிலத்தின்றன்மையைப் பெற்ற தொன்று ஆக நான்கு.

நான் மறைப் பெயர்க்காரண விளக்கம்.

நான்மறைத் தொகுதியில் ஆகாயத்தின் இயற்கூறு கொண்ட ஒலியை ருக்கு என்று கூறப் பெறுகிறது ரு. என்ற எழுத்து தமிழில் ஐந்தைக் குறிக்கும் ஐந்தாவது பூதம் ஆகாயம் இக்கு. என்பது மேல் தொடர்பின்மையைக் குறிக்கும் இது பற்றியே ருக்கு என்ற பெயர் வழங்குகிறது இவ்வொலியை ஒலிக்க எழுத்து அசை நிரம்பிய சீருக்கு வெளிற் சீராகிய வெண்சீர் என்றும் அதற்குரிய வேதத்திற்கு தவளாகரம் என்றும் நம் தமிழில் காணக்கிடக்கிறது இதுவே ருக் வேதப் பெயாக் காரணம்.

இரண்டாம் வேதப் பெயர்க் காரணம்.

மேற்கூறிய வாறே வெளியினிடத்து இயக்கம் கொள்ளும் இயச் சீராகிய இயற்சீர் எசூர் வேதம் என்று வடமொழியிலும் நம்தமிழில் இயற்சீர் என்பதோடு தத்தவுரிய இயம் (தைத்ரீயம்) என்றும் சொல்லப் பெறும் வெளியில் இயக்கம் கொள்ளும் காற்றுகியதால் ஊன்றி இடைவிட்டு நடை கொள்ளாமல் தத்திச் செல்லும் இயற்கையுடையதாய் இருப்பதைக் குறிக்கும் சொல்லாகவே தத்தவுரியம் என்று பெயர் வந்தது இதுவே எசூர் வேதப்பெயர்க் காரணம்.

மூன்றும் வேதப் பெயர்க் காரணம்.

இவ்வாறே வெளியினிடத்து இயக்கங் கொள்ளும் வளியை யாதாரமாகக் கொண்டு தோன்றுந் தீயானது ஐம்பூதங்களுக்கும் நடுவாய் இருபாலும் சமம் நெடிதே நிலேபெறக் கொண்டு நிற்கும் இயல்புடைத்தாதலால் அத்தன்மையைக் கொண்டு விளங்கும் வலிமையுடைய சீருக்கு உரிய வேதத்தை சாம வேதமென்று வட மொழியிலும் நம் தமிழில் ஐம்புதங்களுக்குரியதாகிய இயற்கைப் பொலிவு டைய தன்மையைக் கொண்ட ஒருமைப் பாடுள்ள குறிப்புச் சொல்லாகிய பூ என்ற சொல்லேக் கொண்டு அதற்கு நடு நிலே கொண்டு விளங்கும் இயற்கையைக் குறிக்க ஊடு இயம் என்னும் பூவூடியம் என்று கூறப் பெறும். அதற்குரிய சீரும் வன்சீராகிய வஞ்சிச்சீர். இதுவே சாமவேதப் பெயர் காரணம்.

நான்காம் வேதப் பெயர்க் காரணம்

முறையே வெளிவளி அங்கியை ஆதாரமாகக் கொண்டு தோன்றும் நீரமைந்த நிலத்தின் இயற்கைத் தன்மையுடைத்தாயுள்ள வேதத்தை அதர்வம் என்று வடமொழியிற் சொல்லப்பெறும். அதரத்திற் தோன்றும் வகரமானது ஆக்கத்தையும் அழிவையும் குறிப்பிடும் இயற்கையுடைத் தாதலால் ஆக்கத்தையும் அழிவையுந்தரும் நீரமை நிலனுக்குரிய குறியீட்டுச் சொல்லாக அதரவம் அல்லது அதர்வணம் என்று சொல்லப் பெறுகிறது. அதையே தெளிதமிழில் வகரத்தின் குறிப்பைக் கொண்டு வாமம் என்று சொல்லப் பெறும். இதற்குரிய சீரும் வானின் தன்மையைப் பெற்ற வெண்சீருக்கு எதிர்மறையாகிய கலிச்சீர் ஆகாயம்

அருவம் அதற்கு எதிர்மறையாகிய உருவத்தைக் கொண்டது நீரமை நிலம் ஆனவாறு வெண்சீருக்கு எதிர்மறையாகக் கலிச் சீர் வந்தது. இதுவே அதர்வண வேதப் பெயர்க் காரணம்.

வேதப் பெயர்க்காரண மூலமும் இடுகுறிப் பெயரல்ல.

மேற் கூறியவற்றுள் இடுகுறிப் பெயராக வேதவுரிமைப் பாட்டியிற்கைச் செய்யுள்களுக்குப் பெயர் கூறவில்லை காரணம் உண்டு என்பதையுங் காட்டுகிறோம்.

வியன்சீர் இயல் விளக்கம் : ஆகாயம் ஒலித்தற்கிடமாகிய ஒரே தன்மைக் குணமுடையது விரிந்தது இவ்வியல்புடையது வெண்சீர். அந்த வெண்சீர் நாள் பிறப்பு காசு மலர் என்னும் தனிச் சொல்லைக் கொண்டது. ஆகாயம் விரிவைக் கொண்ட தன்மையுடையது போன்று ஓரசைச் சொல்லில் மட்டும் வெண்சீர் அடங்காமல் விரிந்த பூச்சீரையும் உடையது.

இயற்சீரின் இயல் விளக்கம் : ஆசிரியச்சீர் என்னும் இயற்சீரும் ஒலியும் பரிசமுமாகிய இரண்டு குணத்தையுடைய காற்றென்ன ஒரு தனிச் சொல்லை முற்படக் கொண்டு விரிந்து இரண்டாக நிற்கும் சிறப்பையுடையது மேலும் நெடிதே நடை கொள்ளல் சுழித்தல் மண்டலா காரமாகச் சுழல்தல் ஆயதன்மைகளைக் கொண்டது.

வஞ்சிச் சீரின் இயல் விளக்கம் : தீயானது வெளியையும் வளியையும் ஆதாரமாகக் கொண்டு ஓசை பரிசம் உருவம் என்னும் முக்குணங்களைக் கொண்டு விளங்கும் நடுநிலைப் பாடுடையதாயிருக்கும். இதற்குரிய பாவும் ஆகாயத் தன்மை வாய்ந்த வெண்சீரையும் காற்றின் தன்மை வாய்ந்த இயற்சீரையும் இடைகைக் கொண்டு ஒன்றியும் வன் சீராகிய மாச்சீராய்த் தனித்து உருப் பெற்றும் விளங்கும் அன்றியும் சம நிலை கொண்டு பூச்சீராகவும் பகுப்புற்று காணும் இயற்கை யுடையதாய் ஒரு சார்பு பற்றித் தளை கொள்ளாமல்தனித்து நடு நிலை கொள்வது வஞ்சிப்பா.

கலிச்சீரின் இயல்விளக்கம் : நீரமைந்த நிலம் வெளி வளி அங்கியை ஆதாரமாகக் கொண்டு முற் கூறிய பூதத் தன்மைக் குணங்களுடன் சுவையையும் கந்தத்தையும் பெற்று விளங்கும் இயல்புடையது இவ்வாறே சீரின் வைப்பு முறைத் தொடரில் நான்காவதாகவும் சுவையைத் தரும் நீரின் தன்மையுடைய கனிச் சீராகவும் மேலும் அதினின்று நீட்சி கொள்ளும் தன்மையுடைய நிலத்தினியல்பு பற்றிய நிழற் சீராகவும் ஆகாயத்தின் றன்மை வாய்ந்த வெண்பாவிற்கு எதிர்மறையாகிய தளை கொண்ட கலிச் சீராகவும் கலிப்பா தன்னியற் சீரும் தளை கொண்ட சீராகவும் அமையும்.

வேத மொழி தமிழ் மொழியே.

ஈண்டு கூறியவற்றுட் பூதவியல்பைப் பொருந்திச் சொல்லியலாக்கம் கொண்ட காரணப் பெயர் உடைய தென்பதை விளக்கினோம் ஆகவே பொறிபுலன்களின் தன்மைகளென்ன இச்சொல்லாக்க இயல் வேத மொழிகளுக்கு ஆதாரமாய் வியங்குகிற தென்பதை நோக்கும் போது இவ்வியற்கையைத் தனதாய்க் கொண்ட தமிழ் மொழியைத் தவிர வேறு எந்த மொழிக்கும் நான்மறையைச் சொல்லவியலா தென்பது தெளிவாகிறது.

பூதியந்தவிர்ந்த அநுபூதி யொலியே வேத ஒலி

மேற்கண்டவாறு கூறியவற்றைக் கொண்டு இந்த நால்வகைப் பாவே நான்கு வேதங்களென்று முடிவு செய்துவிட வேண்டாம் மேற் கூறியவாறு பொறியும் புலனும் போன்றதே நால்வகைப் பாவிற்குரிய சொல்லும் ஒலியும் ஆகிய சொல்லொலியைக் கடந்த ஞானநுபூதிச் சாதன வொலியே மறையொலியாகும் பொறி புலனிற் சஞ்சாரம் செய்து அலைவுறும் மனோவாயுப் பிராணகதியானது அலைவின்றியுட் செல்லச் சுழித்து எழுப்பும் ஒலியே நான்மறை யொலி அவ்வொலி உட் செல்லச் சுழித்து ஒலிக்கின்ற படியால் அதற்கு மறையென்று பெயர் வந்தது ஆகவே நான்மறையைச்சொல்லுதற்குரிய வாயில்களாகக் கொள்ளப் பெறுவது தான் மேற்கூறிய நால்வகைப்பா அதன் வாயிலாகத் தோன்றும் எழுதாக் கிளவியே நான்மறை.

உயிருணர்வுணர்வுக் காட்சியாகிய மறையையறியும் வழி

பொறிபுலன் பொருந்திய பூதிகாகாரமான இவ்வுடம்பைத் தானென் றிருப்பது வெளிற்றறிவு அது நீயல்ல என்று ஞானுபூதி தரப் பெற்றுச் சாதனம் செய்யுங்கால் பொறிபுலனுதிய ஐவகைகடந்த வியனுகிய கரணங்கள் என்னும் உயிர் உயிர்ப்புறு தொடர் நால்வகையைக் கொண்டு முன் கூறிய ஐந்துடன் ஒன்பதாக அருளுடம்பு கொண்டு விளங்கும் பூரியட்ட சரீரமாகக் காண்பது ஆகிய காரணத்தால் அதற்கு வியாகரணமென்னும் மேற்கணக்கு ஒன்பதை ஆதியாகக் கொண்டு அறிய வேண்டும்.

உயிர் வெளிப்படைக்காட்சிப் பொருளல்லாதது போன்றதே வேதமும்.

மேற் கூறியவாறு அறியாமல் வெளிப்படையாகக் காணும் தன்மையுடையதாக வொன்றிருந்தால் அது வேதமாக இருக்க முடியாது. எவ்வாறு ஐம்பூதப் பேருருத்திரட்சி மட்டும் நாமில்லாமல் வேறுயிருக் கின்றோமோ அவ்வாறே தான் என்று அறிக.

வேதப்பாடலுக்கும் வெறும் பாடலுக்கும் உள்ள விளக்கம்.

நடைமுறையிலுள்ள தோத்திரப் பாக்கள் அனைத்தும் ஐம்பூதப் பேருருத்திரட்சி மட்டுமே இது மேற் கூறியவாறு ஞான சாதன அடிப்படையில் விளங்குவதால் சொல்லையும் பொருளையும் கடந்து வியா கரணத்தின் வாயிலாக அதை உணர வேண்டும்.

கையொப்பமும் முகக் குறிப்பும் போன்றது சித்செயும் வியாகரணமும்

ஞானுநுபூதி நாத அருட்சரீரம் கொண்ட வேத புருடனுக்கு சிரமாக விளங்கும் சித்செய் என்னும் சூக்கத்தைக் கொண்டும் வேத புருடனின் கரமாகிய வியாகரணமென்னும் மேற்கணக்கைக் கொண்டும் வேத புருடனின் செயலையுணர வேண்டும். எவ்வாறு ஒருவன் அடையாளக் குறிப்பிற்கு சிரசும் செயற்பாட்டுக் குறிப்பிற்குக் கரமும் அவசியமாகிறதோ அவ்வாறு தேவாரத்திற்றேன்றும் வேதபுருடன் யெற்பாட்டைக் காண்பதற்கு அவனுடைய ஆறங்கங்களில் இவ்விரண்டும் முதன்மையுடையதாகும் இவ்வங்கங்கள் தேவாரத்திற் றேன்றும் வேதபுருக் கொண்ட சரீரத்தையுடைய புருடனுடையதாகவே யிருக்கின்றதே தவிர தனித்தனி நூற்களாக இல்லை என்பதைத் தமிழ் மறை நியதியொழுங்கினுல் உணரலாம்.

மறைவழங்கும் நியதியொழுங்கின் விளக்கம்.

சிவகீலையாகிய வேதத்தை சொல்லும் வரம்பு இதுவே தான் இதில் வெண்பா ஆசிரியப்பா வஞ்சிப்பா கலிப்பா என்பன சடப் பொருளாகிய ஐம்பூதத்தன்மை வாய்ந்தனவே யாதலால் இவைகள் தனித்த முறையில் மறை வழங்கும் பாவாகவமையாமல் ஐந்துங்கூடி யோருருக் கொண்ட சித்துருவாகச் சரீரம் உள்ளது போன்று மேற்கூறிய பாவின் இணைப்புத் திறத்தில் வேத நூற்பா தோன்றும்.

(பாவின் இணைப்புத் திறத்தின் விளக்கம்)

பாவின் இணைப்புத் திறம் என்பதே மேற் கணக்கு ஒன்பதென்னும் வியாகரணம் அதிற்பா வென்பது யாப்பிலக்கணப்படி சொல்லப்படும் பெயர் அப்பாவின் இணைப்பு என்பது எழுத்து அசை சீர்யாழ் என நான்காகும் அப்பாவிணைகின்றதே யாப்பு இணைந்த பின்னரும் மேலும் நால்வகையாக கொண்டு கட்டளைத்திறம் விளங்கும் இதுவே பாவின் இணைப்புத்திறம் என்றுணர்க.

(முக்கரண வொருமை கொண்ட இயலே)

இவ்வாருகத் தோன்றும் வேதநூற்பாவிற்கு ஒரு தனிப் பெருஞ் சிறப்புண்டு அவையாவன மனோவாக்குக்காயம் மூன்றும் ஒன்றுபடுவதே முக்கரணங்களும் தூய்மை பெறுமியல் அவ்வியலின்படி காயம் நமது திருமுறைப் பாவிற்றேன்றும் சொல் அச்சொல்லின் இசைவாக்கு அதிற்றேன்றும் கட்டளைத்திறம் மனம் இவைகள் யாவும் ஒன்றுபட்டு எவ்வகை வேறுபாடுமின்றி நிற்கும் இயலில் தூய்மை பெறும் விளக்கத்திற்கு எடுத்துக்காட்டு வருமாறு.

(முக்கரண வொருமை விளக்கம்)

முதலாவதாக தோடுடைய செவி என்று துவங்கும் பண் நட்ட பாடை அந்தப் பண்ணிற்குரியபாசித்செய் என்னும் நாதாந்தமாம் பண்ணிலக்கணச் சூக்கத்தின்படி ஆசிரிய வஞ்சி இயற்சீர் யாப்பு இதில் நூல்யாத்தமுதல்வர் கட்டளை இட்டருளிய பெயர் நட்ட பாடை. நட்ட பாடை என்பது கண்களிரண்டும் பொருள்நோக்கங் கொள்ளும் போது ஒன்முதல் போல இரண்டு கூடியொன்றுபடும் இயலைக் குறிக்கும் நாட்டம் படு பாவின் அடைவைக் கொண்டதே முதல்குறுகி நாட்டம் என்றுள்ளது. நட்டம் என்றும் பா அடைவு பாடை என்றும் ஆயிற்று இப்பாவில் எதுகைத் தொடர் நான்கும் விளச்சீராகி மாச்சீர் மோனை கொள்ள நிற்பதுடன் அமையாது மீண்டுங் காய்ச்சீர் ஒன்றும் தோன்ற நிற்கும் இதில் விளச்சீரும் காய்ச்சீரும் ஒரே பாவிற்கு உரியசீர் ஆனல் இரண்டாகி மாச்சீரில் ஒன்று படுகிறது. இது மேற்கூறிய படி கண்களிரண்டும் பொருள் நோக்கம் கொள்ளுங்கால் ஒன்றும் தன்மையைக் காட்டுகிறது இதிற்காயமாகிய சொல்லின்படி சொல்லிசையாகிய வாக்கு.

விளச்சீருக்கு விளரியும் காய்ச்சீருக்கு உழையும் ஆகிய இரண்டாய் மாச்சீருக்குரியதாரத்தில் ஒன்றுபடுவதாக அமைந்திருப்பதை நோக்குதல் காயமும் வாக்கும் ஒருமைப்பாடு பெற்றிருப்பதைக் காட்டுகிறது. மனம் காயத்தையும் வாக்கையும் போல வெளிப்படைத் தோற்றமாகக் காணும் இயலின் அமையாத போன்று எழுதாக் கிளவியாக நட்டபாடைப் பதிகங்கள் இந்நூல் முதல்வர் செய்தருளிய எட்டுக்கட்டளையாக நிற்கும்.

தேவாரப் பண்ணிசையில் எழுதாக்கிளவி தோன்றும் முறை.

எட்டுக் கட்டளையாய்த் தோன்றும் மனமானது காயம் வாக்கு ஆதியனவுடன ஒருமை கொள்ளும் இயலின் சொல்லும் சொல்லிசையு – மாகிய நாட்டம்படுமியல்புடைத்தாம் நட்டபாடையைக் கூடும் போது அது இரண்டும் இது எட்டும் ஆகவமைந்து எட்டும் இரண்டுமாகியஅகாரம் உகாரம் என்னும் குறிப்பைத் தந்து ஒன்றுபடுத்தும் இயலில் மகாரத்தில் அமைவதால் ஓங்காரமாக வேதச்சுருதியாய் எழுதாக் கிளவியில் பிரணவம் தோன்றும் (இதிற் காயமும் வாக்கும் நாட்டம் படுமியல்புடைத்தான போன்று மனமும் அகார உகாரமென்னும் இரண்டு ஒன்று கூடி காயம் வாக்கு மனம் ஒருமித்து நிற்கும் இயல்பைக் காட்டுவது ஆழ்ந்து நோக்கத் தக்கது.)

இராகப் பெயரும் காரணப் பெயரே காரண இலக்கியமும், தேவாரமே.

மேற்கண்டவற்றோடு பண்ணிசைக்குரிய ராகம் தோன்றும் வரம்பும் இதற்குரிய கட்டளைத் திறத்தினின்று தோன்றுவதை இதற்குரிய ராகம் நாட்டை எனவமைவது காட்டுகிறது. நாட்டம் என்பதுகண் அதன் இயைபு கொண்டதே நாட்டை அதில் எட்டுக்கட்டளைத் திறங்களுக்கும் எட்டுவகை நாட்டை உண்டு. இந்த தோடுடைய என்று தொடங்கும் பதிகத்திற்கு உரிய கட்டளைத்திறம் நைவளம் நேய நயவளமே நைவளம் என்முயிற்று. அந்தப் பதிகம் முழுவதிலும் ஒருமைப்பாடு பெற்றுக் காணப்படும் இயல் அந்த நைவளமேயாகும் நேயநயவளம் கொண்ட தன்மையால் புகழ்ந்து பிரதாபங் கூறப்படும் இயல்பு பற்றி இதற்குப் பிரதாப நாட்டை யென்று காரணப் பெயர் அமைகிறது. இவ்வாறே திருமுறையிலுள்ள பண்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஒவ்வொரு பண்ணிற்கும் காரணப் பெயரும் அதிற்றேன்றும் கட்டளைத்திறங்களினின்று இராகமும் தோன்றுவதைக் காணலாம்.

மறைப் பொருள் விளக்கத் தொகுதி.

இதுவரை சொல்லி வந்த தொகுப்பை ஒருங்கிணைத்து நோக்கில் வேதம் என்ற சொல்லிற்குரிய விளக்கமும் அது நால்வகைப் பாவின் அடிப்படையிலேயே யமைந்திருப்பதும் அவ்வடிப்படைக் குறிப்புச் சொல்லே ருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்று வடமொழியிலும் தவளாகரம் தத்தவுரியம் பூவுடியம் வாமம் எனத் தமிழ் மொழியிலும் தோன்றியவாறும் நால்வகைப் பாக்களின் இலக்கணவரம்பு தமிழுக்கே உரியனவாக இருப்பதும் இந்த இலக்கண வரம்பில்லாத எந்த மொழியும் மறையைச் சொல்லுவதற்கு முடியாதென்ற விவரமும் இந்த நால் வகைப் பாவையும் புறப்புறமாக நீக்கிவிட்டு புறத்தைச் சார்ந்து வேத நூற்பா அமைக்கப் பெற்றிருக்கின்ற விவரமும் அதையும் நீக்கி அகப்புறத்தைச் சார்ந்து கட்டளைத்திறம் வகுக்கப் பெற்றிருக்கின்ற விவரமும் அதையும் நீக்கி வேதம் முடிந்த இடத்தில் புறப்புறம் அகப்புறம் நீங்கிய அகத்தில் எழுதாக்கிளவியாகிய மறை தோன்றும் விவரமும் கூறினேம் அதில் இந்த நட்டபாடைப்பண்ணிற் றேன்றிய எழுதாக்கிளவி பிரணவம்.

மறைக்கு முதலிற்றேன்றும் பிரணவம் கூறும் மறைமொழி

மறையோதுகின்ற முறையில் முதற்றுவக்கமாக ஓங்காரத்தை யுச்சரிக்கும் வரம்பு நம் தமிழ் மறையில் நட்டபாடைப்பண்ணிற்குரிய இசையில் அதில் வரும்எட்டுக்கட்டளைகளையும் ஓதுவதேயாம் என்பது மேற் கூறியவிவரங்களால் தெளியத் தக்கதொன்று.

மறை மொழி ஓங்காரத் தோற்ற விரி

மேற் கூறியவாறு எழுதாக்கிளவியில் மொழியாமல் ஓம் என்று வாக்கினற் சொல்லி மறையோதத் துவங்குவது அன்று பிரமன் மறையோதத்துவங்கியது போன்றதேயாம். வேதப் பொருட்டோற்றம் இந்த ஓங்காரம் தோன்றுவதோடு நின்றுவிடவில்லை அநுபூதி சாதன நிகழ்ச்சியில் தத்துவரூபம் தத்துவ சுத்தி தத்துவ தரிசனம் ஆன்மரூபம் ஆன்மசுத்திஆன்ம தரிசனம் சிவரூபம் சிவதரிசனம் சிவயோகம் சிவபோகம் எனப் பதிப்பொருட்டொகை தோன்றுவ போன்று இதிலும் பத்து வகைப் பொருட் பகுதி தோன்றும்.

திருமுறைப் பெயர்க்காரணம்.

அப்படித் தோன்றுவதில் கூடி இலயங் கொள்ளும் குடிலை என்னும் பிரணவத்தினின்று சகல கலைகளும் தோன்றும் அந்தக்கலை களனைத்தையும் முறைப்படுத்தி வரம்பு செய்து நிறைவு படுத்தியதே திருமுறையாகும்.

மறைவகுத்தற்குரியவர் தகுதி விளக்கம்

மேற்கூறியவாறுன விளக்கங்களை முறைப்படியுணர்ந்து கொள்ள அதற்குரியமுறை யோடு பயிலல் வேண்டும். இந்த இலக்கணவரம்புணர்ந்த புலமையாளர் அப்புலமையின் காரணமாக மட்டும் வேத நூல்செய்ய முடியாது. அதற்குரிய தகுதி பூதத்திற்கு ஆதியாயுள்ள நாதத்தை வசப்படுத்தி அதனல் பூத நாயகனையும் பூதங்களையும் செயல்படச் செய்யும் தன்மை வாய்ந்த வொருவருக் கேயாம் அவ்வாறுன தன்மைகளை தன்னுற்றல் கொண்டு செய்யாமல் வேதப்பாசுரங்களைக் கொண்டு செய்து காட்டியவர்கள் செய்த வேத நூற்பாடல்கள் தான் இப்பொழுது நாம் அடங்கன்முறை என்று கொண்டாடப் பெறும் திருமுறைத் தொகுதி.

திருஞானசம்பந்தர் இயற்றிய தேவாரமாகிய திருமுறைபெருநூலிற்கு இலக்கண விளக்கம், பொருள் விளக்கம் எழுதும் பொழுது பஞ்சரத்திர வைகாநேய ஆகமமறைநுதலி புகுதலில் முதலாவது நட்டபாடைபண்ணின் எழுதாக்கிளவி தூவிதசித்தாந்த சுருதி (அஉம (ஓம்)) இரண்டாவது தக்கராகப் பண்ணின் எழுதாக்கிளவி இருக்கு வேதம் என்னும் தவளாகரச் சுருதி (ந) மூன்றுவது பழந்தக்கராகப் பண்ணின் எழுதாக்கிளவி இயற்சீர்வேதம் என்னும் தத்தவுரியச் சுருதி (ம), நான்காவது தக்கேசிப் பண்ணின் எழுதாக் கிளவி சாமவேதம் பூவூடியச் சுருதி (சி) ஐந்தாவது குறிஞ்சிப்பண்ணின் எழுதாக்கிளவி அதர்வணவேதம் என்னும் வாமநூற்சுருதி (வ) ஆறுவது வியாழக்குறிஞ்சிப் பண்ணின் எழுதாக்கிளவி வேதாந்தம் என்னும் அறவண்ணச் சுருதி (ய) எழாவது மேகராகக் குறிஞ்சிப் பண்ணின் எழுதாக்கிளவி அத்துவித சித்தாந்தம் என்னும் இறைவண்ண நிறைவென்னியற்சுருதி (உ அம (ஓம்)) ஆக வேதம் நான்கினும் மெய்பொருளாகிய நாதன் நாமம் ஓம் நமசிவய ஓம். இந்நூல் வெளிவரும் காலம் கலியின் கொடுமை தீரும் தமிழின் பொற்காலம் மலர்ந்து மணம் பெற்று இவ்விரிவுலகம் உய்யும்.

இந்நூல் .....

நாராயணாய நம
சீராமராம அரி
மாராமராம ரம
தாராயராம யண

என்ற பாயிரத்துடன் இந்நூல் தொடங்குகிறது.

இந்த பாயிரம் நான்கு வரிகளால் ஆனது. ஒரு வரியில் இரண்டு சொற்கள், ஏழு எழுத்துக்கள் ஆக எட்டுச் சொற்கள் இருபத்தெட்டு எழுத்துக்களால் அமையப் பெற்றுள்ளது. பாவுக்கு ஆயிரம், பாயிரம் என்ற நெறியில் இந்நூல் 8000 சொற்களாலும் 28,000 எழுத்துகளாலும் கோர்க்கப்பெற்றுள்ளது.

இலக்கில் இயம்(ஒலி) காண்பது இலக்கியம். உடல் உயிரது கூடி எழும் நாதம் எந்தஎந்த இலக்கில் தொடும்பொழுது என்னென்ன உணர்வு ஏற்படும் என்பதை விளக்குவது இராமாயண இலக்கியம்.

உடல்உயிரது கூடி இயங்கும் நெறியை நமக்கு மிகவும் தெரிந்த இராமாயணக் கதையுடன் ஒப்பிட்டு ஆசிரியர் விளக்குகிறார்.

இராமாயண நூலும், உடல்உயிரது இயக்கமும் நிறைவுறும் இடம் ஞானமார்க்கமே என்பதே இந்நூலின் சாரம். நாத, விந்துகலையின் மூலம் மோன நிலையான வீடுபேற்றை அடைய ஆக்கியது இந்நூல்.